# நந்தி வர்மன்

சலகை ப.கண்ணன்



தென்றல் வெளியீடு: 23.

# நந்திவர்மன்

தமிழக வரலாற்று நாடகம்.

ஆசிரியர்:

சலகை: ப. கண்ணனார்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம். ~ சேலம் மாவட்டம்.

முதற்பதிப்பு:

வள்ளுவராண்டு 1999. நவம்பர் 1968.

எல்லாவுரிமைகளும் ஆசிரியருக்கே.

வெளியிட்டோர்:

தென்றல் நூற்பதிப்புக் கழகம்.

அச்சிட்டோர்:

செந்தமிழ் அச்சகம்,

பெரிய கடைவீதி,

சலகண்டபுரம். * சேலம் மாவட்டம்.

விலை ரூ. 3-00

## ஆசிரியரின் பிற நாடக நூல்கள்:

பகைமை வென்றான்
பாண்டிய மகுடம்
தமிழ் வாழத் தலைகொடுத்தான்
மின்னொளி
கன்னியின் சபதம்
வீரவாலி
புரட்சிப் பாடகன்
மானமறவன்

---

*உரிமைக்காக*

தமிழிலே மேன்மேலும் நல்ல நாடகங்கள் தோன்ற வேண்டுமெனில், நாடகம் எழுதும் ஆசிரியர்களின் உரிமை காக்கப்படல் வேண்டும். ஒரு ஆசிரியரின் கதையையோ, தலைப்பையோ, காட்சியையோ, அமைப்பையோ மற்றவர் களைமாற்று செய்வதும், சொந்தமாக்க முனைவதும் சட்டப்படி குற்றம்; நீதிப்படியும் தவறு. இவை நிகழாமலிருக்கவும், ஆசிரியனுக்குச் செய்நன்றி காட்டவும், என்னுடைய நாடகங்களை நடத்த விரும்புவோர் (ராயல்டி) ஆக்கவுரிமைத் தொகை ரூபாய் 10 அனுப்பிவைத்து முறைப்படி முன் அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்வகையில் எனக்குத் துணை நிற்குமாறு கலைத்துறை நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சலகண்டபுரம்
8-11-1968

ப. கண்ணன்,
ஆசிரியர்.

## பதிப்புரை:

நாடகம் பார்ப்பது நல்லதொரு பொழுது போக்கு. உணர்வுக்குத் தெம்பும் களிப்பும் தருகின்ற கலை விருந்து. புதிய பொழுது போக்குகள் எத்துணை வந்தாலும், மக்கள் மன்றத்திலே அவை பெரும் புகழ் பெற்றாலும், நாடகத்திற்குரிய நன்மதிப்பு மங்கவில்லை; மறையவில்லை.

பழைமையில் புதுமை சேர்த்தலும், புதுமையில் பழைமை காட்டலும் வளருகின்ற நாடகத் துறையின் தனிப்பண்பு. அந்தப் பண்புக்குரிய பலவகைச் சாதனங்களிலே நாடகக்கதை மையமானது. அடிமரமாகவும், ஆணிவேராகவும் நின்று அணிசெய்வது.

"நந்திவர்மன்" சிறந்த தமிழ்க்கதை நாடகம். புதுமையில் பழைமை காட்டும் வரலாற்று நாடகம். இந்நாடகம் **தேவி நாடக சபையினரால்** சேலம் மாவட்டம் ஆத்தூரில் 1957-ஆம் ஆண்டில், இன்றைய பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு, **கலைஞர், மு. கருணாநிதி** அவர்கள் தலைமையில் அரங்கேற்றப்பட்டுத் தொடர்ந்து அவர்களால் நடத்தப்பட்டு வருவது.

"நந்திவர்மன்" நாடகத்தை இன்றைய தமிழக முதலமைச்சர், பகுத்தறிவுக் கலைமுறையின் தலைவர் மாண்புமிகு, **பேரறிஞர் அண்ணா**, தமிழ்ப்பேரறிஞர் **டாக்டர், மா. இராசமாணிக்கனார்**, தவத்துறைப் பெருந் தமிழா **குன்றக்குடி அடிகளார்** ஆகியோர் தலைமை தாங்கிப் பாராட்டியுள்ளனர்.

இதனைப் புத்தக உருவில் பார்க்கவும், படிக்கவும், நடத்தவும் விரும்பிய கழகத்தோழர்கள், கலைத்துறை நண்பர்கள் ஏராளமானவர் உண்டு. அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் முயற்சி தடைப்பட்டும் தலைக்கப்பட்டும்வந்து, பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நிறைவேறுகிறது. கலையார்வமும், கருத்தார்வமும் மிக்க தமிழ்ப் பெருமக்கள் **நந்திவர்மனை** நன்கு வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை.

நாடகத்தின் வாயிலாக நல்ல கருத்துக்களை வளர்க்கலாம்; நல்ல பண்புகளையும், சிந்தனைகளையும் ஊக்கலாம்; தற்கால நிலைமைகளை விளக்கலாம்; முற்காலச் சிறப்புகளையும் காட்டலாம். நாடகத்துறைவல்லோர் எவரும் இதனை மறுப்பதில்லை. எனினும் கருத்துக் கலையாக்கத்தைப் போற்றி வளர்ப்பதில் ஏனோ தயக்கம் காட்டவே செய்கின்றனர்.

வைதிகக் கருத்தினரை எளிதாகப் பகுத்தறிவு நெறிப்படுத்த முடியாதெனினும், அவர்களின் சிந்தனையைச் சிறிதேனும் இந்த "நந்திவர்மன்" நாடகம் தூண்டிவிடும் என்பது என் நம்பிக்கை.

பல்லவமன்னர்கள் பரம்பரையாக வைதிக நெறியைச் சார்ந்தவர்கள். வடமொழிப்பற்று மிகுந்தவர்கள். எனினும் "மூன்றும் நந்திவர்மன்" அவர்களில் மாறுபட்டவன், தமிழ் மண், அவனை நல்ல தமிழ்ச்சுவைஞனாக மாற்றியிருந்தது.

"நந்திக் கலம்பக"மும், நந்திவர்மனின் பைந்தமிழ்ப் பற்றும் என் மனதைக் கவர்ந்தன. நந்திவர்மனின் மரணம் பற்றிய கதையும், அதனில் புலவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் என்னை மருளவைத்தன. எனினும் பகுத்தறிந்த முடிவின் மீது மொழிப்பற்றும் இலக்கியச்சுவையும் பொலிவுற "நந்திவர்மன்" வானொலி நாடகத்தை வரைந்து முடித்தேன். 26—7—1954-ல் திருச்சி வானொலியில் நாடகம் நடைபெற்றது.

கலம்பகத்தில் இருந்த கதைக்கருவை எடுத்து வொலாற்று ஆய்வின் வண்ணக்கலவையோடு வடித்தெடுத்த புதல் கதையும்-நாடகமும "நந்திவர்ம"னே! எனவே கதை முடிவு பற்றிய ஐயம எனக்கு இருந்தது.

எனது ஆசிரியர் புலவரேறு. அ. வரதநஞ்சையனார் அவர்கள் உடனிருக்க வானொலி நாடகம் கேட்கின்ற நல்வாய்ப்பு கிடைத்தது. நாடகத்தை நன்கு சுவைத்த புலவரேறு அவர்கள் மிகுந்த உணர்ச்சியோடு, "சிறந்த கதையமைப்பு, நல்ல பைந்தமிழ்

உரைநடை, பொருத்தமான முடிவு'' என்று கூறினார்கள். பெருமூச்சு விட்டேன். புலவர் உலகமே கதை முடிவை ஒப்புக் கொண்டதுபோலன்றோ?

வானொலி நாடகம் கேட்ட முத்தமிழ்க்கலா வித்வரத்தினம். திரு. தி. க. சண்முகம் அவர்கள் வரைந்த பாராட்டுமடல், வானொலி நாடகத்தை மேடை நாடகமாக்கத் தூண்டியது. வரைந்து முடித்தேன். திருச்சி கோட்டை இரயில்வே இன்ஸ்டிடியூட் கலைமன்றத்தார் 26—9—1954-ல் இதனை மேடையேற்றினர். தலைமை தாங்கிய திருசசி ஜமால் மகம்மது கல்லூரியின் அந்நாள் விரிவுரையாளர், திரு. மு. சிவகுருநாதன் எம். ஏ; அவர்களின் பாராட்டுரை எனக்கு மேலும் ஊக்கமளித்தது.

நான் நடத்திய ''பகுத்தறிவு'' இதழில் ''நந்திவர்ம''னை தொடர்ந்து வெளியிட்டேன். அதனை வைத்தே பலவூர் நண்பர்கள் நாடகம் நடத்தினர். தேவி நாடக சபாவின் தலைவர் திரு. கே. என். இரத்தினம் அவர்கள் சேலம் ஆத்தூரில் 28—9—1957-ல் தொழில்முறையில் நந்திவர்மனை அரங்கேற்றினார். தலைமைதாங்கிப் பாராட்டுரை வழங்கினார் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

நந்திவர்மனைப் பல துறை வல்லுனர் பார்த்துள்ளனர். சில பிரச்சினைகளையும் எழுப்பியுள்ளனர். கருத்துக் கலைமுறையின் தனித்தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களுடையவும், தமிழறிஞர் டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்களுடையவும் பாராட்டுக்கருத்துரைகள் மறக்கமுடியாதவை.

''நந்திவர்மன்'' நாடகத்தால் வரலாற்றுக்கால நிலை விளக்கமுறுவதோடு, மொழிப்பற்றும்; இலக்கியச் சுவையும் மதிப்புப் பெறுகின்றன. நாடகம் எனக்குப் பொருள் தரவில்லையெனினும், புகழ் தருகின்றது. நடத்திவரும் அண்ணன் கே. என். இரத்தினம் அவர்களுக்கும், நாடகத் துறையில் எனக்கு ஊக்கம் தருகின்ற என் தலைவர்களுக்கும், புலவர்களுக்கும், சுவைஞர்களுக்கும் பணிவன்போடு நன்றி கூறுகின்றேன். வணக்கம்.

சலகை }
8-11-68 }

ப. கண்ணன்.

## "நந்திவர்மன்" நாடகத்திற்கு வரலாற்றுச் சான்றுகள் வழங்கியவை.

### வரையுமுன்.

டாக்டர், மா. இராசமாணிக்கனூர் அவர்களின்
"பல்லவர் வரலாறு"

திரு. டி. வி. சதாசிவப்பண்டாரத்தார் அவர்களின்
"பாண்டியர் வரலாறு"

சேக்கிழாரின் "பெரிய புராணம்"

மற்றும் சில ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

### வரைந்தபின்.

பன்மொழிப்புலவர்,
கா. அப்பாத்துரையார் அவர்களின்
"தென்னாட்டுப் போர்க்களங்கள்"

தமிழறிஞர்,
மயிலை, சீனி, வேங்கடசாமி அவர்களின்
"மூன்றும் நந்திவர்மன்"

மற்றும் சில ஆராய்ச்சிக் கட்டுரைகள், எடுத்த முடிபுக்கு ஒப்புதல் அளித்தன.

# நாடக பாத்திரங்கள்.

★★ ★ ★★

| | | |
|---|---|---|
| நந்திவர்மன் | — | பல்லவ மாமன்னன் |
| சந்திரவர்மன் | — | இளவரசன் |
| விக்கிரமகேசரி | — | சேனாதிபதி |
| சீலாதித்தர் | — | அமைச்சர் |
| பச்சை | — | புலவர் மகன் |
| மைத்ரேயன் | — | இராசதந்திரி |
| சக்திமுனையர் | — | காபாலிக சைவர் |
| பெருந்தேவனார் | — | தமிழ்ப்புலவர் |
| நிருபதுங்கன் | — | சிறுவன் |
| சங்காதேவி | — | பட்டத்தரசியார் |
| வித்தியாவதி | — | கணிகை |
| முல்லை | — | தோழி |

மற்றும்

பங்கயன், அமைச்சன், சீனர்கள், காவலர்கள், வீரன், கட்டியக்காரன், கிழவி, இசைப்புலவர், நண்பர், குடிமக்கள்.

காலம்: கி. பி. 847—872.

இடம்: காஞ்சிபுரம், குருக்கோட்டை.

# நந்திவர்மன்

## காட்சி 1.

இடம்: அரண்மனை கலைக்கூடம்.

காலம்: முற்பகல்.

[சிற்பி ஒருவன் பல்லவர் ஆட்சிப் பெருமை குறித்து உற்சாகமாகப் பாடியவண்ணம், நடனமாதின் சிலை யொன்று செதுக்குகிறான்.

மாமன்னன் நந்திவர்மனும், மகாராணி சங்கா தேவியும் வருகின்றனர். பார்த்து மகிழ்ந்து நிற்கின்றனர்.]

சங்கா :- (மகிழ்ந்து) வாழ்க நாட்டியக் கலை! வளர்க சிற்பக் கலை! நாட்டியமும், சிற்பமும் காத்து நல்லரசு நடாத்தும் பல்லவ மன்னர் வாழ்க!

சிற்பி :- (பார்த்து வியந்து) ஆ! மன்னர் பெருமான்! வருக! வருக! மகாராணியார் வருக! வருக! வணக்கம், வணக்கம்!

நந்தி :- சிற்பியாரே! முடிந்தனவா நடனச்சிலையின் வேலைகள்?

சிற்பி :- முடியுந் தருவாயில் இருக்கிறது! மாமன்ன! வரும் மதியத்திற்குள், முடித்து விடுவேன்!

நந்தி :- நன்று, சங்கா! நீ பார்த்தனையா, இந்த நாட்டியச் சிற்பத்தை?

சங்கா :- (சிலையைப் பார்த்த வண்ணம்) பார்ப்பது மட்டுமா? சிற்பத்தின் வனப்பிலே தோய்ந்து மகிழ்ந்து இரசித்துக் கொண்டிருக்கிறேனே! ஆஃகா! அழகு! அழகு!

நந்தி :- சங்கா தேவி! நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த எங்கள் மூதாதை மகேந்திர வர்மரைப் பற்றி நீ யறிவாய்! அவர் அமைத்த அழகு மணிமண்டபங்கள்; குடைந்தெடுத்த கூடங்கள்! குகைக் கோயில்கள் ஏராளம்! ஏராளம்! அவற்றிலே திகழும் அற்புதமான சிற்பங்களும், ஓவியங்களும் வண்ணப் பொலிவு காட்டி இன்னும் நமது கண்ணேயும், கருத்தை தையும் கவருகின்றன! சித்தன்ன வாசல் குகைக் கோயிலின் நடன காவியம் ஒன்றினை சிறந்ததொரு கலைச் சிற்பமாக்கி எனது பெயரை மறையாது நிலைக்கச் செய்ய விரும்பினேன், சமைத்துத்தர ஒப்பினார் இந்தச் சிற்பி!

சங்கா :- (மகிழ்ந்து) தூய்மையான கலைப்பணி! மேன்மையான இலட்சியம்! கண்ணாளா! அருமையான படைப்பு இது. உயிர்ப்பண்பு நிறைந்தது! நாட்டியத்தின் நளினமான மெய்ப்பாடுகள் உள்ளத்தை நெகிழ வைக்கின்றன! பாவ பூர்வமான இதன் அமைப்பு, ஆட்டத்தைக் கண்கொண்டு பார்ப்பது போலவும், தாளம், மேளம், சதங்கையொளிகளைச் செவிகொண்டு கேட்பது போலவும் பிரம்மையை உண்டாக்குகிறது!

சிற்பி :- தேவி! லதாவிரிசிக நடனம் புரியும் இந்த லாவண்ய சுந்தரியை, சித்தன்னவாசலில் படியெடுத்து வந்த சித்திரத்தைப் பார்த்து அப்படியே ஆக்கினேன் அப்பழுக்கில்லாமல்! அப்பழுக்கில்லாமல்!

நந்தி :- சங்கா ! இந்தப் புதிய சிற்பி, சிறந்த சைத்ரிகனும்கூட ! மகாமேதை !

சங்கா :- ஆனல், யானைக்கும் அடி சருக்கும் என்பார்கள். சிற்பத்திலே சிறிய குறையொன்று இருக்கின்றது !

சிற்பி :- (தற்பெருமையோடு) நான் செய்த சிற்பத்திலா ? குறையா ? இந்த யானைக்கா அடி சருக்கி விட்டது ? இருக்கவே முடியாது ! இருக்கவே முடியாது ?

சங்கா :- இருக்கிறது சிற்பியாரே ! லதாவிரிசிக நாட்டியத்திற்குரிய அபிநயத்தில், கடாட்ச முத்திரை முறைப்படி அமையவில்லை !

சிற்பி :- (செருக்கோடு சிரித்து) முறைப்படி !..... மகாராணியார், நாட்டியம் கற்றுத் தேர்ந்த கலாசாகரம் போல் விமர்சிக்கிருர்களே ! (சிரிப்பு)

நந்தி :- (சிரித்து) பாவம் ! சங்கா ! கற்றறிந்த உன் கலா ஞானத்திற்குக் கடுமையான சோதனை வந்து விட்டது! பார்த்துக்கொள்! ஆமாம். லதாவிரிசிக நடனத்திற்குரிய விரல்களின் கடாட்ச முத்திரை எப்படி இருக்க வேண்டுமென்கிருய் ? காட்டேன் பார்ப்போம் !

சிற்பி :- (சிரித்து) எப்படிக் காட்ட முடியும் பிரபு ? கலையைப் பற்றி எவர்க்கும் வாயால் பேசுவது எளிது ! செயலில்தானே முடியாது ! முடியாது !

நந்தி :- அப்படிப் பொழியும் அறிவுரையை! சங்கா! சரியான போடு போட்டுவிட்டார் சிற்பியார் ! எங்கே பார்க்கிறேன் உன் கலா வல்லமையை !

**சங்கா :-** (சிரித்து) நாதா ! உங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது ! இல்லையா ? இப்பொழுது நான் அபிநயிக்க வேண்டும் என்கிறீர்கள் ! அவ்வளவுதானே? இதோ !........

[ஜதி மிதித்து அசைந்தாடி, லதா விரிசிக முத்திரையைப் பிடித்துக் காட்டுகிறாள்.]

**நந்தி :-** (ஆசையோடு) கங்கா ! அப்படியே அந்த நடனம் முழுவதையுமே ஆடிவிடேன் ! நாட்டியத்தைப் பற்றி விமர்சிக்க உனக்குத் தகுதி உண்டா இல்லையா என்பதையும் இந்தச் சிற்பியும் கண்டுகொள்ள வேண்டாமோ ?

[லதாவிரிசிக நடனத்தை ஆழகோடு ஆடிக்காட்டுகிறாள். மகாராணியின் ஆடும் திறமை கண்டு சிற்பி திகைக்கிறான். தன் தவறை உணர்ந்து கலங்குகிறான். கைகளைப் பிசைகிறான். நாட்டியம் முடிகிறது.]

**சிற்பி :-** (நடுக்கத்தோடு) மகாராணி ! நாட்டியக் கலாமேதை; லலித கலைகளைப் பயின்று தேர்ந்த சகல கலாவல்லி நீங்கள் ! கலைத்தெய்வமான தங்களைப்பற்றிப் புரிந்துகொள்ளாமல், நான் செய்த பிழையை—நான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும் ! மன்னிக்க வேண்டும் !

[சங்கா தேவியின் காலில் விழுகிறான் சிற்பி.]

**நந்தி :-** ஆணைக்கு அடிசறுக்கினால், இந்த அவல நிலைதான் வருமோ? இப்படித்தான் விழுமோ? (சிரித்து)

இந்த கலைஞர்களின் போக்கே அலாதிதான்! எழுந் திரும் சிற்பியாரே! எழுந்திரும்! எனக்கு வெட்கமாக இருக்கிறது!

[எழுந்து நடுங்கி நிற்கிறான் சிற்பி.]

**சங்கா :-** அஞ்சாதீர் சிற்பியாரே! நீர் அப்படி யொன்றும் பெருங் குற்றம் புரிந்திடவில்லை. கலைஞரிட முள்ள கலைக்கருவம்தான் உம்மையும் தலை இறங்க வைத் தது. சித்தன்ன வாசல் குகைக் கோயில் சித்திரத்தைப் படியெடுத்து வைத்தீரே; அது எங்கே?

**சிற்பி :-** இதோ இருக்கிறது தேவி.

[சுருட்டி வைத்திருந்த சித்திரப் படத்தைக் கொண்டு வந்து கொடுக் கிறான். வாங்கிப் பிரித்துப் பார்த்து]

**சங்கா :-** இதோ பாரும்; இடக்கை யானைக் கை நிலையிலும், வலக்கையின் உள்ளங்கை சதுர நிலையிலும், பெருவிரல் நுனியும், ஆள்காட்டி விரல் நுனியும் கூடி இருக்கின்றது! கடாட்ச முத்திரையின் இந்த விரற் கூடல், உமது சிற்பத்தில் இல்லை! இதுதான் நான் செப்பிய குறை.

**சிற்பி :-** (சித்திரத்தை வாங்கிப் பார்த்து) தேவி! தங்கள் மதி நுட்பத்தை, மகத்தான கலையறிவை நான் எப்படிப் புகழ்வேன்! என்ன சொல்லிப் போற்றுவேன்!

**சங்கா :-** என்னைப் போற்றுவது இருக்கட்டும்; உமது சிற்பக்கலைப் படைப்புகள் மூலம், நாட்டியக் கலையை நன்கு போற்றும், நாட்டியக் கலை மகத்தான

மனிதப் பிறவியே வேண்டாமென வெறுத்த ஞானிகளும் பாடுகின்றனர் இப்படி. "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்", எனத்தொடங்கி "இனித்தமுடை எடுத்த பொற்பாதமும் காணப் பெற்ருல் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே"!

நந்தி :- இது நாவுக்கரசர் நல்வாக்கு அன்ருே ?

சங்கா :- ஆமாம்; இந்த அருள் வாக்கு காட்டுகின்றது, நாட்டியக் கலையின் செல்வாக்கை.

சிற்பி :- மாமன்ன! கருவம் என் கண்களை மறைத்தது! என் பிழை பொறுத்தருள வேண்டும்! பொறுத்தருள வேண்டும்!!

நந்தி :- மன்னித்து விட்டாரே மகாராணியார்! கவலைப்படாதீர்! கண்ணும் கருத்துமாக கலைப்பணியை தொடரும்! காவியமும் ஓவியமும், சிற்பமும் சிருங்காரமும் வளர்வதற்கு என் வாழ்வையே அர்ப்பணிக்கத் தயங்காதவன் நான். எனது விருப்பத்தைச் சுணங்காது நிறைவேற்றும். எதனுலும் குலையாத அமர சிற்பமாக ஆக்கும் இதனை.

சிற்பி :- கட்டளை, கட்டளை மகாராஜா!

[வணங்குகிருன், மன்னனும், மகாராணியும் கைகோர்த்த வண்ணம் செல்லுகின்றனர்.]

## காட்சி 2.

இடம் : குலுக்கோட்டை அரண்மனை.

காலம் : முற்பகல்.

[மன்னன், பங்கையனும், அமைச்சரும் இருக்கின்றனர். காரியம் வெற்றியா என்பதைத் தெரிந்துகொள்ள இராமாயணச் சுவடியில் நூலிட்டுப் பார்க்கின்றனர்.

மன்னன் நூலைப் போடுகின்றான், மந்திரியார் பிரித்துப் பார்க்கிறார். "அனுமார் தூதுப்படலம் வருகின்றது.)

அமை :- (மகிழ்ந்து) சபாஷ்! சபாஷ்! வந்தது அனுமார் தூது செல்லும் படலம்! ஆட்சேபணை இல்லை! கெலிப்பு நமக்குத்தான்.

பங்கை :- அமைச்சரே! இராமாயணப் போரில் அனுமார் தூது அவ்வளவு முக்கியமானதென்று கருதுகின்றீர்?

அமை :- அனுமார் போகாமலும், சீதையைக் காணாமலும், இலங்கையை எரிக்காமலும் விட்டிருந்தால் இராமாயணமே வேறு மாதிரியாக முடிந்திருக்குமே மகாராஜா! அனுமார் சர்வ கலைகளும் கற்றுத் தேர்ந்த மகா ராஜதந்திரியாயிற்றே! நமது மைத்ரேயரும்.....

(மைத்ரேயர், சேனபதி, காவலர் வருகின்றனர்.)

**பங்கை :-** (எழுந்து வணங்கி) வருக, வருக. தங்கள் வரவு நல்வரவாகுக! அமருங்கள்.

**மைத் :-** மன்ன! மங்களமுண்டாகட்டும்! உன் அழைப்பு என்னை சந்தோஷப்படுத்தியது!

**பங்கை :-** சுவாமி! தங்கள் சந்தோஷத்தையும், என் சந்தோஷத்தையும் நிலைப்படுத்துவதற்காக தாங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்! அது வேறு எவராலும் சையற்கரிய காரியம்!

**மைத் :-** மிகுந்த சந்தோஷம்! சொல் மன்னவா? செய்து முடிக்கிறேன்!

**பங்கை :-** சுவாமி! ஒரு காலத்திலே தென்னாட்டில் பொங்கிப் பரவிய எங்கள் சாளுக்கிய புலிகேசியின் புகழ் மங்கும்படியாகவும், வீராதி வீர விக்கிரமாதித்தரின் வேட்கை நிறைவேருதபடியும் செய்து விட்டனர் தொண்டை மண்டலப் பல்லவர்கள்! அதை இன்று நினைத்தாலும் நெஞ்சம் எரிகின்றது. என் முன்னோர்கள் கைப்பற்றிய காஞ்சியின் சிங்காதனத்தில் நான் இல்லையே பல்லவ நந்திவர்மனன்றே அந்நாட்டை ஆளுகின்ருன்! அவனுக்கல்லவோ நாம் கப்பம் கட்ட நேர்ந்து விட்டது!

**மைத் :-** புரிகிறது மன்ன! எனக்கு நன்ருகப் புரிகிறது! ஆனல்,...... (யோசித்தல்)

**பங்கை :-** என்ன யோசனை சுவாமி?

**மைத் :-** படைபலம் மிக்க சக்கரவர்த்தி நந்திவர்மன்! நேரடியாகப் போரிடுவது நம் சக்திக்கு மிஞ்சிய காரியமாயிற்றே!

அமை :- நேரடியானதென்றால் நாங்கள் இருக்கிறோமே! தங்களையேன் வரவழைக்கிறோம்? மறைமுகமாக—ஏதாவது செய்ய வேண்டும் சுவாமி!

பங்கை :- எனக்கு வெற்றி தேடித்தர வேண்டும் சுவாமி! கப்பம் கட்டுவதையும் நிறுத்தி விட்டேன், தங்களை நம்பி!

மைத் :- (சிரித்து) என்னை நம்புகிறாய் மன்னா! நன்று செய்தாய்! நம்பு! நம்பிக்கை வீண்போகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்! (யோசித்து) இது ஒரு! நல்ல சந்தர்ப்பம்தான்!

பங்கை :- தங்கள் கருத்து?

மைத் :- நந்திவர்மனிடம் வெறுப்புக் கொண்டவர்கள் அங்கே உண்டு; சதிக்குச் சித்தமாக சகோதரர்களே இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவன் புலவன் சந்திர வர்மன்; சாமர்த்தியசாலி! அண்ணனை கவிழ்த்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் அந்தக் கவிஞனைப் பகடையாக்கிவிட்டால்......பல்லவநாடு சாளுக்கியருக்குச் சொந்தம்!

பங்கை :- சபாஷ்! இதெல்லாம் எங்களுக்குத் தெரியவில்லையே! இதற்குத்தான் இந்தப் பங்கையன் தங்களை நாடியது! புறப்படுங்கள்; இப்போதே புறப்படுங்கள் சுவாமி காஞ்சிக்கு!

மைத் :- மிக்க நன்று! எனக்குரிய அரசியல் அதிகாரம்? வாகன வசதிகள்? இங்கே குடும்ப சம்ரக்ஷணை? அங்கே ஏராளமாக செலவாகுமே, பொருள்?

**பங்கை :-** (பதட்டமாக) தாராளமாகத் தருகிறேன் சுவாமி! எது வேண்டும்? எவ்வளவு வேண்டும்? எப்போது வேண்டும்? பெற்றுக்கொள்ளுங்கள்!

**மைத் :-** மன்னு! வெற்றி உண்டாகட்டும்! நான் சென்று பயணத்துக்குரிய நல்வேளை பார்த்து வருகிறேன்; மற்றதை நீ பார்த்துக் கொள்!

**பங்கை :-** நமஸ்காரம்;

[மைத்ரேயர் செல்கிருர்.]

## காட்சி 3.

இடம்: காஞ்சி அரண்மனை.

காலம்: முற்பகல்.

[மன்னன் நந்திவர்மன் வீற்றிருக்க, அமைச்சர் சீலாதித்தர், சேனுபதி விக்கிரமகேசரி இருவரும் நிற்கின்றனர். காவலர்கள் இருக்கின்றனர்.]

நந்தி :- அமைசசமே ! உமது சுற்றுலா வெற்றிகரமாக முடிந்திருக்கும் என்று கருதுகிறேன். நமது கடற்கரை நகரங்களும், அங்கே நடைபெறும் இறக்குமதி, ஏற்றுமதி வாணிபங்களும் எவ்வாறு இருக்கின்றன ?

சீலாதி :- மன்னர் பெரும! மயிலாப்பூர் துறைமுகப் பட்டினம் மக்கள் கூட்டத்தைப் பெருக்குகின்றது. மாமல்லபுரம் கலைக்கூடமாக மட்டுமல்ல, வணிகக்கூடமாகவும் மாறுகின்றது ! மயிலையிலும், மல்லையிலும் இருக்கின்ற நமது கப்பற் படையின் பலம் பயிற்சியின் மூலம் வலிவும், பொலிவுமாக வளர்ந்துகொண்டிருக்கிறது.

நந்தி :- மயிலையில் புதிய மரக்கலங்களும், கப்பல்களும் கட்டுவதற்குத் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்தோமே ; எவ்வாறு நடக்கிறது ?

சீலா :- வெளிநாட்டுத்தொழில் வல்லுனரும், நம் நாட்டுச் செல்வரும் நன்கு ஒத்துழைப்பதால், மரக்கலத் தொழிற்சாலையில் இரவு பகல் இடையருது வேலைகள் நடக்கின்றன ! சிங்களம், சீனம், சயாம் போன்ற நாடுக

ளோடு நமது வாணிபம் சிறப்புற நடைபெறுகின்றன! பூம்புகார் துறைமுகத்தில் முத்து வாணிபம் மெத்த நன்று. நாகப்பட்டினம் துறைமுகம் நன்கு முன்னேறியுள்ளது! என்றாலும் சமயப் பூசல் அங்கே மிகுந்து நிற்கிறது!

**நந்தி** :- அப்படியா? என்ன நடக்கின்றது?

**சீலா** :- சைவம், வைணவம், புத்தம், சமணம் போன்ற மதங்களும், அவற்றின் உட்பிரிவுகளும் ஆதிக்கம் வேண்டி மோதிக்கொள்ளுகின்றன! இரு நூறாண்டுகளுக்கு முன்பு நாகப்பட்டினம் துறைமுகத்திலே, பௌத்த மதத்தைச் சார்ந்த சீனத்து வாணிபருக்காக புத்த விகாரை ஒன்று கட்டினார் சக்கரவர்த்தி நரசிம்மவர்மர்! அந்தக் கோயிலின் புத்தர்சிலைக்கு நாமமிட்டு, தமதாக்கிக்கொள்ளப் பார்க்கின்றனர் வைணவர்கள்! சீனத்து வாணிபர்கள் முறையிட்டனர் என்னிடம்! வந்திருக்கின்றனர் தங்களைக் காணவும்.

**நந்தி** :- அப்படியா? உடனே அவர்களை வரச் சொல்லும்!

[அமைச்சர் சாடையால் கட்டளையிட, காவலன் ஒருவன் வணங்கி வெளியே சென்று இரு சீனர்களோடு வருகிறான்.]

**சீனர்** :- (வணங்கி) மகா மகாராஜா! பல்லவநந்தி மகாராஜா! நாங்கள் சரணம் சொல்லுகிறோம்! சரணம் சரணம்!

**நந்தி** :- சீனத்து வாணிபர்களே! பஞ்ச சீலத்தின் தூதர்களே! உங்களுக்கு என்ன குறை நேர்ந்தது?

**சீன :-** எங்கள் நாட்டு பௌத்தருக்காக முன்னர் மகாராஜா புத்தகயா கட்டினுங்க; இப்போ அதை வைணவர்கள் கைப்பத்த முயற்சிக்கிறுங்க, நீங்கதான் காப்பாத்தணும் !

**நந்தி :-** அஞ்சவேண்டாம்! மாவேந்தர் நரசிம்ம வர்ம சக்கரவர்த்தி வகுத்தவழி தூர்க்கப்படுவதற்கு இந்த நந்திவர்மன் துணைபுரியமாட்டான்! உங்கள் உரிமை உங்களுக்கே கிடைக்கச் செய்கிறேன். சென்று வாருங்கள் !

**சீன :** சந்தோஷம் மகாராஜா ! சரணம் ! சரணம்! (இருவரும் வணங்கிச் செல்கின்றனர்).

**நந்தி :-** சீலாதித்தரே ! "நாகபபட்டினம் பௌத்த விவகாரம் பௌத்தர்களிடமே விடப்பட வேண்டும். அதிலே வைணவர்கள் தலையிடக் கூடாது! கருமத் தலைவரிடம் கூறி இதனைக் கட்டளையாக அனுப்பச் செய்யும் நாகைச் சான்றோர்க்கு !

**சீலா :-** நன்று !

[மன்னர் எழுந்து செல்கிருர்.]

**விக்கி :-** புத்த பகவானுக்கு நாமம்! (சிரித்து) பாவம்! விஷ்ணுவின் பத்து அவதாரங்களிலே அதுவும் ஒன்று என்பது அவர்களது கற்பனை! பயல்கள் போட்டாலும் போட்டார்கள்; நாமத்திற்கு பதிலாக விபூதிப் பட்டை போட்டிருந்தாலும், ஒப்புக் கொள்ளலாம்; இல்லையா அமைச்சரே ?

**சீலா :-** இல்லை! அதுவும் தவறுதான்! நாமத்தால் நலக்குறைவு என்றால், விபூதியிலும் வில்லங்கம் வருகின்றதே!

**விக்கி :-** விபூதியில் என்ன வில்லங்கம்?

**சீலா :-** வெறும் புத்தர் விபூதிப் புத்தராகிவிட்டால், அவர் அன்பே சிவம், அருளே நெறியென்று மலரால் அர்ச்சித்து வணங்கும் என்போன்ற ஆதி சைவரா? மதுவைப்படைத்து மனிதரைக் கொன்று இரத்த பூசை புரியும் உம்போன்ற கபாலிகச் சைவரா என்ற சர்ச்சை கிளம்பி விடுமே!

**விக்கி :-** (சினந்து) ஆங்! என்ன சொன்னீர்? (நிதானித்து) உம்!..... ஆம்..... ஆமாம்!..... அமைச்சரே எனக்கு வேலையிருக்கிறது, நான் வருகிறேன்.

[ஆத்திரத்தோடு போகிறார் சேனபதி. "அன்பே சிவம்" என்கிறார் சீலாதித்தர்.]

## காட்சி 4.

இடம்: வித்தியாவதி வீடு..

காலம்: பிற்பகல்.

[இனிமையாகப் பாடிய வண்ணம் சந்திரவர்மன்போல் படம் வரைந்து கொண்டிருக்கிருள், கணிகை வித்தியாவதி! முல்லை அதனை ரசித்துக் கொண்டிருக்கிருள்.]

முல்லை :- வித்தியாவதி! அருமையாபாடறே! அழகா ஆடறே! கைலாசநாதர் கோயில்லே சாமி கும்பிட வந்தவங்ககூட அதை மறந்துட்டு ஒன்னைத்தான் பார்த்து ரசிக்கிருங்க! ஆனு; இந்த ஓவியம் வரையறது இருக்குதே, இதைச் செய்யறது எனக்கென்னமோ நல்லால்லே!

வித்தி :- ஏண்டி முல்லை! ஓவியம் கற்பது பாபமல்லவே?

முல்லை :- கற்பது பாபமல்ல! இப்படிக் கோணல் மாணலாகவா வரையறது......

வித்தி :- சின்னஞ் சிறுமிகள் விளையாட்டு வீடு கட்டுவது போலிருக்கிறதாக்கும். முல்லை! இந்த ஓவியம் யாருடையதென்பது புரிகிறதாடி உனக்கு?

முல்லை :- ஓவியம் புரியல்லே; ஒம்மனசு புரியுது!

வித்தி :- எப்படி?

முல்லை :- கொண்டா இப்படி !

[அவள் கையிலிருந்த தூரிகையை வாங்கி, ஓவியக் கோடுகளின் கீழே "சந்திரவர்மன்" என்று எழுது கிறாள்.]

வித்தி :- (மகிழ்ந்து) அடி முல்லை! என் அந்தரங்க மனம் அறிந்தவள் நீ ஒருத்திதானடி! என் சுவாமிக்கு இன்னும் என் எண்ணம் தெரியவில்லையே! அந்தப் பெயர்! அதை ஒரு முறை வாயால் சொல்லடி! சொல்!

முல்லை :- சந்திரவர்மன்!

வித்தி :- ஆஃகா! சந்திரவர்மன்! பெயரைக் கேட் டாலே என்னுள்ளம் பேரின்பம் கொள்ளுதடி! சந்திர வர்மன்! சந்திரவர்மன்!

[பச்சை புலவனும், மூட்டை முடிச்சு களோடு வெளியூரான் ஒருவனும் வருகின்றனர்.]

பச்சை :- சந்திரவர்மன்... வித்தியாவதி! அவுரு வல்லே! தோ! அவரது அந்தரங்க நண்பன் பச்சைப் புலவன் வந்திருக்கேன்!

வித்தி :- அவர் வரமாட்டாரா? வரவே மாட் டாரா என் இல்லத்திற்கு? (புதியவரைப் பார்த்து வியந்து) ஆங்! இவர் யார்? எந்த ஊர்?

பச்சை :- இவுரு ஒரு ஓவியக்கலைஞர்! காஞ்சியிலே கொஞ்ச நாளு தங்கி, ஓவியம் வரைஞ்சு மகாராஜா

கிட்டே பரிசு வாங்கணுமாம்! தங்கறத்துக்கு நம்பிக்கையா ஒரு இடம் கேட்டாரு, ஓங்ககிட்டே கூட்டி வந்தேன்!

**வித்தி :-** என் வீடு என்ன தங்குமடமா?

**பச்சை :-** இது வேறு தினுசான மடந்தான்! இருந்தாலும் நீ ஒரு கலைஞி! இவர் ஒரு கலைஞர்! பொருத்தம் இருக்குது பாரு! (முல்லையிடம்) ஏண்டியம்மா! நீயுந்தான் கொஞ்சம் சொல்லேன்!

**முல்லை :-** வித்தியாவதி! உனக்கோ ஓவியம் பழகணும்னு தீராத விருப்பம்! இவரோ ஓவியர். நாம் தங்க இடம் கொடுத்தா இவரு ஓவியம் கத்துக் கொடுக்குறாரு. பார்த்தா நல்லவராத்தானே தெரியுது!

**மைத்தி :-** ஆமாம் தாயே! நான் தூய்மையான கலைஞன்! வித்தியாசமாக நினைக்காதே! பெற்ற தந்தை போல், உற்ற குருவைப்போல் நடந்து கொள்வேன்! உன்னை ஓவியக்கலையில் மகா நிபுணியாக்குவேன்!

**வித்தி :-** நல்லது ஐயா! தங்குங்கள். ஆனால் தகுதிக்குறைவான செயல்கள் இங்கு கூடாது! நான் பிறவியில் தாசி என்றாலும் நடத்தையில் தோஷியல்ல! குடும்பப் பெண்!

[சந்திரவர்மன் படத்தைப் பார்த்து விட்ட பச்சை]

**பச்சை :-** அடாடாடா! எங்க சந்திரவர்ம மகா ராஜா. தோ இங்கே இருக்காரே!

[அருகே சென்று பார்க்கிறான் திரும்பி]

குடும்பத்துப் பெண்! குடும்பத்துப் பொண்ணோட லட்சணத்தைப் பாருங்க! அன்னியனோட சித்திரத்தை ரகசியமாத்தீட்டி அழகு பாக்கறவளா குடும்பத்துப் பொண்ணு?

வித்தி :- (சினந்து) நிறுத்தும்! வார்த்தைகளை அளந்து பேசும், இளிச்சவாய்ப் புலவரே! காக்கையின் கூட்டிலே காக்கைக் குஞ்சும் இருக்கும்; குயில் குஞ்சும் இருக்கும் என்பதை மறந்து விடாதீர்!

பச்சை :- ஓஃகோ! நீ காக்கா கூட்டிலே பொறந்த குயில் குஞ்சா? ஆமா.... ஆமா அதுவும் கருப்புதானே?

வித்தி :- கருப்பாக இருப்பதெல்லாம் காக்கை யென்று சொல்பவனுக்கு கண்மையும் காக்கை; காரிருளும் காக்கை! தாசி வீட்டில் பிறந்தவளெல்லாம் வேசி தான்! (மைத்திரேயனிடம்) ஐயா! நான் கன்னி கழியாத காரிகை! சந்திரவர்மர் என் காதலர்! நான் மணந்து வாழ விரும்பும் மாத்தமிழ்க் கவிஞர்!

பச்சை :- அப்படீன்னு இதை அவரு ஏங்கிட்ட சொல்லலியே! ஏங்கிட்ட சொல்லாம அவரு எப்படித் தான், யாரைத்தான் காதலிச்சிட முடியும்னேன்!

முல்லை :- இந்தாய்யா! எங்க வித்தியாவதி, நத்தை வயித்திலே பொறந்த முத்து! நாக்கை உள்ளே வச்சுப் பேசு! ஆமா!

பச்சை :- அது சரி, எங்க சந்திரவர்மர்?

முல்லை :- வித்தியாவதி காதலுக்கு உகந்தவரு. ஆனா, இது வரைக்கும் பார்க்கவுமில்லே, பழகவுமில்லியே!

பச்சை :- ஏன் பார்க்கலே?

வித்தி :- இன்னும் காலம் வரலே!

மைத் :- காலம் வந்து விட்டது வித்தியாவதி! இதோ நான் வந்திருக்கிறேன்! உனக்கு ஓவியம் கற்றுத் தருவது மட்டுமல்ல; நீ மனதில் வைத்து உருகும் காதலனைப் பெற்றுத் தரவும் என்னால் முடியும்!

பச்சை :- அது முடியாது! சத்திரவர்மர் ஏந் தலைவர்! ஏஞ்சொற்படித்தான் நடப்பாரு. நான் மனசு வச்சாத்தான் முடியும்!

மைத் :- (சாகசமாக) பச்சை! நீதான் எனக்கு எல்லா வகையான உதவிகளும் செய்வதாகச் செப்பி விட்டாயே! நீ மறப்பாயா? நான் தான் மறப்பேனா? இதோ......

[பையை எடுத்து பொற்காசுகளைக் கொடுக்கிறான்]

பச்சை :- (மகிழ்ந்து) பலே! பலே! அறிமுகத் துக்கே அஞ்சு பொன்! அப்புறம் எத்தனை பொன்..... ஐயா! நீங்க சொல்றதெல்லாத்தையும் நாஞ் செய்யறேன்! இப்பவே செய்யறேன்! என்ன வேணும் சொல்லுங்க?

மைத் :- எப்படியாவது சந்திரவர்மனை இங்கே அழைத்து வரவேண்டும்!

பச்சை :- இதோ, ஒரு நொடியிலே வந்திட்டேன்!

[போகிறான். மைத்ரேயன் மூட்டை களை வைக்கிறார்.]

முல்லை :- இவன் இளவரசர் சந்திரவர்மருக்கு ரொம்ப வேண்டியவன் வித்தியாவதி !

வித்தி :- (ஆவலோடு) அப்படியானால், இனி எனக்கும் வேண்டியவன் ! உனக்கும் வேண்டியவன் ! ஆனா, எனக்கு இதயத்திற்கு வெளியே ! உனக்கு உள்ளே ! என்னடி ?

முல்லை :- போ வித்தியாவதி ! இந்தக் கிறுக்கனா ? எனக்கு வேணாவே வேணும் ! இது பூவை வச்சாலும் வைக்கும், காதைப் பிச்சாலும் பிய்க்குமே ! ஐயயோ ! வந்து எவ்வளவு நேரமாச்சு ! அம்மா பேசுவா ! நான் வர்றேண்டியம்மா !

[போகிறாள் முல்லை,]

## காட்சி 5.

இடம்: கைலாசநாதர் கோவில்.

காலம்: முற்பகல்.

[சக்திமுனையர், நிஷ்டையில் உட்காருமிடத்தில் உட்கார்ந்து கொண்டு பச்சை ஏட்டுச் சுவடியில் எழுத்தாணியால் எழுதிக் கொண்டிருக்கிறார். எழுதிய பாட்டை தானாகப் பாடிப் பார்க்கிறார்.]

காதலாடும் நெஞ்சிலே
கற்பனைகள் பொங்குதே
காசை எண்ணும் போதிலே
அத்தனையும் மங்குதே!

பச்சை :- (மகிழ்ந்து) சபாஷ்! அற்புதமா அமைஞ்சிட்டுது பாட்டு! என்னைக் கவிஞனுக்கிட முன் வந்த கருணைக் கடவுளே! கற்பனை வளம் கொடுத்த காபாலிக சிவமே! கோடி வணக்கம்!

முல்லை :- (வந்து கொண்டே) பச்சை! ஏது; ஏடும் எழுத்தாணியுமா கோயில்லே வந்து பாட்டு எழுத ஆரம்பிச்சுட்டே போலிருக்கே!

பச்சை :- பாட்டு எழுதமட்டுமா? (சிரித்து) பகவானுடை கிருபையாலே, அழகா பாடவும் ஆரம்பிச்சுட்டேனே! முல்லை! இதெல்லாம் எதுக்குத் தெரியுமோ? சந்திரவர்மனும், வித்தியாவதியும் போல இனிமே நீயும் நானும் சேர்ந்து வளர்க்க வேண்டியதுதான்!

முல்லை :- எதை?

பச்சை :- நல்லவர் போற்றிடும் நாட்டியக்கலையை.

இத பாரு, அவரைப்போல நான் பாடுவேன்! அவளைப்போல ஆடணும், எங்கே?

[பாடுகிறான்]

காதலாடும் நெஞ்சிலே
கற்பனைகள் பொங்குதே
காசை எண்ணும் போதிலே
அத்தனையும் மங்குதே!

முல்லை :- (சிரித்து) ஐயையோ! போதுமே! நிறுத்து! நிறுத்து! கட்டிப்போட யாராச்சும் கவுத்தை தூக்கிக்கிட்டு வந்திடப் போறாங்க!

பச்சை :- முல்லை! என்னை என்ன கழுதைன்னு நெனைச்சுகிட்டே?

முல்லை :- இல்லையே! அதுக்கு நாலு காலு, ஒரு வாலுல்ல இருக்கும்!

பச்சை :- அப்படின்னா என்னை ஏன் நிறுத்தச் சொன்னே? நீ ஆடத் தெரிஞ்சவ; நான் பாடத் தெரிஞ்சவன், இரண்டு பேருமா சேர்ந்து ஏதோ அப்படியே கச்சேரி கிச்சேரின்னு காலட்சேபம் பண்ணலாம்னு நெனைச்சா...... மொகரையப்பாரு என்னை விட நீ பிரமாதமா பாடுவியோ?

முல்லை :- நான் அப்படியொண்ணும் சொல்ல லியே! பச்சை! ஒன்னை ஒண்ணு கேட்கணும்னு நெனைச்சேன். ராத்திரி முழுக்க நீ எங்கே இருந்தே?

பச்சை :- ஏன்? ஒந்தங்கச்சிமாரு ஊட்லேதான்! என்னோட அருமையும் பெருமையும் அவுங்களுக்கில்ல தெரியுது!

முல்லை :- எங்கேயாவது ஒரு பக்கம் தெரியட்டும்! அப்புறம் சொல்லு!

பச்சை :- ராத்திரி முழுதும் அங்கே என்ன நடந்தது தெரியுமா? பாட்டு! பாட்டு! பாட்டு! சும்மா இசைப்பாணர் போல பாட்டாப் பொழிஞ்சி தள்ளிட்டேன் நீ பகடி பண்றே! தங்கச்சிமாருங்க எவ்வளவு சந்தோஷப்பட்டாங்க தெரியுமா?

முல்லை :- அப்போ, எங்கம்மாகிட்ட நாஞ் சொன்னதிலே எள்ளுமொனையளவும் தவறில்லே! அட பாணு! நான் சொன்னது அப்படியே பலிச்சுட்டுதே!

பச்சை :- (ஆவலோடு) என்ன? என்ன? என்ன சொன்னே முல்லை? ஒங்க வூட்டுக்குக் கேட்டுதா பாட்டு? யாரோ பெரிய ஆளு பாடறுப்லே இருக்குதுன்னு நெனைச்சிருப்பீங்க? இல்லியா? (மகிழ்வுச் சிரிப்பு)

முல்லை :- ஆமா, ஆமா, பாடறது பாருங்கிறப் பத்தி எங்கம்மா, மத்தவங்க, நானு எல்லோருமா விவாதம் பண்ணினோமே!

பச்சை :- விவாதமா? ஏம் பாட்டுக் குரல் கேட்டா? அடாடா! நான் பாணன்! இசைப்பாணனே தான்! எப்படி எந்தெறமை? ஆமா, என்னைப்பத்தி என்னென்னு பேசிக்கிட்டீங்க?

முல்லை :- கேளு! (பாடுகிறாள்)

ஈட்டுபுகழ் நந்தி பாணா! எங்கையர்தம்
வீட்டிலிருந்து பாட விடிவளவும்—காட்டிலழும்
பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார் தோழி
நாயென்றாள்; நீஎன்றேன் நான்!

பச்சை :- அவமானம்! அவமானம்! பெருத்த அவமானம்! முல்லை ஒம் முந்தானையக்கொடு. இப்பவே சுருக்குப் போட்டுக்கிட்டு உன் எதிர்லேயே செத்துப் போறேன்!

[முந்தானையைப் பிடிக்கிறான்]

முல்லை :- (அனுதாபத்தோடு) வேணாம் பச்சை! இதுக்காகவா சாவறது? தற்கொலை செஞ்சவங்க, பிசாசா அலைவாங்களாமே! என் ராசாவல்ல; வேணாம்!

பச்சை :- என் குரலைக் கேட்டு நரீன்னீங்க என்னை! நானுன்னு ஒந்தோழி! செத்தப்பறமா? இப்பவே பிசாசுன்னு சொல்லிட்டாளே ஒங்கம்மா!

முல்லை :- எனக்குத் தெரியும் பச்சை! நான் அப்படியெல்லாம் சொல்லலியே! நீயின்னுதான் பச்சை சொன்னேன்!

பச்சை :- 'ஐயோ' அதுதான் முல்லை கொல்லுது என்னை! கத்தறது பேயல்ல, நரியல்ல, நாயல்ல, நாந்தான்னு சொன்னு! அதையெல்லாம்விடக் கேடுகெட்டவனல்ல ஆயிட்டேன்! ஐயோ! பொழைக்கணுமா நானு? உடு, உடு முந்தானையை!

முல்லை :- (அணைத்து) பச்சை! நீ செத்துட்டா ஒன்னையே நம்பியிருக்கிற என்னோட கதி என்னு ஆவறது? தமிழ்தான் என்னயாப் போறது? வேணும் பச்சை! நீ என் ராசாவல்ல!

பச்சை :- (மகிழ்ந்து) ஆமா, ஆமா! நான் பச்சைத் தமிழ் ராசா! நீ பக்குவமான ராணி! (அணைத்து) ஆஃகா! முல்லை! இந்த உலகமே எனக்கு மறக்குதே!....

[''ஜெய்காளி! ஜெய்சக்தி!'' என்று சொல்லிய வண்ணம் காபாலிக சக்தி முனையர் வருகிறார்.]

சக்தி :- (சினந்து) ஆங்! சண்டாளர்களா? புனிதமான சிலாயத்தில் வந்து என்ன பொல்லாத காரியம் செய்கிறீர்கள்? ஆண்டவன் பொறுக்க மாட்டான் இந்த அக்ரமத்தை!

பச்சை :- (நடுங்கி) ஜெய்சக்தி! ஒண்ணுமில்லீங்க சுவாமி! தப்பா ஒண்ணுமே நடக்கலே! வந்து... வந்து... ஆண்டவன் சந்நிதியிலே சிவசக்தி நடனம் எப்படி ஆடறதுன்னு ஒத்திகை பார்த்தோம்? அவ்வளவுதான், அவ்வளவுதான் வேற ஒண்ணுமில்லே!

சக்தி :- முல்லை! நம்பலாமா இவன் சொல்லை?

முல்லை :- ஆமாங்க சுவாமி! நடன ஒத்திகைதான், தவறு ஒண்ணுமில்லீங்க!

சக்தி :- (கடுமையாக) ஜெய்சக்தி! ஜெய்காளி! பிழைத்தீர்கள்! ஓடிப்போங்கள்!

[விட்டதே போதுமென்று இருவரும் ஓடுகின்றனர்.]

❋

# காட்சி 6.

இடம்: காஞ்சியின் தெரு.

காலம்: பகல்.

[பச்சை, ஒரு வாழைப்பழத்தை உரித்துத் தின்றவண்ணம் வருகிறுன். எதிரே உச்சிக்குடுமியைத் தட்டி முடிந்தவண்ணம் மைத்ரேயன் வருகிறுன்.[

மைத்:- என்ன பச்சை! வாழைப்பழம் தின்கிருயா?

பச்சை:- பச்சை வாழப்பழமா? அருமையான தேன் கதலி சுவாமி! ஒமக்கு வேணுமா? வாங்கிட்டு வர்றேன். பக்கத்துத் தெருக் கோயில்லேதான் பிரசாதப் பட்டுவாடா நடக்குது.

மைத்:- (சிரித்து) பச்சை! வாழைப்பழம் ஒரு ஏழைப்பழமப்பா! உனக்குச் சரிதான்; எனக்குப் பிடிக்காது.

பச்சை:- அப்படியாஞல் நீங்க சாப்பிடறது?

மைத்:- பலகாரம்.

பச்சை:- பலகாரம்! பழ ஆகாரம்! பழ ஆகாரந் தான் நாளடைவிலே பலகாரம் என்பதாக மருவிற்று. ரெண்டும் ஒண்ணுதான் சுவாமி!

மைத்:- நீயும் கெட்டாய், உன் தமிழும் கெட்டது. போ! ஏண்டா! ஏழையும் பிரபுவும் ஒன்ருக முடியுமா?

பச்சை :- ஏனுங்க? கண்ணு, காது, காலு, கையி எல்லாம் ஒண்ணுதானுங்களே?

மைத் :- உணவு?

பச்சை :- மனுஷங்க திங்கறதை ஏழைங்க திங்கருங்க, பிரபுவுங்க எதைத் திங்கருங்க?

மைத் :- தேவர்களின் உணவைச் சாப்பிடுகிருர்கள். தேவர்கள் பாஷையிலேயே பேசுகிருர்கள்! தேவர்களைப்போல் சுகிக்கிருர்கள்!

பச்சை :- தேவர் உணவுன்னு சொன்னீங்க! பொங்கல், புளியோதரை, தேங்கா, பழம் அது இது; சரிதான்! அதென்னங்க தேவ பாஷை?

மைத் :- மண்டு! அதுதாண்ட சமஸ்கிருதம்! பவித்திரமான பாஷை! மகான்கள்–பக்தர்கள்–உயர்ந்தவர்கள் போற்றிப் பாதுகாக்கும் மேலான பொக்கிஷம்!

பச்சை :- தமிழுங்க!

மைத் :- தமிழ்! மிகத்தாழ்ந்தது. பாமர மக்களின் பாஷை! பகவானுக்குப் புரியாதது!

பச்சை :- கெடையாது, நீங்க சொல்றது தப்பு, (தொலேவில் நோக்கி) சுவாமி! தோ; புலவர் பெருந்தேவனுர் வர்ருர், கொஞ்சம் இருங்க. அவருகிட்டையே கேட்டுடுவோம்.

மைத் :- (பார்த்து அஞ்சி) ஐயயோ! பச்சை! வேண்டாம்! வேண்டாம் விஷப்பரீட்சை! (பணம் எடுத்துக் கொடுத்து) இந்தா, இதை வைத்துக்கொள். நாம் பேசியதை அவரிடம் சொல்லி விடாதே!

பச்சை ;- ஏனுங்க சுவாமி ?

மைத் :- பெரியவர்களிடம் விவாதம் பேசக்கூடா தடா ! நான் வருகிறேன். சாயங்காலம் வித்யாவதியின் வீட்டுக்கு வருகிறாயா ?

பச்சை :- வர்றேனுங்க.

[மைத்ரேயன் ஒருபக்கம் போக,
மறுபக்கம் பெருந்தேவனார் வருகிறார்.]

பச்சை :- வணக்கம் !

பெருந் ;- வாழ்க ! பச்சை ! நலமாக இருக்கின்றாயா?

பச்சை ;- அப்பாவும் போயிட்டாரு, அம்மாவும் போயிட்டுது. வீடும், சொத்தும் கடனுக்குப் போயிட்டு துங்க, என்னமோ தெருவிலே சாப்பாடும், திண்ணை யிலே தூக்கமுமா காலம் போவுதுங்க.

பெருந் :- (வருந்தி) அம்மாவும் இறந்துவிட்டார் களா ? இருக்க இடமற்றுவிட்டதா ? அடடா ! என்ன பாதாபம் ! ஒரு தமிழ்ப் புலவரின் மகனுக்கு இத்தகைய தாழ்வா வரவேண்டும் ? பச்சை ! மன்னருக்கு உன் நிலை தெரியுமோ ?

பச்சை :- அவர் தம்பி சந்திரவர்மர்தான் என்னை ஆதரிக்கிறாருங்க, அவரு சொன்னதைச் செய்வேன். கொடுத்ததைத் தின்பேனுங்க !

பெருந் :- சந்திரவர்மனிடம் நட்புரிமை கொண் டிருக்கிறாயா ? நன்று, இடம் நல்லதுதான், நடத்தை ....

பச்சை :- ஒண்ணும் மோசமில்லே, எதிலேயும் கொறையில்லேண்ணேன். ஆனா, மகாராஜா கையிலே செங்கோல் இருக்குது, இவரு கையிலே அது இல்லே! அது ஒண்ணுதான் கொறை!

பெருந் :- குறையும், நிறையும் பற்றி உனக்கும் தெரிகிறது. நன்று நான் வரட்டுமா?

பச்சை :- போயிட்டு வாங்க, கொஞ்சம் நில்லுங்க, ஏதாவது சில்லரை இருக்குமா?

[மடியினின்றும் ஒரு பொன் எடுத்துக் கொடுக்கிறார், பெருந்தேவனார்.]

பச்சை :- (வியந்து) அடடே! ஒரு பொன்னையே கொடுத்திட்டீங்களே! என்ன தயாளம்! இதுதான் தமிழ் நெஞ்சம், மைத்ரேயனைவிட நீங்க பெரியவங்க தான்; சந்தேகமே இல்லே; சந்தேகமே இல்லே, வணக்கம்,

[வணங்கிச் செல்லுகிறான் பச்சை.]

பெருந் :- (அவனைப் பார்த்திருந்துவிட்டு) வேங்கையின் வயிற்றிலே வெள்ளாடு பிறக்காது என்பார்கள். பொய்! பச்சையைப் பார்க்கிறேனே கண்களால்! தமிழ்த் தாயே! கருணை கூர்ந்து என் நண்பரின் மகனைக் காப்பாற்று.

[வணங்குகிறார்.]

## காட்சி 7.

இடம்: வித்தியாவதி வீடு.

காலம்: முற்பகல்.

[பாடிய வண்ணம் மாலை தொடுக்கிறாள் வித்யாவதி, அணிந்து கண்ணாடியில் அழகு பார்க்கிறாள், பின்னர் கையில் வைத்து ஆளனை எதிர் பார்க்கிறாள். சந்திரவர்மன் வருகிறான். ஆசையோடு சென்று மாலையை கழுத்தில் அணிவித்து, திருஷ்டி கழிக்கிறாள்.]

சந்தி :- (தழுவி) இன்பம்! வித்யாவதி! இன்பத்தின் எழில் வடிவம்! இசைக் கலையில் சுவைக்கடல்! வனப்புமலைச் சிகரம்! காதலின் கலையமுது! உனக்கல்லவோ கண்ணேறு கழிக்க வேண்டும்!

[திருஷ்டி கழிக்கிறான்; கைகளைப் பற்றிக்கொள்கிறாள்.]

வித்தி :- எனக்கு இன்பம் தருபவர் நீங்கள், பெறுபவள் நான்! இல்லையா?

சந்தி :- தருவதும் பெறுவதுமான காதற்கலையிலே மணிமுடி புனைந்த மகாராணி நீ! இல்லையா?

வித்தி :- சுவாமி! தகுதியற்ற தங்கள் அடிமைக்கு, எவ்வளவு மிகுதியான பாராட்டுகள்! கொஞ்சமும் பொருந்தாது சுவாமி!

சந்தி :- வயிரத்தின் தகுதி, அதனை வைத்திருப் பவர்க்கல்லவோ தெரியும்! வித்யாவதி! அரசகுடும்பத் திலே பிறந்தும் அரியாசனம் கிட்டாதவன். நல்ல தமி ழறிந்தும் நாடோடியாகச் சுற்றுபவன். நான் கற்று மறந்த கல்வியை உன் காதலின் பேரொளி பெற்றுத் தந்ததடி எனக்கு!

வித்தி :- அப்படி என்னிடம் என்ன சுவாமி இருக் கிறது?

சந்தி :- மனிதன் விரும்புகின்ற கலையின்பம் அத் தனையும் மண்டிக் கிடக்கிறதே, இந்தத் தங்கத் திரு மேனியில்!

வித்தி :- உண்மைதானு சுவாமி?

சந்தி :- காற்று வீசுவதும், கதிரவன் காய்வதும் உண்மைதானே!

வித்தி :- (அணைத்து, அவன் உதடுகளைக் கிள்ளி) இந்தச் சுவையான இன்பம் போல, அவை நிலையான உண்மையாயிற்றே!

சந்தி :- ஒப்புக்கொள்ள வேண்டும் அப்படி. இது தான் நாணயம். (அணைத்தல்)

[கையிலே ஓவியத்தோடு, பின்புறம் வந்து நிற்கிருன் மைத்ரேயன்]

மைத் :- கொஞ்சம் திரும்ப வேண்டும் இப்படி. இதுதான் ஓவியம்!

சந்தி :- (விலகி) ஓ! மைத்ரேயரா! வாரும், முடித்து விட்டீரா ஓவியத்தை?

மைத் :- அசந்தர்ப்பம் ஏதுமில்லையென்று நினைக்கிறேன். அப்படி இருந்தால்... மன்னிக்க வேண்டும்.

சந்தி :- (ஓவியத்தை வாங்கிப் பார்த்து) முடியாது. மன்னிக்கும்படியான காரியத்தையா நீர் செய்திருக்கிறீர்? வித்தியாவதி! பாத்தாயா ஓவியத்தை?

வித்தி :- (பார்த்து) அற்புதமான சித்திரம்! பாடுகின்ற நீங்கள், அபிநயம் பிடித்து ஆடுகின்ற நான்! அடடா!

மைத் :- ஆமாம், தேவலோகத்து சித்திரசேனனும் ஊர்வசியும் போல!

சந்தி :- அன்பின் மிகுதியால் நம்மைச் சேர்த்து வைத்த மைத்ரேயர்; கலையின் திறத்தால் நம்மை அமரக் காதலராக்கி விட்டார்! வித்தியாவதி! எப்படி இவரை மன்னிப்பது? என் கையிலே ஆட்சி இருந்தால், பொற்காசுகளை வள்ளம் வள்ளமாக இவரது தலையிலே கொட்டி, குவியலிலே திணறடிப்பேன் இவரை!

மைத் :- அப்படியானால், மன்னன் நந்திவர்மனின் பாராட்டினைப் பெறப்போவதில்லையா ஓவியம்?

சந்தி :- ஏன் பெறாது? செங்கரும்பை விரும்பாத யானையுண்டோ?

மைத் :- நாம் சந்திக்கும் நேரத்தில், யானைக்கு மதம் பிடித்தால்...?

சந்தி :- நான் அடக்குகிறேன், மைத்ரேயரே! மன்னனின் பாராட்டைப் பெற வேண்டும் இந்த மகத்தான சித்திரம், அவ்வளவுதானே? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

மைத் :- அரசவைக்கு நான் புதியவன்.

சந்தி :- அச்சம் வேண்டாம்! அருகிலேயே நான் இருப்பேன்.

மைத் :- வெறும் நாயோடு சந்தைக்குப் போய் வெள்ளிக் கோலால் அடிபட்டான் என்பார்கள்! அந்தக் கதையாகி விடக்கூடாதே!

வித்தி :- கலை வளர்க்கும் பல்லவ மன்னன் சபையிலே, மைத்ரேயரின் ஓவியத்திற்கு மதிப்பில்லையென்றால் கலைமகளின் கண்களுக்கு ஒளியில்லையென்றுதான் பொருள்.

சந்தி :- பொன்னான பேச்சு!

மைத் :- பிறகென்ன, செம்பு பித்தளையாகவா இருக்கும் என் சிஷ்யையின் வாய்மொழி?

[அவளைத் தட்டிக் கொடுக்கிறார் மைத்ரேயர். சிரிக்கின்றனர்.]

## காட்சி 8.

இடம்: காஞ்சி அரசவை.

காலம்: முற்பகல்.

[சிங்காதனத்தில் மன்னரும், மகாராணி சங்கா தேவியும் இருக்க, மந்திரி பிரதானியர் சூழ்ந்திருக்கின்றனர். நடனம் நடைபெற்று முடிகின்றது.]

பெருங்:- (எழுந்து) மன்னர் வாழ்க! பல்லவமா நந்தி வாழ்க! காடவர்கோன் கழற்சிங்கன் வாழ்க! வாழ்க!!

(பாடுகிறார்–விருத்தம்)

வரை பெரிய மத்தாக வாளரவம் கயிறுக
திரையிரியக் கடல் கடைந்து திருமகளைப்
படைத்தனையே
உலகொடு நிலவிய ஒருபுகழ் சுமந்தனையே
நிலமகள் கேள்வனும் நேர்கழலினனும்
நலமிகு கச்சியார் கோவென்பவே
நலமிகு கச்சியார் கோவாயினனும்
சிலைமிகு தோள்சிங்கன் அவன் என்பவே
செரு விடையானை அவன் என்பவே.

நந்தி :- வாழ்க தமிழ்! வாழ்க புலவர்! பெருந்தேவப் புலவரே! தமிழ்ச் சுவையும், வீரச்சுவையும் பாடல்களிலே பொங்கி வழிகின்றன, பாராட்டுகின்றேன். நீர் தகுதி வாய்ந்த தமிழ்ப் புலவர்! பல்லவ நாடெங்கும் தமிழ் தழைக்கச் செய்யும். அதற்கென நிரந்தர நிதியளிப்போம். அமைச்சரே!

**சிலா :-** (எழுந்து) மன்னர் பெரும!

**நந்தி :-** கலை வளர்த்தனர் எனது முன்னோர்கள்; காவியத் தமிழ் வளர்ப்பது எனது கடமை. தமிழ்த் தாயின் திருப்பணிக்காக புலவர் பெருந்தேவனுர்க்கு ஆண்டுதோறும் ஆயிரம் காடி நெல்லும், இருபது கழஞ்சு பொன்னும் வழங்கப்பட வேண்டும், பட்டயம் செய்து தாரும்.

**சிலா :-** கட்டளை!

**பெருந் :-** மன்னவ! வளர்க நின் தமிழார்வம்! வளர்க நின் கொற்றம்! என்றுமுள செந்தமிழ் போல் நின்று நிலவுக நினது புகழ்!

**சந்தி :-** (எழுந்து) மன்னர் பெரும! காவியப் புலவரை கௌரவித்தீர்கள், ஓவியப் புலவர் ஒருவர் தமது ஓவியத்தோடு வந்துள்ளார், நமது சபைக்கு.

**நந்தி :-** கௌரவிப்போம் தம்பி!

**சந்தி :-** மைத்ரேயரே! எடுத்துக்காட்டும் ஓவியத்தை.

**மைத் :-** (எழுந்து) மகா பாக்யம்! மகா பாக்கியம்! நாட்டியம், சிற்பம், சித்திரம் ஆகிய நற்கலைகளைப் பேணி வளர்க்கும் பெருந்தகையே! கலைஞர்களின் கற்பகத் தருவே! அடியேன் நமஸ்காரம். எனது ஓவியத்தைப் பார்த்து ரசிக்கப் படைக்கின்றேன், தங்கள் திருமுன்.

(ஓவியம் கொண்டு தர)

**நந்தி :-** (வாங்கிப் பார்த்து) பாட்டிசைக்கும் பாவாணன் நாட்டியமாடும் நங்கை மடவன்னம்! நன்று. இந்தப் பாடகனின் வடிவம் என் தம்பியை ஒத்திருக்

கிறதே! (பார்த்து) கற்பனை மிக நன்று, சங்கா! இதனைப் பார். பார்த்து மதிப்பிட்டு உனது கருத்தினைக் கூறுக.

(மன்னன் கொடுக்க, மகாராணி பெறுகிறார், உற்றுப் பார்க்கிறார்.)

சந்தி :- அண்ணா! மைத்ரேயன் ஓவிய மன்னன், வல்லவன் ஆக்கிய சித்திரம் இது. நீங்களே மதிப்பிட வேண்டும், ஒளி மிகுந்த முத்துக்கள் மன்னரின் மணி முடியைத்தானே அலங்கரிக்கவேண்டும்?

நந்தி :- தம்பி! இவர் உனது அன்புக்குரிய நண்பரென்று கருதுகின்றேன். மெய்தானே?

சந்தி :- இல்லை! உம்..... ஆமாம் ஒருவகையில் தெரிந்தவர்!

சங்கா :- மன்னர்பெரும! ஓவியம் பற்றிய எனது கருத்தை ஒளியாது சொல்லட்டுமா? தவறு இருந்தால்...

நந்தி :- கலைஞர் திருந்துகிறார். கலைத்துறையிலே தேர்ந்தவள் நீ! உன் மதிப்பீடுதான் பொருத்தமாயிருக்கும். கூறு சங்கா! விமர்சனம் கலைகளை வளர்க்கததானே?

சங்கா :- பொதுத் தோற்றத்திலே ஓவியம் குற்றமற்றது. இசையையும், நடனத்தையும் இணைத்திடும். கருத்து பாராட்டத்தக்கது! ஆனால், கலை நுணுக்கங்கள், கற்பனைத்திறன், பிரத்தியட்ச வருணனை மிகக் குறைவு! இதிலே குறிப்பிடத் தக்கது வீணை, இது தமிழ் நாட்டுக்குரியதல்ல. வடநாட்டுப் பாணியிலே உள்ளது. இதைத் தீட்டியவர் நிச்சயமாக வெளி நாட்டாராகவே இருக்க வேண்டும்.

நந்தி :- குற்றத்தை மறந்து குணத்தைப் போற்று! வோம். வளரட்டும் ஓவியக்கலை. மைத்ரேயரே

மைத் :- மகாராஜா!

நந்தி :- நீர் எந்த நாட்டைச் சேர்ந்தவரோ?

மைத் :- ஏன்? தமிழ்நாட்டான்!

நந்தி :- இல்லை, உண்மையை ஒளியாது கூறிடும்.

மைத் :- (தடுமாறி) மன்னிக்கவேண்டும், நான்..... நான்... .ஓவியன்....இருப்பது தமிழகமே....ஆனால், பிறந்தது வடக்கே....சாளுக்கியபுரம் என்றாலும்....

நந்தி :- காஞ்சிமா நகரில் வந்து கலை வளர்க்கின்றீர். அச்சம் ஏன்? நாடு, இனம், மொழி எல்லைகளைக் கடந்தவளன்றோ கலைமகள்! அப்பெருமகளை ஆராதிப்பதிலே எந்நாட்டவரும் பங்கு கொள்ளலாம். இதோ, இந்தப் பொன் முடிப்பு, உமது ஓவியத்திற்குப் பரிசு!

மைத் :- மகா பாக்யம்! மகா பாக்யம்!

[மன்னர் தர மகிழ்வோடு பெற்றுக் கொள்கிறான்.]

# காட்சி 9.

இடம்: வித்தியாவதி வீடு.

காலம்: பிற்பகல்.

(மனவேதனையோடு மைத்ரேயனும், சந்திரவர்மனும்)

சந்தி :- மகாராணியின் ஓவிய விமர்சனம், என் மனதை அறுத்துவிட்டது மைத்ரேயரே!

மைத் :- சித்ரவதையால் என்னைப் படுகொலையே செய்துவிட்டதே! சந்திரவர்மா! உமது அண்ணன் ஒரு மன்னனா? மடையன்! பெண் புத்தி கேட்கும் பித்தன்!

சந்தி :- என் மனம் பொறுமையை இழக்கின்றது!

மைத் :- ஓவியத்திலே உம்மைக் கண்டதும், மகாராணியின் மந்தகாச வதனம் போன போக்கைப் பார்த்தீரோ?

சந்தி :- ஆம்! என் உருவைக் கண்டு பொங்கியெழுந்த பொறுமைதான், அவர்கள் கலைக் கண்களையே குருடாக்கிவிட்டது!

மைத் :- வெளிநாட்டான் என்று என்னை இகழ்ந்தார்கள். தொலையட்டும்! சொந்த நாடு, சொந்த இனம், சொந்தத் தம்பி உனக்கென்ன மதிப்பளித்தார்கள்? அந்தச் சிங்காதனத்திலே நீர் இருந்திருந்தால்....?

சந்தி :- நடந்திருக்காது இந்த ஓரவஞ்சனை, மைத்ரேயரே! பொறுத்தது போதும், ஒழித்துக்கட்ட வேண்டும் என் சோதரனை!

மைத் :- (சிரித்து) மானக்கேடு வரும்போது மனக் கொதிப்பு, பிறகு சுடுகாட்டு அமைதி. நல்ல வேடிக்கை! என் ஆறுமாத அனுபவத்தில் இதுதானே உமது வாடிக்கையாக இருக்கிறது.

சந்தி :- வெறுத்து விட்டது மனம், வெந்து நீராகி விட்டது பாசம். இனி விட்டிருக்கப் போவதில்லை அந் தக் கட்டெறும்புகளை!

மைத் :- வெறும் வாய்ப்பந்தல்! படையெடுத்தால் உதவி செய்வதாக, பாண்டியனுக்கு ஓலையனுப்ப முடிவு செய்தோம்! ஒன்றரை மாதங்களாயின. இன்று வரை அனுப்பவில்லையே?

சந்தி :- சேனாதிபதியை வசப்படுத்துவதாக நீரும் தான் சொன்னீர். என்ன சாதித்தீர்?

மைத் :- எதைச் சாதிக்க வேண்டுமோ, அதைச் சாதிப்பதிலே இந்த மைத்ரேயன் அணுவளவும் பின் னடைய மாட்டான். சந்திரவர்மா! வியப்படைய வேண் டாம்! சேனாதிபதி விக்கிரமகேசரி, இப்போது என் கையில்! ஆனால், அந்த வீரனை நாம் பயன் படுத்த நீர் ஒரு மகத்தான தியாகம் செய்ய வேண்டும், முடியுமா?

சந்தி :- பல்லவ சிங்காதனத்தில் அமர இந்தப் பாவலன் எதையும் செய்ய சித்தமாயிருக்கிறான்!

மைத் :- வேறொன்றுமில்லை, சேனாதிபதியோடு வித்தியாவதி கொஞ்சி விளையாட நேர்ந்தால், நீர் நெஞ் சம் பதைக்கக் கூடாது! அவ்வளவுதான்.

சந்தி :- (திடுக்கிட்டு) ஆங்! என்ன சொன்னீர்?

**மைத் :-** மகுடம் பெறுவதற்கு மார்க்கம்.

[வித்தியாவதி வருகிருள்]

**சந்தி :-** (வெறுப்போடு) மகுடம் பெறுவதற்கு மார்க்கம்!

**வித்தி :-** (புரிந்து கொள்ளாமல்) மனமிருந்தால் எதற்குத்தான் மார்க்கமில்லை கண்ணாளா?

**மைத் :-** சபாஷ்! அப்படிச் சொல்லடி என் செப்புச் சிலையே!

**வித்தி :-** சுவாமி! யாரோ ஒரு குதிரை வீரன் உங்களைப் பார்க்க வாசலில் காத்திருக்கிருன்.

**மைத் :-** (வியந்து) அடடே! இதோ வந்திட்டேன்.

[அவசரமாகப் போகிருர்.]

**சந்தி :-** (வருந்தி) வித்தியாவதி! உன்னை மறந்து ஒரு கணமும் தாளமுடியாது என்ருல்.

[கட்டித் தழுவிக் கொள்கின்றனர்.]

## காட்சி 10.

இடம் : அந்தப்புரம்.

காலம் : பிற்பகல்.

[மன்னன் நந்திவர்மனும், மகாராணி சங்கா தேவியும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.]

நந்தி :- (காய் நகர்த்தி) இதோ வெட்டு! வெட்டி விட்டேன். இனி என்ன செய்ய முடியும் உன்னால்?

சங்கா :- அப்படியா கூறுகின்றீர்கள்......பார்ப்போம்... (காய் நகர்த்தி) இதோ கட்டிவிட்டேன், மன்னவரே! உங்கள் படை வீரர்களால் இனி ஒரு அடியும் நகர முடியாது! வெற்றி எனக்கு!

நந்தி :- (அதனை பார்த்து) ஆம், நான் தோற்றேன்! சங்கா! நான் தோற்றேன்! (அவள் கைகளைப் பற்றி எழுந்து) நீ பல கலையும் கற்ற கலையரசி மட்டுமல்ல, அரசியல் அறிவு பெற்ற ஞானத் தமிழரசி! சதுரங்கத்திலே பகைவனின் படையைக் கட்டி வெல்வது ஆட்சித் துறையிலே அறிவு கொண்டு பகைமை வெல்லும் திறமைக்கு அடையாளம்! சங்கா! மங்காத மாணிக்கமே! பல்லவர் பெருங்குடிக்கு நீயொரு அணையாத மணி விளக்கு!

[அன்போடு அணைக்கிறான்.]

சங்கா :- (மார்பில் சாய்ந்து) விளக்கு நான்; ஒளி நீங்கள், தென்றல் நான்; குளிர்ச்சி நீங்கள், கண்ணு

ளரே! அந்த வெற்று ஓவியத்திற்கு, நீங்களல்லவோ உயிர்!

நந்தி :- கண்ணே! தங்கக் குடத்திலே கொம்புத் தேன், என் தமிழரசியிடம் கலைத்தேன், காதல்தேன், அன்புத்தேன், அறிவுத்தேன், சுவைத்தேன், சுவைத் தேன் சங்கா! மகாராணி என்றால் சகல தகுதியும் பெற்ற நீதான் மகாராணி!

சங்கா : (நாணி) போங்கள் நாதா! போதும் பரிகாசம்!

நந்தி :- தாலாட்டுக்குப் பெயர் துயிலெழுப்பா? பாராட்டுக்குப் பெயர் பரிகாசமா கண்ணே?

சங்கா :- இல்லை சுவாமி. பண்பு!

[இவன் தழுவ, அவளும் தழுவு கிறாள், சிறுவன் நிருபதுங்கன் குரல் கேட்கிறது.]

நிருப :- அம்மா! அம்மா!

சங்கா :- (விலகி) நிருபதுங்கா! வாடா கண்மணி.

[நிருபதுங்கனும் சந்திரவர்மனும் உள்ளே வருகின்றனர்.]

நிருப :- அப்பா, அம்மா......

[தாய் அணைத்துக் கொள்ள]

சந்தி :- வணக்கம்.

நந்தி :- சந்திரவர்மா! ஏது நிருப துங்கன், உன்னோடு?

சந்தி :- கல்லூரியிலிருந்து வந்துகொண்டிருந்தான். வழியிலே சந்தித்தேன், இருவருமாகச் சேர்ந்து வந்தோம் அண்ணா!

சங்கா :- கல்வி கற்பது எப்படியடா கண்ணே இருக்கிறது?

நிருப :- யாருக்கு எப்படியிருந்தாலும், எனக்கு கற்கண்டுபோல் இனிப்பாக இருக்கிறதம்மா, எண்ணும் எழுத்தும் கண்களல்லவா?

சந்தி :- சபாஷ் துங்கா! கல்விதான் கலைகளின் ஜன்ம பூமியென்று, பெரியவர்கள் சொல்லுவார்கள், உண்மையில். .....

[மகாராணியைப் பார்க்கிறான்.]

சங்கா :- என்ன சந்தேகம்? கல்வி வளமற்ற கலையும், கலை வளமற்ற கல்வியும் உயிரற்ற சடலங்கள்தான்!

சந்தி :- அண்ணியாரிடம் ஒரு சந்தேக விளக்கம் பெற வேண்டும், முடியுமோ?

சங்கா :- ஏற்றதென்றால், முடிந்த வரையில் விளக்குகிறேன்.

சந்தி :- கலைகளின் படைப்புக்கு அடிப்படையாகக் கொள்ளத்தக்கது அன்பா? பக்தியா? சிறந்தது எது?

சங்கா :- அன்புதான் சிறந்தது!

சந்தி :- தப்பு! பக்திதான் சிறந்தது என்கிறேன்.

சங்கா :- பக்தி தன்னலம்; அன்பு பொதுநலம்! எவ்வாறெனில், ஆண்டவனை நாடி நிற்பது பக்தி; அனைத்துயிரையும் வாழ வைப்பது அன்பு! எனவே, அன்புதான் சிறந்தது.

சந்தி :- அப்படியானால், கலைகள் யாவும் தெய்வீக சானித்தியம் பெற்றவை யென்பது பொய்தானோ?

சங்கா :- தெய்வமே அன்பின் வடிவமாயிற்றே! அன்பே கடவுள்; அன்பே வாழ்வு; அன்பே உலகம்; அன்பே அறமாகும்! "அன்பு இலதனை வெயில்-போலக் காயுமே என்பு இலதனை அறம்" என்பது குறள் நீதி.

சந்தி :- பக்தியை இழிவு படுத்தும் தப்பான வாதம் இதை ஒப்ப முடியாது!

சங்கா :- உண்மையை ஒப்புவது நல்வாதம்! மறுப்பது விடிவாதம்!

நிருப :- (பந்தைக்காட்டி) சித்தப்பா! வரும்போது அங்காடியில் எனக்கு பந்து வாங்கிக் கொடுத்தீர்களே! ஏன்?

சந்தி :- இது என்னடா கேள்வி? விளையாடுவதற்கு.

நிருப :- (தூக்கிப் போட்டுப் பிடித்து) நான் விளையாடுவதை நீங்கள் விரும்பக் காரணம்?

சந்தி :- அதுவா? உன் மேலிருக்கும் அன்பு.

நிருப :- ஊம்!..... அதுதான் சித்தப்பா முக்கியம்! பற்று, பாசம், பக்தி எல்லாவற்றிற்கும் அடிப்படையே

இந்த அன்புதான். அதனுல்தான் அன்பே சிவம் என்று கூடச் சொன்னுர்களாம்! புரிந்ததா சித்தப்பா?

நந்தி :- (சிரித்து) சங்கா? செல்வன் கெட்டிக் காரன்! வாதத்தில் சந்திரவர்மனேயே மடக்குகிருனே!

சங்கா :- கற்குமிடம் நமது காஞ்சிக் கல்லூரியா யிற்றே!

நிருப :- சித்தப்பாவும் அங்குதானே படித்தார்! ஊரெல்லாம் சுற்றினுர். கற்றதை மறந்தார்! அறிவை மறந்து, அன்பே வேண்டாமென்று வாதம் புரியவும் துணிந்து விட்டார்.

சங்கா :- (சினந்து) நிருபதுங்கா! நாவடக்கிப் பேசு, யாரிடம் எதை, எப்படிப் பேசுவது என்ற வரம்பு வேண்டாமா? இதுவா படிப்பினுடைய பண்பு?

சந்தி :- மண்ணின் சாரம் மரத்தில், மரத்தின் சாரம் பழத்தில்! உன்னைச் சொல்லி என்னடா செய் வது? தந்தை சைவ மதம், தாய் சமண மதம், உனக்கு வாய் மதம்!

நிருப :- (மண்டியிட்டு வணங்கி) மன்னியுங்கள் சித்தப்பா! சிறுபிள்ளைத்தனமாகப் பேசிவிட்டேன். மன்னித்து விடுங்கள்.

சந்தி :- (சினந்து) பேசு! பேசடா பேசு! நீ பேசு வது கேட்டு பெற்ருேரும் மகிழ்வார்கள். பெருமையும் கொள்வார்கள். சின்ன புத்தியின் பயன், பின்னலல் லவோ தெரியும்! அண்ணு!......

நந்தி :- தம்பி! பயமரியாத இளங்கன்று, நிருப துங்கன் சிறுவன்.

சந்தி :- இன்று, சிறுவன், நாளை? பக்தியைத் தாழ்வுபடுத்தும் இவனது மனப்பான்மை. பக்தியின் அடிப்படையிலே மகத்தான கலைகளை நிர்மாணித்த நமது பல்லவப் பரம்பரைக்கே இழுக்கு! அண்ணா! இவர்கள் எண்ணத்திலே நமது முன்னோர்கள் அறிவிலிகள் அந்தகர்கள், மூடர்கள்! பேசுகிறார்கள், நீங்களும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்! என்னால் முடியாது. சே! அவமானம் அவமானம்!

[வெடுக்கென்று திரும்பி வேகமாகப் போகிறான்.]

நந்தி :- தம்பி! சந்திரவர்மா! தம்பி! (வருந்தி) என்ன பொல்லாங்கு! போய்விட்டானே!

சங்கா :- (அஞ்சி) நாதா! மன்னிக்க வேண்டும். எதிர்பாராத சம்பவம். விவாதத்திலே......

நந்தி :- (சினந்து) கல்வியின் அகம்பாவம் அரசோச்சியது! கருவத்தின் பரிகாசம் துள்ளவிட்டது. உங்கள் மமதையும் செருக்கும் என் மனதைக் குத்திக் குடைந்தன!

சங்கா :- நான் தவறாகப் பேசியிருந்தால்...

நந்தி :- (குறுக்கிட்டு) சங்கா! என் வேதனையை விரிவாக்க வேண்டாம். பேசாதே! போ!

[வெறுப்போடு முகம் திருப்பிக் கொள்கிறான் மன்னன்)

## காட்சி 11.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: முற்பகல்.

[மைத்ரேயனும், சேனுபதி விக்ரம கேசரியும் இருக்கின்றனர்.]

மைத் :- சேனுபதியாரே! சந்தேகமே வேண்டாம். எம்மோடு ஒத்துழைத்தால் எல்லா சுகபோகங்களையும் ஏற்றவகையில் பெறுவீர்.

விக்ர :- பாலை வெறுக்கும் பூனையேது சுவாமி? என்ருலும் மன்னருக்கு துரோகம் செய்வது?

மைத் :- மனம்போல் வாழ்வு பெற்றிட சுருக்கமான வழி! திட்டம் வென்ருல் திகட்டாத பேரின்பம்! பட்டம் பதவிகள்! பகட்டான யோகம்!

விக்ர :- தோற்ருலோ?

மைத் :- தோஷம் வராது! வெளிப்படையாகவா இருக்கும் நமது வேலைகள்?

[ஆத்திரத்தோடு வருக்கிருன் சந்திரவர்மன்]

சந்தி :- மைத்ரேயரே! மானம்! அரண்மனையில் என் மானமே போய்விட்டது! (சேனுபதியைப் பார்த்து) ஓ! சேனுபதியாரே? வாரும். வணக்கம்!

விக்ர :- வணக்கம்!

சந்தி :- உம்...! வந்து நெடுநேரமாயிற்ருே ?

விக்ர :- ஐந்து நாழிகை இருக்கும். சந்திரவர்மரே! மன்னரைக் குறித்து ஓவியர் சொன்னதெல்லாம்......

சந்தி :- நானே சொன்னதுபோல், எனக்கு உமது பேருதவி தேவை, கிடைக்குமென்று நம்பலாமோ ?

விக்ர :- உம்... எனது நலம் கவனிக்கப்படுமல்லவா ?

சந்தி :- தாராளமாக.,..

மைத் :- சபாஷ் ! இதுதான் புத்திசாலித்தனம். சந்திரவர்மரே ? அரண்மனையில் உமது மானம்போயிற்று என்றீரே ! எப்படிப்போயிற்று ?

சந்தி :- அரசியாரிடம் விவாதம் ! பக்தி பெரிதென்றேன் நான். அன்பே பெரிதென்று நமது சைவ சமயத்தையே அவமதித்துவிட்டாள் அந்த அமோகவர்ஷன் மகள் !

விக்ர :- பிறகென்ன ? சமணச் சாக்கடையிலே பக்திமணமா வீசும் ?

சந்தி :- துர்நாற்றம் ! துர்நாற்றம் ! அந்த சாக்கடைப் புழு பொடிப்பயல் நிருபதுங்கன், புண்படுத்தினன் எனது உள்ளத்தை !

மைத் :- மமதைகொண்டவர்கள் எதுவும் செய்வார்கள் !

விக்ர :- சந்திரவர்மரே ! சமண மதத்தவளான சங்காதேவியை மன்னவர் மணந்ததே தவறு, பட்டத்து

ராணியாக்கியது மாபெருந்தவறு. சைவம் கொலுவிருக்க வேண்டிய அரியாசனத்தில், சமணத்தைப் பார்க்குந் தோறும் பதைக்கின்றது என் மனம்!

சந்தி :- நெருப்பாக எரிகின்றது என்நெஞ்சம்!

மைத் :- கவலை வேண்டாம். எண்ணெயும் செத்தையுமாக நாங்கள் இருக்கிறோமே சித்தமாக!

சந்தி :- மூட்டுவோம் தீயை. எரிப்போம் எண்ணத்தில் மாறுபட்டோரை. செங்கோலைக் கவர்ந்து கொண்டு தேசத்தை விட்டே ஓட்டுவோம் மன்னனை.

மைத் :- சபாஷ்! சபாஷ்! சந்திரவர்மா! பிறந்து விட்டது ஆண்மை! நல்ல காலம்! (சிரிப்பு)

## காட்சி 12.

இடம்: கைலாசநாதர் கோயில்.

காலம்: முற்பகல்.

[காபாலிகர்—சக்திமுலேயர், பிரகார ஒதுக்குப் புறத்தில் தியானத்தில் அமர்ந்திருக்கிறார். பச்சை, கணிகை முல்லையைத் துரத்த இருவரும் ஓடி வருகின்றனர்.]

பச்சை :- (நின்று) முல்லே! முல்லே! என்சொல்லேக் கேக்க மாட்டியா? கேக்க மாட்டியா?

முல்லே :- முடியாது! என்னைத் தொட்டியா பல்லேத் தட்டிடுவேன். ஏய்யா! என்னை என்னுன்னு நெனச்சு கிட்டே?

பச்சை :- கோயில் தாசீன்னுதான்.

முல்லே :- கோயிலுக்குத்தானே? ஒனக்கில்லியே?

பச் :- நான்தான் பணம் குடுக்கிறேன்னு சொன்னேனே. நம்பிக்கையில்லியா?

முல் :- நம்பிக்கையும் மொகரக்கட்டையும்! இப்படிச் சொல்லி எத்தனைதடவைஎன்னை ஏமாத்தியிருக்கே?

பச் :- தோ பாரு முல்லே! போனதெல்லாம் மறந்திடு, சுந்திரவர்மன் நாளைக்கு எனக்கு ரெண்டு பொன் தர்றதாகச் சொல்லியிருக்கார், வாங்கினதும் அப்படியே மொனை முறியாமெ ஒங்கிட்டே குடுத்திடுறேன்! அப்பறம் நிரந்தமா நீ காதலி! நான் காதலன்! வித்தியாவதியும் சந்திரவர்மனும் போல, எப்படி?

முல்லை :- பச்சை! எதா இருந்தாலும் வீட்டுக்கு வா, பேசிக்கலாம். கோயில்லே வந்து இப்படியெல்லாம் நடக்கிறதை நிர்வாகி சக்திமுனையர் பாத்திட்டா என்ன ஆகுந் தெரியுமில்லே?

பச்சை :- என்ன ஆயிடுமாம்? அதெல்லாம் இவரு கிட்டே நடக்காது. நான் செய்யறது தவறுன்னு; தோ அந்தக் கோபுரத்திலே ஒரு முனிவரும் தாசியும் சல்லா பிக்கிற மாதிரி பொம்மை இருக்கே! இருக்லாமா கோயில்லே? தப்புதானே?

சக்தி :- ஜெய் ஈஸ்வரன்! ஜெய்காளி!

[இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கின்றனர். சக்திமுனையர் நிஷ்டையில் இருக்கிருர் ஒரு புறம்.]

முல் :- ஐயோ! சக்திமுனையார்!

பச் :- ஐயயோ! ஓடியா! ஓடியா!

[அவளை இழுத்துக்கொண்டு ஓட, எதிரே சேனுபதி விக்ர மகேசரி வருகிருர்.]

முல் :- (அஞ்சி) ஐயோ! சேனுபதி யார்!

பச் :- ஐயயோ! இந்தப் பக்கம், இந்தப் பக்கம் ஓடியா.

[இழுத்துக் கொண்டு வேறு பக்கம் ஓடுகிருன் பச்சை. விக்ரமகேசரி வருகிருன். நிஷ்டை கலைந்து எழுந்திருக்கிருர் சத்திமுனையர்.]

**விக் :-** சுவாமி ! வணக்கம் !

**சக்தி :-** ஜெய் ஈஸ்வரன் ! ஜெய் காளி ! சேனபதி ! என்னப்பா செய்தி ?.

**விக் :-** சுவாமி ! ஒரு முக்கியமான விஷயம்!

**சக் :-** என்னவோ அது ?

**விக் :-** மகாராணி சங்கா தேவியார் நமது சைவத்தின் தத்துவத்தை மன்னவர் முன்னலேயே பழித்துப் பேசினர்களாம் !

**சக் :-** (ஆத்திரமடைந்து) ஆங் ! என்ன துணிச்சல் ! அரண்மனையில் சைவத்திற்குப் பழிப்பா ? கண்டிக்கவில்லையா மன்னவர் ?

**விக் :-** வாழ்வில் பங்கு கொண்டவராயிற்றே ! கண்டிக்க வலிமையிருக்குமா ? சந்திரவர்மன்தான் சரியான சூடு கொடுத்திருக்கிறர் ; சுவாமி ! எத்தனை நாளைக்குத் தான் அந்த சமணப் பேயை இப்படியே விட்டிருப்பது ?

**சக்தி :-** (யோசித்து, கைகுவித்து) திரிபுரமெரித்த விரிசடைப் பெருமானே ! மாகாள பைரவ காபாலிக மூர்த்தி ! உன்னையும் உன் பக்தர்களையும் அவமதிப்பவர்கள் உயிர்மூச்சு விடலாமா இந்த நாட்டில்? கூடாது ! கூடாது ! விக்ரம கேசரி ! மனம் தளராதே ! கடமையைச் செய். தக்க சமயத்தில் மகேஸ்வரன் தண்டிப்பார் பகைவர்களை ! ஜெய் ஈஸ்வரன் ! ஜெய் காளி !

(கோஷமிடுகிறர்)

## காட்சி 13.

இடம்: காஞ்சி அரண்மனை

காலம்: முற்பகல்.

[மன்னன் நந்திவர்மன் சிந்தனையோடு உலாவ, சீலாதித்தரும் விக்ரம கேசரியும் நிற்கின்றனர்.]

நந்தி: (நிதானமாக) "கப்பம் செலுத்தவேண்டும். இல்லையேல் கடும் போர்க்குச் சித்தமாகவேண்டும்" உம்! (உரக்க) எவ்வளவு மமதையிருக்க வேண்டும் மன்னன் பங்கையனுக்கு? வரிப்புலியிடம் திறை கேட்டதாம் வாலறுந்த நரி. சிரிக்காதா உலகம்? சீலாதித்தரே! குறுக் கோட்டை மீது படையெடுத்துச் சென்று, சரிக்க வேண்டும் சாளுக்கியனின் ஆணவத்தை!

சீலா:- ஒப்புகிறேன் மன்னவரே! பல்லவப் பேரரசைப் பகைத்தோன், அதன் பலனை உணர வேண்டும். சாளுக்கியனை வென்றடக்கி நாம் கப்பம் பெறவேண்டும். ஆனால்.....

நந்தி:- என்ன ஆனால்?

சீலா:- அவன் நம்மீது படையெடுக்கிருனு இல்லையா வென்பதை, சற்றுப் பொறுத்துப் பார்த்தாலென்ன?

நந்தி:- சீலாதித்தரே! நம்மீது அவன் போர் தொடுக்க நினைத்ததே பெருங்குற்றமாயிற்றே! அதற்குத் தண்டனை நாம் அவன் மீது படையெடுப்பது தான்!

விக்ரம:- எனது கருத்தும் இதுவேதான்!

சீலா :- நன்று மாவேந்தே! சாளுக்கியபங்கைய னுக்கு இந்தத் துணிவு எப்படிப் பிறந்ததென்பது எனக் குப் புரியவில்லை! ஏதேனும் தூண்டுதல் இருக்குமோ வென்று ஐயப்படுகிறேன்.

நந்தி : இருக்கலாம். சொல்லுவோன் சொன்னால் கேட்போனுக்கு மதியெங்கே போயிற்று? மறுக்க வேண் டாம். வேற்று மன்னர்கள் அவனுக்குத் துணையாக வந்தாலும் சரி; வேரறுத்து வீழ்த்திவிட்டுத் தான் மறு வேலை! சேனைபதியாரே! செருமுனைக்குச் சித்தப் படுத் தும் நமது படைகளை!

விக்கி :- கட்டளை!

(வணங்கிச் செல்கிறான்.)

## காட்சி 14.

இடம்: அந்தப்புரம்

காலம்: பிற்பகல்

[மகாராணி சங்கா தேவி பாடிய வண்ணம், மகன் நிருபதுங்கனுக்கு வாட்போர் கற்பிக்கிறாள் (மகாராணி யின் வாள் விழுகிறது]

நிருப :- (களித்து) தோல்வி! என்னிடம் தோற்று விட்டீர்களம்மா; தோற்றுவிட்டீர்கள்!

சங் :- (வாளையெடுத்து) அவசரப்படாதே மகனே! அற்ப மகிழ்ச்சியில் அறிவை இழந்து விடாதே! வெற்றி யும் தோல்வியும் இடையிலல்ல, இறுதியிலே தெரிபவை! வீசு கத்தியை.

நிருப :- ஓ! இன்னும் இருக்கிறதா? இதோ உங் களை வெல்லாமல் விடுவதில்லை. உம்? (மீண்டும் வாட் போர். மன்னன் நந்திவருமன் வருகை)

நந்தி :- (மகிழ்ந்து) நன்று! நன்று! பேச்சிலே காரமும், வீச்சிலே வீரமும் மின்னலோடுகின்றன. என் மகன் வீரன்! மாவீரன்!

(பயிற்சி நிற்கின்றது)

நந்தி :- சங்கா! சகல கலாவல்லியே! புதல்வன் களப் போரில் வல்லவனாவான், இல்லை யில்லை, வல்ல வனாக்கிடுவாய் நீ!

சங்கா :- நாதா ! சிங்கத்தின் குருளை செம்மறியா டாகப் போனதில்லையே !

நந்தி :- அப்படியும் நினைக்கிறார்களே சில செப்படி வித்தைக்காரர்கள் !

சங்கா :- வித்தையிருக்கும் அவர்களில, விவேகம் இருக்காது !

நந்தி :- அவர்களில் ஒருவன் சாளுக்கிய மன்னன், நாம் கப்பம் கட்டவேண்டுமாம் அந்தப் பண்பற்ற பங்கயனுக்கு ! மறுத்தால் அவனைப் போரில் வெல்ல வேண்டுமாம் ! ஓலை விடுத்திருக்கிறான் உணர்வு கெட்டவன் !

சங் :- நமக்கா ? எப்போது நாதா ?

நந்தி :- இன்று தான் யானையை வம்புக்கு இழுக்கிறது சோணி நாய்க்குட்டி !

சங் :- என்ன செய்யப்போகிறீர்கள் நாதா ?

நந்தி :- குருக்கோட்டை முற்றுகையிடுவதாக ஓலையனுப்பி விட்டேன். நாளை மறுநாள் கிளம்புகிறது நமது சிங்கப்படை !

நிருப : அப்பா ! நானும் வருகிறேனே போர் முனைக்கு !

நந்தி :- எதற்கடா மகனே ?

நிருப : கப்பம் கட்டச் சொல்லி நமக்கு உத்திரவிட்டானே கபோதி ! அவன் தலையை நான் வெட்ட வேண்டும் ! எனது நாடு, எனது தாயகம் மாற்றானுக்கு அடி பணிந்து வாழும் நிலை வரக் கூடாதப்பா !

நந்தி :- (தட்டிக் கொடுத்து) நன்று மகனே! மெச்சினேன் உனது வீரத்தை! பல்லவரின் நந்திக் கொடி என்று பகைவன் முன்பு தாழ்ந்தது கிடையாது! போர்முனைக்குச் செல்ல உனக்குப் பருவம் வேண்டுமே! சிறுவனடா நீ!

நிருப :- ஆடுகளின் கூட்டத்தைக் கண்டு புலிக்குட்டி அஞ்சுவதில்லையே அப்பா!

சங் :- துங்கா! பொறு, ஆளப் பிறந்தவன் நீ! அநீதியை எதிர்த்துப் போராட எத்தனையோ சந்தர்ப்பங்கள் வரும்! உனது வீரம் விளையாடட்டும் அந்த வேளையில்!

நந்தி :- ஆமடா செல்வமே! நான் இல்லாத நேரத்தில் நீ தானே அன்னைக்கு துணை? நீ இரு மைந்தனே! நான் சென்று வருகிறேன் செருமுனைக்கு!

[தழுவி முத்தம் கொடுக்கிறான். மன்னன்.]

## காட்சி 15

இடம் ; பூங்கா

காலம் : மாலை

[மைத்ரேயன் விக்ரமகேசரி இரகசிய சந்திப்பு]

மைத் :- பொன்னான சந்தர்ப்பம்! போர்க்களத்திலே மாவேந்தரை ஒழித்துவிட வேண்டும்!

விக் :- முயற்சி, விபரீதமாக முடிந்து விட்டால்?

மைத் :- கவலை வேண்டாம். கர்த்தர் இருக்கிறார் காப்பாற்ற! படைத் தலைவர்க் கெல்லாம் தலைவன் நீர்! வாய்ப்பு இருக்கிறது செயல் முடிக்க! விவேகத்தோடு நடந்து கொண்டால்! பரிசு ஆயிரம் கழஞ்சு பொன்; பிறகு பல்லவ நாட்டு அமைச்சர் பதவி!

விக் :- இருந்தாலும் எப்படிச் செய்வதென்று......

மைத் :- சற்றும் மலைக்காதீர்! இப்படி வாரும்.

[ "மன்னர் போர்முனையில் பகைவனோடு போராடிக் கொண்டிருக்கும் போது, பின்புறமிருந்து முதுகிலே ஒரு குத்து. ஒரு வீச்சு உடனே மறைவு. அவ்வளவுதான் கூட்டத்திலே யாரோ எவரோ என்று போய் விடும்! அடிக்கடி வராது இதுபோல் அரிய சந்தர்ப்பம்" சேனாபதியின் காதருகே ரகசியமாகச் சொல்கிறான் மைத்ரேயன்.]

**மைத் ;-** (வெளிப்படையாக) என்ன சொல்லுகிறீர்?

**விக்ர :-** அப்படியே செய்து முடிக்கிறேன் சுவாமி!

(முரசு, தாரை, எக்காள ஒலி கேட்கிறது)!

**விக்ர :-** அதோ! முரசொலி கேட்கிறது! படை புறப்பட ஆயத்தமாகி விட்டது! நான் வருகிறேன். வணக்கம்!

[வணங்கிச் செல்கிறான்.]

# காட்சி 16

இடம் :- குறுக்கோட்டை அரண்மனை

காலம் : பிற்பகல்.

[மன்னன் பங்கயனும், அமைச்சரும் இருக்கின்றனர். பங்கையன் கையிலே ஓலை ஒன்று இருக்கிறது.]

பங் :- அமைச்சரே! மைத்ரேயர் மகத்தான ராஜ தந்திரி! நமது விருப்பம் தெரிந்து காரியத்தை நிறை வேற்றுவதில் மகா நிபுணர்! இந்த முடங்கலைக் கண்ட தும், இதில் கூறி இருக்கும் ஆலோசனையைக் கண்டு ஆச்சரியப்படுவார்; பிறகு ஆனந்தப்படுவார்! அதன் பிறகு காரியத்தை முடித்தே தீருவார்! என்ன நினைக் கின்றீர்?

அமை :- முடித்தே தீருவார் மகாராஜா! சந்தேகமே கிடையாது ஆனால், போர் நிலவரத்தை அதிலே கூற வில்லையே!

பங் :- போர் நிலவரம்! எப்படியும் வெற்றி நமக் குத் தான்! பல்லவ நந்திவர்மன் போர்முனைக்கு வந் தால் போதாதா?

அமை :- ஆமாமா! அதற்குத்தான் ஆளிருக் கிறதே!

[சாளுக்கிய வீரனும், காவலரும் வருகின்றனர். பணிந்து நிற்கின் றனர்.]

பங் :- வீரனே! உன்னிடம் முக்கியமான பொறுப்பு ஒன்றினைத் தரப் போகின்றேன்! தடையில்லாது நிறை வேற்றுவாயா?

வீரன் :- மகாராஜாவுக்காக இந்த அடிமை எதையும் செய்ய சித்தமா இருக்கிறேன்!

பங் :- நல்லது! நீ இந்த முடங்கலோடு குதிரை மீது பறந்து செல்ல வேண்டும் காஞ்சிமா நகருக்கு! அங்கே கணிகை வித்யாவதி வீட்டிலிருக்கும் நமது ராஜ தந்திரி மைத்ரேயரிடம் சேர்க்க வேண்டும் இதனை! மிக அவசரமான அவசியமான கட்டளை!

(வீரனிடம் முடங்கலைத் தருகிறான். வணங்கிப் பெற்றுக் கொண்டு)

வீரன் : மகாராஜா! அப்போதே புறப்படுகிறேன்!

[பணிந்து செல்கிறான் சென்ற வழியிலேயே சேனாபதி வருகிறான்]

சேனா :- பயங்கரமான தாக்குதல்! வேகமாகப் பரவுகிறது போர் நெருப்பு! பல்லவர் பெரும்படை மேலும் மேலும் குவிந்த வண்ணம் இருக்கிறது மகாராஜா!

பங் :- பல்லவர் படை மேலும் வருகின்றதா? எங்கிருந்து வருகின்றது? நந்திவர்மன் போர்முனைக்கு வந்தானா?

சேனா :- மாமன்னன் வரவில்லை! சேனாபதி விக்ரமனையே சமாளிக்க முடியவில்லையே நம்மால்! தாங்கள் போர்முனைக்கு வரவில்லை என்றால் வீரர்களின் உற்சாகம் மங்கிப் போகும்! பத்து நாட்கள் தாங்காது நமது படையின் பலம்!

பங்: அப்படியா? நான் போர்முனைக்கு வந்து தான் ஆக வேண்டுமா?

சேனு:- ஆம், மகாராஜா! புலிகேசியும், விக்கிர மாதித்தரும் போர்க்களம் சென்று யுத்தம் செய்தவர்கள் தானே!

பங்:- ஆம்! அமைச்சரே! புறப்படுவோம் போர்க் களம்!

[எழுந்து அமைச்சரையும் இழுத்துக் கொண்டு போகிறான் பங்கையன் சேனுபதியும் போகிறான்.[

# காட்சி 17

இடம் :- முல்லையின் வீடு

காலம் :- மாலை

[பச்சையும், அவளும் இருக்கின்றனர்.]

முல்லை :- எங்கே; நான் சொல்ற மாதிரி மடமடன்னு சொல்லு பார்க்கலாம்!

பச்சை :- முல்லை! இதிலே நான் கெலிச்சேன் என்கையாலே நாலு அரை நீ வாங்கிக்கணும்!

முல்லை :- சரி. "அடடா நரி கரடேறுதடா ஒன்பது நரியினில் ஒரு நரி சின்ன நரியடா சின்ன நரி முதுகினில் ஒரு பிடி நரை மயிரடா நரை மயிர் நுனியினில் புது மலர் மணமடா – புதுமலம் மணமதில் குமரியின் நினைவடா!"

பச்சை :- (நிதானமாக) அடடா, நரி கரடேறு தடா, ஒன்பது நரியினில் ஒரு நரி..... சின்ன, நரியடா' சின்ன நரி முதுகினிலே!... வந்து... வந்து...

முல்லை :- (வெடுப்பாக) பனங்காயி! சே! சே! இப்படி ஆமை வேகத்திலே ஆருந்தான் சொல்வாங்க! நீ என்ன!

பச்சை :- முல்லை! வேகம் பெரிசா! பாவம் பெரிசா! நான் புலவர் மகன். பாவத்தோட பக்குவமா, புரியராப்லதாஞ் சொல்வேன். அடடா, தடடா், தடா தடா வெல்லாம் ஒதவாது!

முல்லே :- அப்படின்ளு தோல்வி ! தோல்வி ! வேகம் ஒனக்கு வராது !

பச்சை :- நெனச்சிகிட்டே ! வச்சிப்பாரேன் ஒரு ஓட்டப் பந்தயம் ! நான்தான் கெலிப்பேன் !

முல்லே :- ஓட்டப்பந்தயமா ? அதிலே ஒளறுவாயனும் செ க்கலாம் ! அதெல்லாம் கதவுக்கு வெளியே ! இன்னொரு பந்தயம், அதிலே தோத்தவங்க கெலிச்சவங்களுக்கு மூனுமாசம் அடிமையா இருக்கணும். என்ன சொல்றே ?

பச்சை :- அடிமையா ? அப்படீன்ளு சொல்ற வேலேயெல்லாஞ் செய்யனுமோ ?

முல்லே :- ஆமாம். நான் கெலிச்சேன்னு வச்சிக்க, ஒனக்கு உத்தரவுபோடுவேன் சோறு, ஆக்கு – ஆக்கனும்–சேலே துவை--துவைக்கனும். வீட்டைப் பெருக்கு--பெருக்கணும். வென்னீர் போடு-- போடனும்-- படுக்கையை விரி--விரிக்கனும் !

பச்சை : நான் கெலிச்சா உத்தரவு போடுவேன் ! சோறுபோடு போடனும்--கை கழுவு-- கழுவனும்-- அப்பறம் படுக்கையிலே ஃஆயா படுப்பேன் ! காலேப்புடி--புடிக்கணும். வெத்திலேமடி--மடிக்கணும், வாயிலே வை--வைக்கணும், அப்பறம்... அப்பறம்... வந்து......

முல்லே :- கன்னத்திலே குடுன்னு சொல்லுவே, ஓங்கிக் குடுப்பேன் இப்படி.

[அவன் கன்னத்தில் அறைகிறுள்.]

பச்சை :- முல்லே ! ஏது ; ஏமாந்தா அறைஞ்சுடுவே போலே இருக்குதே !

முல் :- பந்தயத்திலே நான் கெலிச்சவ; ஒங்கணக் குப்படி நாலுக்கு இன்னும் மூனுபாக்கி! இந்தா வாங்கிக்கோ!

[அவள் அறைய அவன் அடிக்குத் தப்பி லாவகமாகப் பின்னல் நகருகிருன். தள்ளாடி உள்ளே நுழைந்த ஒரு வீரன் பச்சைமேல் விழுகிருன்.]

பச்சை :- (அஞ்சி ஐயயோ? இதென்ன பேயா? பிசாசா?

முல் :- எதுவுமில்லே. ஒரு ஆளு! (பார்த்து) அடடே! பாவம்! பசி, மயக்கம் போலிருக்குது)

வீரன் :- (குழறி) அம்மா, தாகம்......கொஞ்சம் தண்ணீர்!

[முல்லே ஓடிச் சென்று தண்ணீர் கொண்டு வருகிருள். பச்சை அதை வாயில் ஊற்றுகிருன். தெளிந்து எழுந்திருக்கிருன் வீரன்.]

பச்சை :- யாருப்பா நீ? என்ன ஒடம்புக்கு?

வீரன் :- (நடுங்கிக் கொண்டு) குருக்கோட்டையிலே இருந்து வருகிறேன். குருதை வெளியே நிற்குது. ஓவியர் மைத்ரேயரை அவசரமா பார்க்கணும், வழியிலே ஜொரம் வந்துடிச்சு. குளிரு தாங்க முடியலே. நாக்கெல்லாம் வரண்டு போச்சு ஐயா! மைத்ரேயர் வீடு எங்கேருக்குது?

முல்லே :- (சந்தேகித்து) அவசரமா பாக்கணுமா? அப்படி என்ன சேதிங்க? சொல்லுங்க!

**வீரன் :-** (நடுங்கிய வண்ணம்) ராஜாங்கசேதி ஓலே கொண்டாந்தேன். அவசரமா அவுருகிட்டே சேக்கணும், சேத்தப்புறம் நான் செத்தாலும் பாதகமில்லே. ஐயா ஐயா ! எடத்தைச் சொல்லுங்க ஐயா !

**பச்சை :-** இந்தாய்யா ! கெழக்காலே போரு மண்டபத்தெரு ; அதுலே வலது பக்கம் மூணுவது வூடு வித்தியாவதிக்குச் சொந்தம். அங்கதான் இருக்காரு மைத்ரேயர். பொறப்படு

*[வீரன் வணங்கிவிட்டு போகிருன் தள்ளாடிய வண்ணம்]*

**மூல்லே :-** (கடுப்பாக) நீ யொரு மனுஷன் ! நீ எங்கேருந்து வர்ருன்னு அவனேக் கேட்டியா ?

**பச் :-** கேட்டேன ! குருக்கோட்டையிலேருந்து !

**முல் :-** நம்மவனு ? அன்னியனு ?

**பச் :-** அன்னியன் !

**முல் :-** (வியந்து அடஐயா! குருக்கோட்டை மேலெ தானே நம்ம சக்கரவர்த்தி படையெடுத்திருக்காரு. இவன் அங்கேருந்து தானே சேதி கொண்டாந்திருக்கான். ராஜாங்க சேதின்னுனே ! நேர்மையா மகாராணிகிட்டே, மந்திரிக்கிட்டேல்ல போகணும் ? மைத்ரேயருகிட்டே போவானேன் ? ஏதோ மர்மம் இருக்குது ஐயா, இருக்குது !

**பச்சை :-** (யோசித்து) முல்லே ! மைத்ரேயர்கூட நம்ம நாட்டாரல்ல, தெரியுமா ஒனக்கு ?

முல் :- (வியந்து) அப்படியா? மண்டுவே! பொறப் படு வித்யாவதி வீட்டுக்கு, இளைய மன்னர் சந்திரவர் மரை இப்பவே பார்க்கணும், விபரத்தைச் சொல்லணும் !

பச் :- அவுரு சக்திமுனையரைப் பார்க்க கோயிலுக் கல்ல போயிருப்பார் !

முல் :- வா ! நாம்பளும் கோயிலுக்கே போகலாம் !

பச் :- கோயிலுக்கா ? முல்லை ! கோயிலுக்கே வா ?

முல் :- (பழித்து) ஆமா ; ஆமா ! கோயிலுக்கே தான் ! வா ! வா !

[அவளை இழுத்துக் கொண்டு போகிறான்]

## காட்சி 18.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: மாலை.

[கையிலே உள்ள ஓலையை பரப் பரப்போடு படித்துக் கொண்டிருக் கிருள் வித்தியாவதி.]

"பாண்டியன் ஸ்ரீ வல்லவன் படை எடுக்குமுன் காஞ்சியிலே நமது பன் றிக் கொடி பறக்க வேண்டும்! பாண் டியன் நமது நேச மன்னன். எனவே நம்மை எதிர்க்க மாட்டான். பல்லவ நாட்டைக் கைப்பற்ற சாதகமான சூழ் நிலை. தாமதம் கூடாது! உடனே சந்திரவர்மனை கொன்று விடவும், மிகவும் அவசரம்!"

—பங்கையன் சாளுக்கிய மன்னன்.

**மைத் :-** வித்யாவதி! என்ன ஓலை?

**வித்யா :-** (பதைத்து) ஆ! சண்டாளா! ஓவியனு நீ! சாளுக்கிய நாட்டின் ஒற்றன்! பல்லவ ஆட்சியைக் கவிழ்க்க வந்த அரசியல் கொலைகாரன்!

**மைத் :-** யார் கூறியது அப்படி?

**வித்யா :-** இதோ, இந்த ஓலை.

[விட்டெறிகிருள், பரபரப்போடு எடுத்துப்பார்த்து]

மைத் :- இதைக் கொண்டு வந்தது யார்?

வித்யா : ஒரு சாளுக்கியன். சாகக்கிடக்கிறான் கொல்லைப் புறந்தில்! வஞ்சகப் பேயே! இந்தப் பச்சைத் துரோகத்திற்காகவா நீ என் வீட்டில் குடியேறினாய்?

மைத் :- (சிரித்து) பைத்தியக்காரி! என்னடி முழுகி விட்டது? தோட்டிக்கு கண் பிணத்தில்! தாசிக்குக் கண் தனத்தில்! தேடி வரும் வாழ்வைத் தீதென எதுக் கிடும் பெண்ணுமுண்டோ?

வித்யா :- வாழ்வு! வஞ்சகத்தின் அணைப்பிலே வாழ்வா கிடைக்கும்? நரகம் கிடைக்குமென்று சொல்! நான் தாசியாக இருக்கலாம்; உன் போல் நன்றி மறக் கும் துரோகியல்ல!

மைத் :- (சிரித்து) கற்றுத்தந்த குருவையே மிஞ்சு கிறாயே! பேதையே! எலியைக் கொல்வது பூனையின் துரொகமல்ல! அதன் இயற்கை!

வித்யா :- ருத்ராட்சப் பூனையே! உன் இயற்கை யறியாமல் இத்தனை நாள் ஏமாந்து விட்டேன்! மாவேந் தர் நந்திவர்மன், இளைவர் சந்திரவர்மன்; இருவரையும் வஞ்சகமாய் மாய்த்துவிட்டு, காஞ்சியிலே சாளுக்கிய ராஜ்யம் நிறுவந்த சதிகாரா! உன் எண்ணம் ஈடேற நான் விடப் போவதில்லை.

மைத் :- முடியாது, பெண்ணே; முடியாது! ஈசனே வந்தாலும் என்னைத் தடுக்க முடியாது! காரியம் மிஞ்சி விட்டது. குருக்கோட்டைப் போர் முனையில் நந்திவர்மன் கொல்லப்பட்டிருப்பான். சந்திரவர்மன் இங்கு புதைக்கப்

படவேண்டியவன்! இதற்கு நீ உடன்பட்டேயாக வேண்டும்!

வித்யா: ஒருக்காலும் முடியாது!

மைத்:- வெண்ணெ திரளும்போது தாழியை உடைக்கதே! என் விருப்பம்போல் நடந்தால், நீ அரண்மனை நாட்டியக்காரி! அந்தஸ்தில் உயர்வு! பரிசு கொஞ்சமல்ல! பத்தாயிரம் பொற்காசுகள்!

வித்யா:- தூ! உன் பொற்காசு, என் கால் தூசு! என் காதலருக்கும் துளியளவும் துரோகம் செய்ய மாட்டேன்!

மைத்:- காதலர்! நானில்லாமல் எங்கேயடி வந்து விட்டார் காதலர்? உங்களைச் சேர்த்து வைத்தவன், பஞ்சு மெத்தையிலே கொஞ்சிச் குலாவிட வாய்ப்பளித்தவன் நான்! என் விருப்பத்தையா மறுக்கிறாய்?

வித்யா:- மறுப்பது மட்டுமல்ல, உம்மை அடியோடு வெறுக்கிறேன்;

மைத்:- பல்லாண்டு முயற்சியிலே கட்டி முடித்த கோட்டையடி, பாவி! தகர்த்துவிடாதே! தவிட்டுப் பொடியாகி விடுவாய்! பறந்துவிடும் பவிஷெல்லாம்!

வித்யா:- நான் கொலையுண்டாலும் சரி; கொலைக்காரியாக மாட்டேன்!

மைத்:- (தணிந்து) வித்யாவதி! எண்ணிப்பார் சற்று: எனக்காகச் செய். நல்ல சந்தர்ப்பம். சந்திர வர்மனைக் கொலை செய்ய வேண்டாம். சிறிதுநாள் உன்

வீட்டிலே சிறைப்படுத்தவாவது உதவு. மன்றாடிக் கேட்கிறேன்!

வித்யா :- அற்பனே! யார் யாரைச் சிறைப்படுத்துவது? சற்று பொறு; வருகிறேன்.

[வெளியே போக முயல வழி மறித்து]

மைத் :- (கடுமையாக) நில்! எங்கே போகிறாய்? (அங்கிருந்த வாளையெடுத்து) கள்ளி! ஒரு அடி எடுத்து வைத்தாய், உயிரைக் குடித்துவிடும் இந்த வாள்! இரண்டில் ஒன்று: என் சொற்படி நடக்கப்போகின்றாயா? இல்லை மடியப்போகின்றாயா?

வித் :- காதலனுக்குச்சிறை; தாயகத்திற்கு துரோகம்! என்னைச் சித்ரவதையே புரிந்தாலும் இதற்கு ஒப்ப மாட்டேன்!

மைத் :- பீடையே, ஒழிந்துபோ!

[வாளை வீச, அவள் லாவகமாக குனிந்து தப்புகிறாள். மீண்டும் வீச வாசற்படியின் வெளியிலிருந்து வாளொன்று மோதித் தடுக்கிறது. வாளால் மைத்ரேயனைத் தள்ளிய வண்ணம் சந்தரவர்மன் உள்ளே வருகிறான்.]

சந்தி :- (சினந்து) பெண் கொலைப்புரியத் தொடங்கிய பேயனே! என்ன, விபரீதத்தோடு விளையாடுகின்றாய்?

மைத் :- நல்ல சமயத்திலே வந்தாய்! நடந்ததென்ன தெரியுமா?

[வித்யாவதி, சாமர்த்தியமாக மைத்ரேயன் கையிலிருந்த ஓலையைப் பிடுங்குகிறாள்]

வித் :- (படபடத்து) ஐயோ! ஓவியனாக நடித்த ஒற்றன் இவன்! தங்களைச் சாய்க்க வந்த சதிகாரன்! ஐயயோ! கொல்லுங்கள் இந்த நல்ல பாம்பை! கொல்லுங்கள்!

சங் :- வித்தியாவதி! முல்லை கூறினாள். தெரியும் எனக்கு. ஒற்றனைத்தப்ப விடாது என் வாள்!

மைத் :- உங்களை வாழ விட்டு, நான் வாழ உத்தேசமில்லை. எனது கடைசி முயற்சி, கடைசி மூச்சாக முடிந்தாலும் சரி. இசைப் புலவரே!

சங் :- சதிகார சைத்ரிகரே! உம். வாய்வீச்சு வேண்டாம்! காட்டும் உமது வாள் வீச்சை!

[இருவர்க்கும் வாட்போர் நடக்கிறது. மார்பில் குத்துண்டு மாய்கிறான் மைத்ரேயன்]

மை :- ஆ! ... ஐயோ!... பங்கையா!... (மடிதல்)

வித் :- சுவாமி! கலைவளர்க்க வந்தவனல்ல மைத்ரேயன்! கலகம் வளர்த்து, பல்லவப் பேரரசின் பரம்பரையை அழிக்க வந்தவன். சாளுக்கிய மன்னனின் சதிக் கருவி. பாருங்கள் இந்த ரகசிய ஓலையை!

சங் :- (வாங்கிப் பார்த்து) ஆங்! எவ்வளவு மடத்தனமாக ஏமாந்திருக்கிறேன்! வித்தியாவதி! எப்படியோ நயவஞ்சகனிடமிருந்து நான் தப்பினேன்.

வித்: மன்னவர் நிலை? ஐயோ! போர்முனையில் அவருக்கு என்ன பொல்லாங்கு நேர்ந்ததோ தெரிய வில்லையே!

சந்தி :- (சிந்தனையோடு) போர்முனையில்....! போர் முனையில்....! மைத்ரேயன் ஏற்பாட்டின்படி மன்னவர் அங்கே மடிந்திருந்தால்.... இங்கு ஆட்சியில் அமர வேண்டியவன் நான்தானே? ஆம்! நல்லதொரு சந்தர்ப்பம் வாய்த்தது நான் மன்னனாக! இப்பொழுதே மகாராணியிடம் செல்வேன்; இந்த ஓலையைக் காட்டி, எனது ராஜ பக்தியை உறுதிப்படுத்திக் கொள்வேன்!

வித்: (மகிழ்ந்து) அம்மாடி!.... உள்ளம் திருந் தினீர்களா என் சுவாமி? மகிழ்வு தருவதுபோல் தோன் றினும், துரோகம் என்றைக்கிருந்தாலும்...

சந்தி: வெல்லாது என்கிறாய்! பொறு வித்யாவதி; பிறகு வந்து விபரம் கூறுகிறேன்.

[வேகமாகச் செல்கிறான்.]

## காட்சி 19

இடம்: காஞ்சி அரண்மனை

காலம்: மாலை

[ஆலோசனை மண்டபத்தில் ராணி சங்காதேவியும்--அமைச்சர் சீலாதித்தரும் இருக்கின்றனர்.]

**சங்கா :-** மன்னரில்லாத வேளையிலே மாபெரும் தீங்கு! அமைச்சரே! பாண்டியன் சீவல்லபன் பல்லவ நாட்டின்மீது இப்போது போர் தொடுக்க வேண்டிய காரணம்?

**சீலா :-** எதுவும் கிடையாது தேவி! இது சந்திரவர்மரின் சதித் திட்டம்!

**சங்கா :-** ஆதாரம் என்ன?

**சீலா :-** இதோ, நமது ஒற்றர்கள் பாண்டிய வீரனிடமிருந்து கைப்பற்றிய முடங்கல்! (கொடுக்கிறான்)

**சங்கா :-** (வாங்கிப்படித்தல்)

காஞ்சி இளவல் சந்திரவர்ம பல்லவர்க்கு, வணக்கம். யாவுமறிந்தோம். உமது சகோதரன் நந்தி வர்மனை வீழ்த்தவும், உம்மை அரியாசனத்து ஏற்றவும் நமது படைபுறப்பட்டு விட்டது. வரும் மதியத்தன்று பெண்ணையாற்றங்கரையிலே தங்கும். மற்ற காரி

யங்கட்கு படைத்தலைவன் எல்லப்ப
நம்பியோடு தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம், பாண்டிய மன்னன்
சீவல்லப தேவன்.

துரோகம் அமைச்சரே! மாபெரும் துரோகம்! அண்ணனைக் கொல்வது; ஆட்சியைக் கைப்பற்றுவதாம்! எண்ணக் குலை நடுங்கும் ஈனத்தனம்! எப்படித்தான் துணிந்தார்? அன்பு பெரிதென்றேன் அன்றொரு நாள்; பரம்பரைக்கும் பங்கமென்றாரே சந்திரவர்மன்; பல்லவப் பரம்பரைக்கும் புகழ் சேர்க்கும் காரியமா இது? அடுக்குமா இந்த அநியாயம்? சந்திரவர்மன் பல்லவப் பெருங் குடியிலே ஒரு பாபி!

சீலா: பேசிப் பயனில்லை மகாராணி! தொடங்கி விட்டது சூழ்ச்சிப் படலம்! வெல்ல வேண்டும் பகையை! வேரறுக்கவேண்டும் சதியை!

சங் :- அதற்கு என்ன செய்யவேண்டுமென்கிறீர்?

சீலா :- தக்க நடவடிக்கைகளை இப்பொழுதே எடுக்க வேண்டும்! வஞ்சகத்தை வாழவிடக் கூடாது! காட்டிக் கொடுக்கும் கயவர்களைப் பூட்டிவைக்க வேண்டும் சிறைச் சாலையில்.

[ஒரு வீரன் வருகிறான்]

வீரன் :- வணக்கம் மகாராணி!

சங் :- என்ன செய்தி?

வீரன் :- இளைய மகாராஜா தங்களைப் பார்க்க விரும்புகிறார்.

[அமைச்சரும் மகாராணியும் பார்த்துக் கொள்கின்றனர்]

சங் :- திருடன் தலையாரியிடமே வருகிறான். நல்லது; வரட்டும்.

[வீரன் செல்ல சந்திரவர்மன் வருகிறான்.]

சந் :- வணக்கம் தேவி! விபரீதச் செய்தி யொன்று! ஓவியனாக நடித்தான் சாளுக்கிய ஒற்றன்! நமது ஆட்சியைக் கவிழ்த்த சூழ்ச்சி செய்தான் அந்த மைத்ரேயன்!

சங் :- அப்படியா? உண்மையாகவா?

சீலா :- அவர் உமது நண்பராயிற்றே!

சந்தி :- நண்பனாகக் கோலமிட்ட நரிக்குட்டி! தேவி! இதோ பாருங்கள், சாளுக்கிய மன்னன் சதி வோலை! (கொடுத்து) இதைக் கண்டதும், துண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்தினேன் அந்த வீணனின் உடலை!

சீலா :- அடடா! கொன்றே விட்டீரோ? நன்று செய்தீர்!

சங்கா :- (படித்து) ஆ! மைத்ரேயன் திட்டப்படி, குறுகோட்டைப் போர்முனையிலே மன்னவர் வஞ்சகமாய்த் தாக்கப்பட்டிருந்தால்...

சீலா :- அப்படியொரு திட்டமா? ஆனால், நானறிவேன் இதுவரை மன்னவர் போர் முனைக்கே போகவில்லை!

சந்தி :- போர்முனைக்குப் போகவில்லையா? ஏன் அமைச்சரே?

சீலா :- எலியைக் கொல்வதற்குப் புலி தேவையில்லை! மன்னவர் களம் புகுமுன்பே பகைவரின் பலம் சரிந்து விட்டதே!

சங்கா :- என்றாலும், அவர் உடனே அறிய வேண்டும், இந்த அநியாய சதித் திட்டத்தை!

சீலா :- பாண்டியன் குறுக்குவழிச் செய்தியோடு, இதனையும் சேர்த்து இப்பொழுதே அனுப்புகிறேன், மகாராணி!

சந்தி :- (வியந்து) பாண்டியன் குறுக்கு வழிப் படையெடுப்பா? எப்போது? ஏன்? எவ்வாறு தெரிந்தது?

சங்கா :- மன்னவரை வீழ்த்தி, சின்னவரைச் சிங்காதனத்தில் ஏற்ற, திட்டப்படி புறப்பட்டுவிட்டது சீவல்லபன் படை. பாண்டியப்படை வென்றால் நீர்தான் பல்லவ சக்கரவர்த்தி! ஏன்? அப்படித்தானே?

சந்தி :- (அஞ்சி) ஆங்!... அபாண்டம்! எனக்கும் அந்தப் படையெடுப்புக்கும் சம்மந்தமே கிடையாது!

சங்கா :- உமக்காகவே படையெடுப்பு!

சந்தி :- ஆதாரமில்லாத குற்றச்சாட்டு!

சங்கா :- பாவம்! உமக்கு வந்த ஓலை உம் கையிலேயே கிடைத்திருந்தால், இங்கு வந்தே இருக்க மாட்டீர்! மதிவளம் மிக்க மைத்துனரே! ஓவியன் மைத்ரேயன் சதிக்கு ஆதாரம், சாளுக்கிய மன்னனின் முடங்கல்! உமது சதிக்கு ஆதாரம், இதோ பாண்டிய வேந்தனின் பட்டோலை!

[காட்டுகிறாள்]

**சந்தி ;-** (அஞ்சி) ஆ! என்ன?..... என்ன?..... எனக்கொன்றுமே தெரியாதே! ஏதோ எங்கனமோ நடந்திருக்கிறது!

**சீலா :** கள்ளனுக்குள் குள்ளன் பாய்ந்தான்; குள்ளன் ஒழிந்துவிட்டான்! கள்ளன் கலங்குகின்ருன் அகப்பட்டுக்கொண்டு!

**சங் :** அமைச்சரே! எரியும் தீயில் எண்ணெ வார்க்காதீர்! எனக்கும் பேசத்தெரியும்!

**சங் :** அது எனக்கு நன்ருகத் தெரியுமே! ஆனல், விவாதம் புரிய நேரமில்லை மைத்துனரே! மைத்ரேயன் சதிக்கு உம்மிடமே மரணதண்டனை பெற்றுவிட்டான். உமது சதிக்கு நான் சிறைத்தண்டனை அளிக்கிறேன் உமக்கு. மன்னவர் வந்தபிறகு செய்வதைச் செய்யட்டும்! யாரங்கே?

**வீரர் இருவர் :** (வந்து வணங்கி) மகாராணி!

**சங்கா :** இவரைச் சிறையிலே வையுங்கள்!

**வீரர்கள் :** உத்திரவு.

[தலைகவிழ்ந்து நிற்கும் சந்திரவர்மனை இழுத்துச் செல்கின்றனர்]

**சங் :** அமைச்சரே! இந்த இரு சதி ஓலைகளோடு...,

**சீலா :** இப்பொழுதே மன்னருக்குச் செய்தியனுப்புகிறேன் மகாராணி!

[ஓலையைத் தர அமைச்சர் வாங்குகிருர்]

❋

## காட்சி 20

இடம்: முல்லை வீடு

காலம்: மாலை

[முல்லை பாட்டை முனகியபடி பூ தொடுத்துக்கொண்டிருக்கிறாள். பச்சை வருகிறான். புதிய கவி ஒன்றை புனைந்தவண்ணம்]

பச்சை: மலர் தொடுக்கும் மங்கையின் கை பூவோ பூவு! மகிழ்ந்தேற்கும் ஆடவன் மெய்....? மகிழ்ந்தேற்கும் ஆடவன் மெய்....?

முல்லை: (எழுந்துவந்து கடுப்பாக) சாவோ சாவு!

பச்சை: சபாஷ்! பூவு—சாவு, பூவுக்கும்—சாவுக்கும் மிகப் பொருத்தம்!

முல்லை: அட பாவி! என்னய்யா அர்த்தம்? தமிழை ஏனய்யா இப்படிக் கொலை பண்றே? புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுகிட்ட கதையால்ல நடக்குது! பூவு—சாவுன்னு அடுக்கிட்டாப் போதுமா? அடுக்கு மொழிக்கு அழகு போதுமா? அர்த்தம் வேணுமா?

பச்சை: முல்லை! நான் தமிழ்ப்புலவன். சாக்ரதை!

முல்லை: அது நீயல்ல; ஒங்கப்பன்!

பச்சை: எங்கப்பனுக்கு நான் மகனில்லையா?

முல்லை: அப்பன் மகனாக இருக்க அறிவு தேவையில்லே. தமிழ்ப் புலவனாக இருக்க அது தேவையாச்சே!

மலர் தொடுக்கும் மங்கையின் கை பூவோ பூவுன்னே! உவமானம் ரொம்ப சரி; அதை மகிழ்ந்தேற்கும் ஆம்பளே யோட ஓடம்புக்கு உவமானம் எது?

பச்சை: (யோசித்து) புரியலியே!

முல்லே: பொன்னூன்னு சொல்லு அழகுக்காக பொருந்தும்! கல்லூன்னு சொல்லு வலிவுக்காக! தப்பில்லே! சாவுன்னு சொன்னேன், சரின்னுட்டியே பச்சை! சாவறது சரிதானு?

பச்சை: ஐயய்யோ! நான் சரின்னு சொல்லலேயே முல்லே! யாராவது கேட்டுடப்போருங்க! சரின்னு சொல்லியிருந்தா சேனுபதி குருக்கோட்டைப் போர் முனேக்கே சாவடிக்க இழுத்துகிட்டுப் போயிருப்பாரே! நான் சாவமாட்டேன்; நான் எதுக்கு சாகணும்? ஐயோ! நான் சாகவே மாட்டேன்!

முல்லே: வீரன் ஒருமுறை சாவானும்! கோழை பல முறை செத்து செத்துப் பிழைப்பானும்!

பச்சை: (வீரமாக) முல்லே! அப்படி ஒண்ணும் என்னேக் கோழேன்னு நெனேச்சுடாதே! நான் கொடு வாளு! ஆமா!

முல்லே: (கிண்டலாக) ஆமாம்! பத்தூழாக்கு கம்மஞ்சோறும், பறங்கிக்காய்க் கொழம்பு முதல், பாவற் காய் வத்தல் வரைக்கும் மொத்தமா உள்ளே தள்ளறதிலே! கொடுவாளில்லே, பெரிய ஆளு!

பச்சை: அடியே! என்னே சோத்து சொக்கன்னு சொல்றே? ஆம்பளே சிங்கமடி நான். ஓ்ஃகோன்னன்!

[ஓடிச்சென்று அறுவாமனையொன்றை எடுத்துவந்து தலைக்குமேல் ஓங்குகிறான். வளைந்த அதன் முனை அவன் தலையின் பின்புறத்தைத் தாக்குகிறது.] "ஐயோ அம்மா!" என்று அப்படியே உட்காருகிறான். சிரிக்கிறாள் முல்லை. அப்போது அவள் தாய்க்கிழவியின் குரல் கேட்கிறது.]

தடிப்பயல்! மடையன்! காசுக்குச் பயனில்லாத காலாடி! இதங்கெட்டவன்! எச்சல் பொறுக்கி! நன்றி கெட்ட நாய்!

[தாய்க்கிழவி வருகிறாள். தன்னையே பேசுவதாக பச்சை விழிக்கிறான்.]

முல்லை: அம்மா! யாரது? நீ என்ன சொல்றே?

தாய்: அந்தப் பய அரமனையிலே வேலை பார்க்கிறானே எதிர்த்த வீட்டு யாழ்ப்பாணன்! ஆபத்தான சங்கதின்னு ஓடோடியும் வந்து சொல்லவேணும் தடியன்! திங்கறதுன்னு மட்டும் வந்திடுறானே!

முல்லை: அரமனையிலே யாருக்கு? என்னமமா ஆபத்து?

தாய்: அடி மகளே! சந்திரவர்ம ராசா என்னமோ பண்ணிருன்னு மகாராணி சிறையிலே அடைச்சிட்டாங்களாமே!

முல்லை: என்னம்மா அநியாயம்?

பச்சை : எங்க ராசாவுக்கு சிறையா ? சந்திர வர்மருக்கா சிறைத்தண்டனை ? முல்லை ! வித்தியாவதி எப்படி வேதனைப்படருளோ தெரியலியே ! ஓடியா ! ஓடியா !

[அருவாமனையை எறிந்துவிட்டு பச்சை ஓடுகிறுன். அவன் பின்றைல் ஓடு கிருள் முல்லை]

# காட்சி 21.

இடம்: குறுக்கோட்டை போர்க்களம்

காலம்: பிற்பகல்

[நந்திவர்மன் படைக்கும், பங்கையனின் படைக்கும் கடும் போர் நடக்கிறது. பங்கையனும், விக்கிரம கேசரியும் பொருதுகின்றனர். சாளுக்கிய படை சிதறியோடுகின்றது. துரத்தியடிக்கின்றனர் பல்லவர்கள்.

வெற்றிச் சங்கம் முழங்குகிறது. கோட்டையின் மீது நந்திக்கொடியேற்றப்படுகிறது. பங்கையன் சங்கிலியால் பிணைக்கப் படுகிறான். இது நிழற்காட்சி.]

# காட்சி 22.

இடம் :- குறுக்கோட்டை அரண்மனை

காலம் : மாலை.

[வெற்றியடைந்த நந்திவர்மன் வீற்றிருக்க, முன்னால் நிறுத்தப்பட்டுள்ளான் கண்டுண்ட பங்கையன், விக்கிரம கேசரி, மற்றும் வீரர்கள் நிற்கின்றனர்.]

நந்தி : பரம்பரைப் பகைமைக்காகப் போர் முறுக்கிய பங்கைய மன்னா! இப்போது நீ எனது அடிமை! திறை செலுத்த மறுத்ததோடு திறை கேட்கவும் துணிந்தவன் உயிர்ப்பிச்சை வேண்டி நிற்கின்றாய் என் முன்னால்! பரிதாபத்திற்குரிய உனது நிலையை உணர்கிறாயா? இல்லையா?.... மேலைச் சாளுக்கியத்திலிருந்து மேலால் உதவி கிடைக்கும், பார்த்துக் கொள்ளலாம் நந்திப் பல்லவனை, என்று கருதுகின்றாயா?

பங் : அந்த எண்ணம் அணுவும் எனக்கில்லை, மன்னர் பெரும! தங்கள் பெருமையும், பேராண்மையும் உணராது தவறு செய்து விட்டேன், மன்னிக்க வேண்டும்! எனது நாடாளும் உரிமையை எனக்கே தந்தருள வேண்டும்! நந்திக் கொடியின் கீழே பன்றிக்கொடி பறக்க, நன்றி மறவாது கப்பம் செலுத்தி நல்லாட்சி நடத்துவேன். கருணை செய்யுங்கள்!

நந்தி : (சிறிது யோசித்து) நன்று, நான் கூறுகின்ற நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளுவீரா?

பங் : ஒப்புக் கொள்ளுகின்றேன்!

நந்தி : எனது பிரதிநிதி யொருவரை மேலாளராக நீர் ஏற்க வேண்டும் வேண்டும். ஆட்சியின் நடைமுறைகள் அவரது அனுமதியின் பேரிலேயே நிகழ வேண்டும். ஆண்டுக்கொருமுறை தப்பாது கப்பம் செலுத்த வேண்டும். தேவைப்படும்போது உமது படைகளை என் உதவிக்கு அனுப்ப வேண்டும். என்ன கூறுகின்றீர் ?

பங் : ஒப்புக்கொள்ளுகிறேன் மகாராஜா ! துடுக்குத்தனம் செய்தேன், தொல்லை கொடுத்தேன் தங்களுக்கு ! மறந்து மன்னித்தீர்கள் ! ஆஹா ! இத்தகைய பெருங்குணத் தோன்றலுக்கு எத்தகைய தீங்கு செய்யத் துணிந்தேன் நான் ?

விக்ர : போர் புரிந்ததைத் தானே சொல்லுகிறீர் ?

பங் : இல்லை சேனாபதியாரே ! பல்லவத் தலைநகரில் குழப்பம் புரிந்தது, ஆட்சியைக் குலைக்க மைத்ரேயனை அனுப்பினேன் மதிகெட்டவன்.

விக்ர : (அஞ்சி) உம்... ஆமாம் ! அதனாலென்ன ? ஒன்றும்தான் நடக்கவில்லையே !

பங் : (சமாளித்து) ஆமாம் ! நடந்திருந்தால் நான் பழிகாரன் !

நந்தி : பாதகமில்லை ! பங்கையா ! செய்துவிட்ட தவறுகளுக்காக வருந்தும் தன்மை இருக்கிறதே ; அதுவே தவறுக்குப் பரிகாரம் ! சேனாபதி !...

விக் : மன்னர் பெரும !

நந்தி : நமது ஒப்பந்த நிபந்தனைகளை கருமத் தலைவரிடம் கூறும் ! செப்புப் பட்டயம் தயாராகட்டும் !

விக்ர : கட்டளை மன்னவா !

[பங்கையனை அழைத்துக்கொண்டு செல்கிறார் சேனாபதி.]

## காட்சி 23.

இடம்; மலைக்காடு.

காலம்: மாலை

நந்தி: சேனாபதி! படை வீரர்கள் தங்குவதற்குரிய வசதிகள் யாவும் செய்து முடித்தீரா?

விக்ர: செய்துவிட்டேன் மகாராஜா!

நந்தி: சேனாபதி! தோல்வியடைந்த பங்கையன், நமது நிபந்தனைகள் யாவும் அப்படியே ஒப்புக்கொண்டானே; அதன்படி நடப்பானா? நீர் என்ன நினைக்கிறீர்?

விக்ர: நிச்சயம் நடப்பான் மகாராஜா! போரில் பெருத்த சேதம். நமது பலத்தை நன்றாக உணர்ந்து விட்டான்.

[ஒரு வீரன் வந்து வணங்குகிறான்]

நந்தி: காஞ்சியினின்றும் வருகிறாயா? என்ன செய்தி?

வீரன்: மகாராணியாரின் முடங்கல்.

[கொடுக்க]

நந்தி: (வாங்கிப் படித்து) ஆ! இவ்வளவு பெரிய சதியா? எனது ஆட்சியைக் கவிழ்க்கவும், என்னைத் தொலைக்கவுமா? இவ்வளவு துணிவா?

விக்ர: மகாராஜா விளங்கவில்லையே!

நந்தி: குறுக்கோட்டைப் போர் முனையிலேயே என்னைக் கொல்ல ஒரு திட்டமாமே! உமக்கேதேனும் தெரியுமா?

விக்ர: தாங்கள்தான் போர்க்களத்திற்கே வர வில்லையே!

நந்தி: வந்திருந்தால் சதி நடந்திருக்குமோ?

விக்ர: ஒருக்காலும் நடந்திருக்க முடியாது, நானல்லவோ அருகில் இருப்பேன்! தங்களுக்காக எனது உயிரையே கொடுத்திருப்பேனே!

நந்தி: இது சாளுக்கிய மைத்ரேயனின் சதி ஒழிந் தது; ஒழிந்தான்! மற்றென்று. சந்திரவர்மனை மன்ன னுக்க காஞ்சியின் மீது படையெடுத்துள்ளானும் பாண்டி யன் சீவல்லபன். சதிகாரப்பயல்கள்! என்ன வேலை செய்கின்றனர்கள்!

விக்ர: விபரீதமாக இருக்கிறதே!

நந்தி: வினையமாகவும் இருக்கிறது, என் தம்பியின் வஞ்சகம்! சேனுபதி! பாண்டியன் படை, சந்திரவர்ம னின் செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது, பெண்ணையாற்றங்கரையில்! சிறையிலே கிடக்கிறன் அந்த சகோதரத் துரோகி!

விக்ர: (வியந்து) சிறையிலா? சந்திரவர்மரா?

நந்தி: ஆம்! கிடக்கட்டும் அவன். விடக்கூடாது பகைவரை! இப்படியே பெண்ணையாற்றங்கரை சென்று பழி பாவத்திற்குப் பரிந்து வந்திருக்கும் பாண்டியன் படையை அழித்து நிர்முலமாக்கிவிட்டுத்தான் காஞ்சி

நகர் திரும்ப வேண்டும். நாடறிய வேண்டும்-நயவஞ்சகர் உணர வேண்டும் கழற் சிங்கனின் வல்லமையை! சேனுபதி! நாளை அருணேதயத்திற்கு முன் புறப்படச் சித்தமாகட்டும் நமது படை!

விக்ர: கட்டளை மகாராஜா.

[வணங்கிச் செல்கிருன்.]

நந்தி: வீரனே! வா, மகாராணிக்கு ஓலையொன்று தருகிறேன்!

வீரன்: உத்தரவு.

[மன்னவர் செல்லத் தொடருகிருன் வீரன்]



# காட்சி 24

இடம்: கைலாசநாதர் கோயில்

காலம்: முற்பகல்.

[காபாலிக சக்திமுனியர் தன் பீடத்திற்கருகே கோடாலியொன்றை கையிலேந்திய வண்ணம் நிற்கிறார். பின்னர் தோளில் சார்த்திய வண்ணம் ஆத்திரத்தோடு உலாவுகிறார். வேகமாக அங்கு வந்த முல்லை, அந்தக் காட்சியைக் கண்டு அஞ்சிப் பின்னடைகிறாள்.]

சக்தி: முல்லை! நில்! ஏன் போகிறாய்?

முல்லை: (அஞ்சி) வந்து..... இல்லிங்க.... வந்து..... கையிலே கோடாரி! பார்த்தா பயமா இருக்குதுங்க சுவாமி! வந்து.... நான் போயிடுறேனுங்க.

சக்தி: (அன்பாக) முல்லை! அஞ்சாதே! உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன்! இரவு நடுச்சாமத்தில் மாகாளை பைரவிக்குப் பலிபூசை! எருமைக் கன்றும், வெள்ளாடும் கிடைத்து விட்டது! மதுபானம் இன்னும் கிடைக்கவில்லை, கொண்டு வருவதாகப் பணம் வாங்கிச் சென்ற பாபி ஏமாற்றி விட்டான் என்னை! இன்னும் வரவில்லையே சண்டாளன்! நரகத்திலேதான் தள்ளுவாள் ஓம்காளி! நாத சொரூபிணி! ஜெய் காளி!

முல்லை: ஐயையோ!... சுவாமி!... எனக்குப் பயமாயிருக்குதே!

சக்தி : (அஞ்சி) முல்லே! மது படைக்காவிட்டால் மாகாளி மனம் நோவாளே! பக்திக்குப் பங்கம் வந்திடுமே! எனக்கொரு உதவி செய்வாயா முல்லே? ஆம்; நீ செய்யத்தான் வேண்டும்! (வெடுக்கென்று அவள் கையைப் பற்றி) தஞ்சம் நீதான்! வேண்டிய பணம் கொடுக்கிறேன்! மதுபானம் வாங்கிக் கொடு! வாங்கிக் கொடு!

முல்லே :- ஐயையோ? அது என்னல் முடியாதுங்க (திமிர)

சக்தி : விடமாட்டேன், விடமாட்டேன் உன்னே!

[விடாமல் பிடிக்க, அவள் இழுக்க இருவரும் போராட பச்சை வருகிருன்.]

பச்சை : ஜெய் ஈஸ்வரன்! ஜெய்காளி!

சக்தி : (கையை விட்டு விட்டு) ஜெய்ஈஸ்வரன்! ஜெய் காளி!

பச்சை : சுவாமிகளே! ஈஸ்வரனும் காளியும் கை கோர்த்திருந்த காட்சி கண் கொள்ளாத காட்சி! இன்னும் ஒரு தடவை கிடைக்குமா அந்தத் திருக்கோலம்?

சக்தி : பக்தா! எமது வேட்கையைத் தவருகக் கருதிவிட்டாய்! இப்போது எமக்கு வேண்டியது மங்கையல்ல; மது!

பச்சை : அடிசக்கை! அது (முல்லேயைக் காட்டி) இங்கேதான் இருக்குதோ?

முல்லை: பச்சை! பைரவி பூசைக்கு கள்ளு வேணு மாம்! என்னை வாங்கிக் கொடுக்கச் சொல்லி கெஞ்சுறாரு! நல்ல பணம்! நீதான் வாங்கிக் கொடேன்!

பச்சை: ஆமா, காளி பூசைக்கு கள்ளு எதுக்கு?

முல்லை: நீ ஒண்ணு! கள்ளு மாத்திரமா! வெள் ளாடும், சேவக் கோழியும் வேணுங்குதே!

பச்சை: ஆங்! சுவாமி! நெசந்தானுங்களா? இதுக்குப் பேருதான் சைவமுங்களா? தன்னுயிரைக் கொடுத்தும் மன்னுயிரைக் காப்பதல்லவா சைவம்னு சொல்லுவாங்க.

சக்தி: ஜெய்காளி! ஜெய் ஈஸ்வரன்! பக்தா! தெளிவில்லாத நெஞ்சம்! உயிரைக் கொல்லாதவரும், புலால் உண்ணாதவருமான ஆதிசைவரைப்பற்றி என் னிடம் பேசாதே! அவர்கள் பேடிகள்! நெஞ்சுரமற்றவர் கள்! சுடலையிலே விளையாடி மண்டையோட்டிலே மது வருந்தும் மகேஸ்வரன் பேரருளை ஒருக்காலும் அவர் களால் பெற முடியாது! காபாலிக சைவத்தின் கடுமை யான பக்திக்குத்தான் முக்தியுண்டு! மோட்சமுண்டு!

பச்சை: ஆஃகா! தெளிஞ்சி போச்சு எனக்கு! இந்த சைவந்தான் சரியான சைவம்!

சக்தி: பக்தா! பூசைக்குரிய மதுபானம் கொண்டு வா,

பச்சை: பணத்தை மொதல்லே கொடுக்கணும்! அப்புறம் எங்க ரெண்டு பேரையும் கோயில்லே, சோடி யிலே கண்டா வெரட்டாமே இருக்கணும்! இதுக்கு

ஒத்துக்கிட்டா இப்பவே கொண்டாறேன். எப்படி முல்லை?

முல்லை : சரியான நிபந்தனை!

சக்தி : ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி! உங்கள் பாபத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்! (பணம் எடுத்துக் கொடுத்து) இதோ பணம்! கொண்டு வா மதுவை! இல்லையேல் சாபம்! சாபம்!

பச்சை : (பணம் பார்த்து மகிழ்ந்து) வேணுமுங்க! தோ வந்துட்டேன்! முல்லை!... பணம் வா, வா!

[அவளை இழுத்துக் கொண்டு உற்சாகத்தோடு ஓடுகிறான்.]

## காட்சி 25

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: மாலை

[சந்திரவர்மனை நினைந்து அவள் சோகத்தோடு பாடிக் கொண்டிருக்கிறாள்.]

ஒளியிலா நிலவாகினேன்
உணர்விலா உடலாகினேன்
தெளிவிலா உரையாகவோ?
தீந்தமிழ் சுவைமாளவோ?

தென்றலும் புலாச்சுதே
தெய்வமகை விடலாச்சுதே
என்னருங் கலைவாழ்விலே
இன்னலும் புகலானதோ (ப. க.)

முல்லை: வித்யாவதி! நீ இப்படி அழுதுகிட்டே இருக்கிறது நல்லதில்லே!

வித்யா: (வருந்தி) அவரது அன்புக் கடலிலே மீனாகத் துள்ளினேன். காதல் வானிலே வானம்பாடியாகப் பறந்தேன்! இப்பொழுது தணலில் புழுவாகத் துடிக்கின்றேனடி முல்லை!

முல்லை: என்ன செய்யறது? நம்ம கொலத்திலே நீ ஒருத்தி கொடுத்து வச்சவன்னு இருந்தோம், ஒன் விதியும் இப்படியாச்சு. நம்ம சிவன் கோயில் பரிபாலகர், சக்தி முனையர்கூட உனக்காக வருந்தினாராம்.

வித்யா: கழுத்தறுக்கும் கபாலிகருக்கும் என்மேல் கருணை பிறக்கிறது! மகாராணியின் மனமிரங்க வில்லையே!

முல்லை: இவ்வளவுக்கும் காரணமே அந்த சமண ராணிதான்னு சொல்றார் சக்திமுனையர்.

வித்யா: இல்லவேயில்லை! மகாராணி மாசற்ற செம்பொன்! இது மைத்ரேயன் மூட்டிவிட்ட பெரு நெருப்பு!

[பச்சை வேகமாக வருகிறான்.]

பச்சை: வித்யாவதி! வித்யாவதி! சேதி தெரியுமா ஒனக்கு?

வித்யா: என்ன சேதி?

பச்சை: குருக்கோட்டையில் பங்கையனைத் தோற் கடிச்ச மகாராஜா, பாண்டியன் படையெடுப்பு தெரிஞ்சு, அப்படியே பெண்ணையாற்றுப் பக்கமாக வந்து, தொள் ளாறுங்கிற எடத்திலே, பாண்டியன் படையை அடிச்சு நொறுக்கி படுசூரணமாக்கிட்டாராம்!

வித்யா: (மகிழ்ந்து) ஆஃகா! பகைவரை வென் றாரா நமது பார்த்திபர்? முல்லை! நமது மாவேந்தரின் வீரம் குன்றின் மேல் நந்தா விளக்கடி!

பச்சை: அந்த வெளக்கு, நாளை மறுநாளு நகரத் துக்கு வரப்போவுது! வரவேற்புக்கு பிரமாத ஏற்பாடு கள்ளாம் நடக்குது!

வித்யா: அப்படியா?

பச்சை: வித்யாவதி! இன்னொரு பிரமாதமான சங்கதி! ஆனா இப்ப இங்கே சொல்லமாட்டேன்!

வித்யா : ஏன் ?

பச்சை : அது ரகசியம்! முல்லை இருக்கருளே!

வித்யா : முல்லைதான் உனக்கு வெல்லமாயிற்றே ?

பச்சை : இல்லே! காசு கொடுககலேன்னு, இப்ப கசப்பு மருந்தாயிட்டா!

முல்லை : (சாகசமாக) போ பச்சை! நாந்தான், உசுரையே வச்சிருக்கேன் ஒமேலே! நீ என்னடான்னு...

பச்சை : அப்படீன்னு இனிமே என்னை அடிக்க மாட்டியே ?

முல்லை : சத்தியமா அடிக்கமாட்டேன்.

[தலைமேல் அடிக்கிருள்]

பச்சை : அம்மாடி! எவ்வளவு பலமான சத்தியம்! வித்யாவதி அந்த ரகசியம் என்ன தெரியுமா ?

வித்யா : சொன்னுல்தானே தெரியும் ?

பச்சை : நம்ம சந்திர்வர்ம ராசா சிறையிலேயிருந்து தப்பிட்டாரு !

வித்யா : (மகிழ்ந்து) ஆ! தப்பிவிட்டாரா என் சுவாமி! ஒப்பிவிட்டாரா எனக்கு வாழ்வு தர? முல்லை! என்னடி முழிக்கிருய்? போன இன்பம் வந்ததடி பொன்னுன முல்லை! என் கண்ணுன முல்லை!

[ஆர்வம் பொங்க அவளைக் கட்டிக் கொள்கிருள்.]

## காட்சி 26

இடம்: காஞ்சி அரசவை.

காலம்: முற்பகல்.

[காவலர், குடிமக்கள், அறிஞர்கள், குழுமி இருக்கின்றனர். கட்டியம் கூறப்படுகிறது. முறைப்படி மாமன்னன் நந்திவர்மன் சபைக்கு வருகிறான்.]

கட்டியக்காரன்: ராஜாதி ராஜ, ராஜ விக்ரம, அவனி நாரண, பல்லவர் கோளரி, பரதுர்க்கமர்த்தன, கம்பீர கழற்சிங்க தனிச்செங்கோல்பாய, வீர புரந்தர நந்திவர்ம மகாராஜா பராக்! பராக்! பராக்!

[எல்லோரும் எழுந்து நின்று அமருகின்றனர்.]

பெருந்தேவனார்: (எழுந்து) மாமன்னன் வாழ்க! வீரத் தமிழ்க்கோ மறவன் வாழ்க! பகை வென்ற சக்கரவர்த்தி வாழ்க!

[பாடுகிறார் விருத்தம்]

வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாராள் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு
ஆர் வேந்தர் ஏற்பார் எதிர்?

எல்லோரும்: ஆஃகா! ஆஃகா!

பெருந்: கொற்றவன் வாழ்க! செங்கோல் வாழ்க!

எல்லோரும்: வாழ்க! வாழ்க!!

நந்தி: புலவரேறு பெருந்தேவனார்க்கு மிக்க நன்றி! என்னைக் குதூகலத்தோடு வரவேற்றுவாழ்த்திய குடிப்பெருமக்களே! நாட்டுக்காவலரே! ஆயத்தாரே! அறங்கூர் அவையத்தோரே! அனைவர்க்கும் நன்றி உடையேன்!

ஆணவத்தால் கப்பம் கட்ட மறுத்ததோடு கப்பம் கட்டுமாறும் ஆணையிட்டான் சாளுக்கிய பங்கையன்; அடிமைப்பட்டான்! வஞ்சகத்தால் நம் மீது போர் தொடுத்தான் பாண்டியன்; தோல்வியுற்றான்! இந்த இருபெரும் போர்களின் வெற்றிகளுக்கும் காரணமாக இருந்த வீரப்பெருமக்கள் அனைவரையும் நெஞ்சுகந்து பாராட்டுகிறேன்!

முன்னணிப் படையிலே, தன்னுயிரைத் திரணமாக மதித்துப் போரிட்டு மடிந்த மாவீரர் பட்டியல் என்னிடம் இருக்கிறது! அந்த வீரர்களின் சொந்த ஊர்களிலே அவர்களுக்கு வீரக்கல் நட்டு விழா வெடுக்க வேண்டும்! அவர்தம் குடும்பத்தார்க்கு இறையிலியாக நிலம் வழங்கப்பட வேண்டும் மற்றுமுள்ள வீரர்களுக்கு தனிச்சிறப்பு செய்து பரிசுகள் வழங்குவேன்! இந்த மாபெரும் வெற்றியின் நினைவுச்சின்னமாக,கைலாசநாதர் ஆலயத்தில் நிரந்தரமாக திருவிளக்கேற்றிடப் பத்துக்கழஞ்சு பொன் வழங்குகிறேன்.

சீலாதி: மன்னர்பெரும! பல்லவ நாட்டிலே பஞ்சம் தலைகாட்டியிருக்கிறது! பரிகாரம் தேட வேண்டும்.

நந்தி: அமைச்சரே! ஊர்கள்தோறும் பஞ்சம் போக்கும் பணியினுக்காக அமைக்கப்பட்டுள்ள "பஞ்சவார வாரியங்கள்" ஒழுங்காக நடைபெறு கின்றனவா? குடிமக்கள் பஞ்சவாரமாக முறை யோடு தானியங்களை வழங்குகிருர்களா?

சீலாதி: தானியம் விளைப்போரே தக்க வசதி யின்றி அல்லற்படுகின்றனரே!

நந்தி: அப்படியா? வரப்புயர்ந்தாலே கோன் உயரும்! சீலாதித்தரே! போர் வெற்றியினை விளை வாக குருக்கோட்டையிலே எனக்குக கிடைத்த ஏராளமான செல்வங்களை ஏழை உழவர்கட்கும், பஞ்சவார வாரியங்களுக்கும் தானமாக வழங்கு கிறேன் ஏற்றன செய்யும்!

பெருந்து: (எழுந்து) ஆ.:கா! மக்களைப் புரக் கும் மாவேந்தர் வாழ்க!

எல்லோ: வாழ்க! வாழ்க!

நந்தி: மகிழ்ச்சியால் எனது சபை மாண்புற்ற இந்த வேளையிலே, மனம்நோகும் அந்தச் செய்தி யினை மறக்கமுடியவில்லை எனுல்! மாற்ருந்தாய் மகன் என்ற வேற்றுமையின்றி நான் நடந்து கொண்டிருந்தும், தம்பி சந்திரவர்மன் சதிகாரனுக, அரசத்துரோகியாக, காட்டிக்கொடுக்கும் கயவனுக மாறிவிட்டானே! நாட்டுக்கும் நல்ல குடிக்கும் எத் தகைய இழுக்குத் தேடிவிட்டான்!

சிலாதி: (எழுந்து) மன்னர் பெரும! சந்திர வர்மன் சிறையிலிருந்தும் தப்பிவிட்டார்.

நந்தி: (வியந்து,சினந்து) ஆங்! தப்பிவிட்டானு தாந்தோன்றி? எங்கு ஒடி ஒளிந்தாலும் சரி, விடக் கூடாது! தண்டிக்கவேண்டும் தன்னலக்காரனை! அந்தக் கயவனைக் கண்டுபிடித்து காவற்கூடத்திலே ஒப்படைக்கின்றவர்க்கு,கணிசமான பரிசுவழங்கிட வேண்டும்! பறையறைவித்து நாடெங்கும் பரப்பும் இச்செய்தியினை!

சிலாதி: கட்டளை!

[தலைதாழ்ந்து ஒப்புகிறார்]

## காட்சி 27.

இடம்: அந்தப்புரம்.

காலம்: பிற்பகல்.

[மகாராணி சங்காதேவி மன்னனை வரவேற்க ஆயத்தமாக இருக்கிருள். மன்னரின வருகையின் சின்னமாக எக்காள ஒலி கேட்கிறது]

சங்கா: (ஆர்வமாக) அடியே! வந்துவிட்டாரடி மன்னவர்! எடுத்துவாருங்கள் ஆரத்தியை! எடுத்து வாருங்கள் மலர் மாலையை!

நந்தி: (வந்து) கண்மணி சங்கா!

சங்கா: காதல் மன்னவரே!

[அரசி மாலை சூட்டுகிருள்; இரு பெண்கள் ஆரத்தி கொண்டுவர பாடியவண்ணம ஆரத்தி சுற்றுகிருள். பிறகு தட்டத்தினின்றும் நீராஞ்சனம் எடுத்து மன்னரின் நெற்றியில் இடுகிருள். பன்னீர் தெளிக்கிருள்]

நந்தி: (மகிழ்ந்து கரம்பற்றி; கண்மணி சங்கா! களிப்பால் துள்ளுகிறது நெஞ்சம்! நான் துய்க்

கின்ற மகிழ்வும், பெருமையும் உனது நல்லெண்ணத்தின் பிரதிபலிப்புகள்!

சங்கா: நாதா! மிகைபடக் கூறுகின்றீர்கள்! தங்கள் வெற்றிக்காவியத்தின் பொன்னேட்டிலே நான் ஓர் எழுத்து! வீரக்களஞ்சியத்தின் செம்பொருளில் ஓர் துரும்பு!

நந்தி: சிறு துரும்பு கலன் நீர் தேக்கிற்றும். என் செங்கரும்பு நாட்டிற்கு வந்த பேராபத்தையே நீக்கிற்றே! சங்கா! நீ மகாராணி என்ற சொல்லின் மகத்தான இலக்கியம்!

சங்கா: (நாணி) தங்கள் அன்பின் பெருக்கு என்னை நாணவைக்கிறது! ஆனாலும், இவ்வளவு அதிகமாக புகழக்கூடாது நாதா!

நந்தி: மேலும் சுவைபடப் புகழ்வதற்குப் புலமை இல்லையே என்று வருந்துகிறேன் நான்!

[சிறுவன் நிருபதுங்கன் ஓடி வருகிறான்]

நிருபது: அப்பா! அப்பா!

நந்து: வாடா கண்ணே! (வாரி அணைத்து) நிருபதுங்கா! நீ விரும்பியபடியே பகைவரை வென்றேனடா! நமது தாயகம் மாற்றானுக்கு அடிபணியவில்லை! மாற்றானையே நம்முன் பணியவைத்தது!

நிருபது: சிங்கத்தின் முன்பு சிறு நரிகள்

என்னப்பா செய்யமுடியும்? ஆனாலும், சித்தப்பா செய்தது ..........

நந்தி: பெரிய துரோகம்! அன்றொருநாள் துடுக்குத்தனமாக அவனைப் பேசினாய்! அடுக்காதென்று கோபித்தேன்! இப்பொழுது தெரிகிறது அவனது வக்கிரபுத்தி! சங்கா! உன் கருத்துக்கள் எதுவும் பலிக்காமல் போவதே இல்லை!

சங்கா: மீண்டும் புகழ்ச்சிப்படலம் ஆரம்பமாகின்றதோ?

நந்தி: நாணுகின்றாயா? அப்படியானால் சொல்லவில்லை. சங்கா! நமது வெற்றிக்காக நாளை சிவாலயத்தில் வழிபாடு. நீ வருவாயோ?

சங்கா: என் பாக்கியமாயிற்றே நாதா!

நந்தி: ஆ...கா!... மதபேதமற்ற உன் பரந்த நோக்கம், மக்களுக்குத் தெரியவில்லையே!

சங்கா: என்னுள்ளம் தாங்களறிந்தால் போதாதா?

நந்தி: நானறிந்துதானே உன்னை விரும்பினேன்; மணந்தவனுக்கல்லவோ தெரியும் மல்லிகையின் நறுமணம்!

[அன்போடு முகவாய்க்கட்டையை பிடிக்கிறான்]

## காட்சி 28.

இடம்: தெரு

காலம்: மாலை.

[சேனாபதி விக்ரமகேசரி வந்து கொண்டிருக்க, பின்னால் வந்த பரதேசி ஒருவன் உடையைப் பற்றி இழுக்கிறான்]

விக்ரம: (சினந்து) யாரடாவன் பரதேசிப் பயல்? என்ன குறும்படா உனக்கு?

பரதே: சிவோகம்! சச்சிதானந்தம்! அடியேன் சக்திமுனையரின் சிஷ்யன்!

விக்ரம: பொய்! அவரது சிஷ்யர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். நீ யார்?

பரதே: சிவோகம்! சச்சிதானந்தம்!

விக்ரம: (சினந்து) சிவோகமாவது, சச்சிதானந்தமாவது! பிச்சைக்கார பயலே!

[கையால் தாடியைப் பற்ற தாடியும், மீசையும் கையோடு வந்துவிடுகின்றன எதிரே சந்திரவர்மன நிற்கிறான்]

விக்ர; (வியந்து) அடடே! சந்திரவர்மா! மன

னிக்க வேண்டும்! மன்னிக்க வேண்டும்.

சந்திர: முதலில் அந்தக்கோலத்தை கொடும்; பிறகு பேசுவோம்!

[மீசையும் தாடியும் வாங்கி அணிந்துகொண்டு, சுற்று முற்றும் பார்த்துக் கவலையோடு]

சந்திர: சேனாதிபதியாரே! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்துவிட்டது! திட்டம் நிறைவேற வேறுமார்க்கம் இல்லையே!

விக்ரம: என் விஷயம் தலைதப்பினதே தம்பிரான் புண்ணியமாய்விட்டதே! ஓலையில் என் பெயர் இருந்திருந்தால், ஒழிந்திருக்குமே என் வாழ்வு!

சந்திர: சேனாதிபதியாரே! நடந்ததை மறந்து விடும் ஏதேனும் புதுவழி காண்போம்! இனி நீர் தான் எனக்குத்துணை! (கைப்பற்றி) எப்படியாவது நான் மன்னனாகவேண்டும். உமது விருப்பம்போல் நடந்துகொள்வேன். என்ன சொல்கிறீர்?

விக்ர: (யோசித்து) நான் கேட்பதைத்தருவீரா?

சந்திர: நிச்சயமாக!

விக்ர: (தயங்கி) வடிவழகிவித்யாவதி எனக்கு வேண்டும்!

சந்திர: இவ்வளவுதானே? எடுத்துக்கொள்ளும். அந்தப்பச்சைக்கிளியைக்காட்டிலும் பல்லவ இராஜ்யம் எனக்குப்பெரிதாயிற்றே!

விக்ர: (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்! சந்திரவர்மரே! நாம் அடிக்கடி சந்திப்போம்;வித்யாவதியை.........

சந்திர: தக்க சமயத்தில் உம்மிடம்ஒப்படைப்பேன்! கவலை வேண்டாம்!

[பச்சையும், முல்லையும் வாக்குவாதம் புரிந்தவண்ணம் வருகின்றனர், இவர்கள் பதுங்குகின்றனர்]

பச்சை: முடியாது! முடியாது!! முடியாது!!!

[யாரோ என்றஞ்சி சந்திரவர்மரும் விக்ரமகேசரியும் மறைவில் பதுங்குகின்றனர்]

முல்லை: ஏம்ப்பா முடியாது?ஏன் முடியாதுன்னேன்?

பச்சை: உச்சாணிக் கொம்பிலே இருக்கிற இச்சிலிப்பழத்தை ஒன்னாலெ மட்டுமல்ல. என்னாலெ கூடப்பறிக்க முடியாது!

முல்லை: எப்படியும் எனக்குப் பழம்வேணும்.

யாராலும் பறிக்கமுடியாதுன்னு சொல்றே? நீ ஆம்பளே! நான் பொம்பளே! வா என்னோட, நான் பறிச்சுத்தர்றேன் ஒனக்கு!

[அவனைப்பிடித்து இழுத்துக் கொண்டுபோகிருள்; சந்திர வர்மரும், விக்ரமகேசரியும் வெளியே வருகின்றனர்]

விக்ரம: (அலட்சியமாக) பூ! இதுகள் தானு?

சந்திர: சேனுதிபதியாரே! பச்சை என் கையாள்! பித்தன் போலிருந்தாலும், எனக்காக எதையும் செய்வான். நம்பிக்கையோடு நமக்குப் பயன்படுவான்.

விக்ர: நல்லது! நான் வரட்டுமா?

சந்திர: (வருந்தி) சேனுதிபதியாரே! மறைந்து வாழும் இந்த மானக்கேடு என்று தீரும்?

விக்ர: கலங்காதீர்! காலம் வரும்! நான் வருகிறேன்!

[வேகமாக செல்கிருன்]

## காட்சி 29.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: இரவு.

[சோகத்தோடு வித்யாவதியும், பச்சையும் இருக்கின்றனர்]

பச்சை: வித்யாவதி! நீ சந்திரவர்மனை நெனச்சு இப்படி வெளக்குக்கு முன்னாலை வச்ச வெண்ணெய் மாதிரி உருகறது நல்லால்லே! அவரைப் பிடிச்சி அரசாங்கத்திலே குடுத்து, பரிசு வாங்க ரொம்பப்பேரு காத்துக்கிட்டிருக்காங்க! அவரு முன்னையபோல பகிரங்கமா வெளியிலே தெருவிலே நடமாடமுடியுமா? நீயே சொல்லு.

வித்யா: வேண்டாமே, என் வீட்டிலேயே மறைவா இருந்துவிடட்டுமே! நான் பாதுகாக்க மாட்டேனா என் சுவாமியை?

பச்சை: சரிதான்! புததுலே மாட்டிகிட்டபாம்பு மாதிரி புடிக்கிறது ரொம்பசுலபமாபோச்சு, வித்யாவதி! அவரு மாறுவேஷத்திலே இருக்காருன்னு தெரிஞ்சிகிட்ட காவலாளிங்க, மாறுவேஷம் போட்டுகிட்டே தேட ஆரபிச்சிருக்காங்க! தெரியுமா?

வித்யா: அவர்களும் மாறுவேடம போடத் துவங்கிவிட்டார்களா? அப்படியானல் சத்திரம்

சாவடிகளில்கூட தங்கவிடமாட்டார்களா? என் சுவாமியை, உணவு. உடைகளுக்கு என்ன செய்கிறாரோ தெரியவில்லையே!

பச்சை; அந்தக் கஷ்டத்தை ஏங்கேக்கறேபோ; பாத்தாக் கண்ணு வலிக்குது. நெனச்சா நெஞ்சு வலிக்குது!

[முல்லையும், சித்தவைத்தியர் வேடத்தில் சந்திரவர்மரும் வருகின்றனர்]

முல்லை: தோ! சரியான வைத்தியரோட வந்துட்டேன் வித்யாவதி! ஒங்கையைக் காட்டு இவருகிட்டே! ஒடம்புநோய் மாத்திரமல்ல; மன நோயுந் தீக்கிற மகா பெரிய சித்த மருத்துவராம் இவரு!

வித்யா: (சந்தேகத்தோடு பார்த்து) வைத்தியரை வைத்தியரென்று நம்பமுடியாத காலமிது!

பச்சை: ஆமாமாம்! நாடிபார்க்கத் தெரியாதவன் தன்வந்திரிங்கிறான்! பொட்டிக்கெழங்கைப் பார்க்காதவன்போகமுனிங்கிறான்!புடம்போடுறது எப்படீன்னு தெரியாதவன் புலிப்பாணிங்கிறான! இந்தப்பசங்க யாரு? என்னு? எப்படீங்கிறதை நம்பவே முடியாது!

முல்லை: பச்சை! நீ தமிழையே படிக்காம தமிழ் புலவங்கிறியே? அப்படின்னு பாத்துகிட்டியா? இவரு சுத்தமான சித்தவைத்தியர்!

வைத்: எதற்குச் சந்தேகம்? நான் கையைப் பிடித்துப் பார்த்து, உடல்நிலையும், மனநிலையும் கூறுகிறேன். அப்புறம் சொல்லுங்களேன் நான் யாருன்னு!

[திடீரென்று பாய்ந்து வித்யாவதியின் கையைபிடிக்கிறான் "ஐயயோ! பாவி விடடா" என்று திமிருகிறாள். விடாமல் நாடி பார்க்க முனைகிறான் வைத்தியன்]

பச்சை: (ஆத்திரத்தோடு) அடேவேஷக்காரா? அரண்மனைச் சோறு இப்படி அக்கிரமம் பண்ணச் சொல்லுதாடா? சந்திரவர்மரை பிடிக்க நீங்க வைத்தியரா வேஷம் போடுங்க; ஜோசியராகத்தான் வந்து சோதிங்க! ஆனா, இப்படி பகிரங்கமா பொம்பளை கையைப்பிடிச்சி இழுக்கிறதை உசுரே போனாலும் நான் விடமாட்டேன்!

[பாய்ந்து அவன் தலைப்பாகையைப் பற்றுகிறான். கையோடு வந்துவிடுகிறது. எதிரே நிற்கிறான் சந்திரவர்மன்]

பச்சை: (வியப்போடு) ஆங்! சந்திரவர்மன்! எங்க மகாராஜா!

வித்யா: (வியப்போடு) என் சுவாமி, நீங்களா?

(அவன் மார்புமீது சாய்கிறாள்)

பச்சை: முல்லை! இதை அப்பவே சொல்லிருக்கப்படாதா?

முல்லை: நான்தான் சொன்னேனே; ஒடம்பு நோயை மாத்திரமல்ல, மனநோயுந் தீக்கிற மகா பெரிய சித்த மருத்துவருன்னு; ஒம் மரமண்டையிலே அது படலே! மண்டையிலே மூளை இருந்தாத்தானே?

[ தலையில் அடிக்கிருள், வித்யாவதி தடுத்து ]

வித்யா: பச்சைக்கென்னடி? என் சுவாமியை எனக்கே புரியவில்லையே! முல்லை! நீ பெரிய கைக்காரிதான்!

சந்திர: வித்யாவதி!

வித்யா: சுவாமி! போவோம் வாருங்கள்!

சந்திர: நாம் இன்பமாக இருக்கின்ற நேரத்திலே இவர்கள் பூனையும் சேவலும் போலிருப்பது அழகல்ல!

முல்லை: மகாராஜா! நீங்க போங்க- நாங்க பூனையும் சேவலுமா இருப்போம்; அடுத்த விநாடி பெட்டையும் சேவலுமா மாறுவோம்! அடுத்த விநாடி! ........

சந்திர: அப்படியானால் சரி. வித்யாவதி!

வித்யா: சுவாமி!

[கைகோர்த்தவண்ணம் உற்சாக
மாக இருவரும் போகின்றனர்]

பச்சை: (ஆசையோடு) அடுத்த விஞடி.....?
என்ன முல்லே சொன்னே?

முல்லே: (காதைப்பிடித்து) கருடனும் கோழி
குஞ்சுமா மாறுவோம்னேன்! வெளுப்பானும்
உதைப்பானுமா மாறுவோம்னேன்! புரிஞ்சுதா?
புலவரே; புரிஞ்சுதா? புரிஞ்சுதா?

[காதைப்பிடித்து இழுத்து பஸ்கி
போட வைக்கிருள்]

பச்சை: ஐயயோ!எனக்குப்புரியலியே!புரிய
லியே!

[அலறியவண்ணம் பஸ்கிபோடு
கிருன் தோப்புக்கரணம்]

* * * *
* * *
* * * *
* * *
* * * *
* * *
* * * *

## காட்சி 30.

இடம்: கைலாசநாதர் கோயில்.

காலம்: இரவு.

[சன்னிதியில் வித்யாவதிபரத நாட்டியம் ஆடுகிறாள். பக்தர்கள் சிலர் ரசிக்கின்றனர். மன்னவர், மகாராணி, நிருபதுங்கன் மூவரும் வந்து நின்று பார்க்கின்றனர். சங்காதேவி ஆலய அமைப்பையும், ஆடற்கலையையும் சுவைக்கிறாள். நாட்டியம் முடிந்து வித்யாவதியும் மற்றவரும் செல்கின்றனர்]

சங்கா: (வியந்து) நாதா! இது கைலாச நாதர் கோயில் மட்டுமல்ல. காவியம், ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம் ஆகிய கலைகளை வளர்க்கும் சிறந்த கலைக்கோயில்!

நந்தி: சங்கா! இங்கு காணப்படுபவையெல்லாம் பக்திபூர்வமான கலைச்செல்வங்கள்! நடப்பனவெல்லாம் ஆகம விதிகளுக்குட்பட்ட அறச்செயல்கள்! ஆலயநிர்வாகி சக்திமுனையர் சிவபெருமானை நிகர்த்தவர்! நியம நிஷ்டைகளிலே மிகவும் கண்டிப்பானவர்!

சங்கா: நிருவாகத்திற்கு கண்டிப்பு தேவை தானே?

நந்தி: சங்கா! செங்கற்கூடங்களாக இருந்த சிறிய ஆலயங்களை, இப்படிச் சிறந்த கற்கோயில் களாக மாற்றியமைத்த பல்லவர் பெருமை, ஊழிக் காலம்வரை மறையாத ஒன்று!

சங்கா: சந்தேகமே இல்லை நாதா!

[அங்கிருந்த மலரொன்றைப் பார்க்கிறாள். குனிந்தெடுத்து மூக்கால் நுகருகின்றாள்]

சங்கா: ஆ.:கா! அழகான புதுமலர்! அருமை யான நறுமணம்!

[சக்திமுனையர் ஆத்திரத்தோடு வருகிறார்]

சக்தி: ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி! மன்னா! அபச்சாரம்! பெருத்த அபச்சாரம் செய்துவிட்டாள் மகாராணி!

நந்தி: (வியந்து) அபச்சாரமா?

சங்கா: (வியந்து) நான் என்ன அபச்சாரம் செய்தேன் சுவாமி?

சக்தி: சமணமதத்தை சாரந்தவள் நீ! அன் னிய மதக்காரர்கள் எவரும் எங்கள் ஆலயத்திற் குள் அடியெடுத்து வைப்பதே தவறு! அத்தோடு

நிற்காமல் ஆண்டவன் பூசைக்குரிய பவித்ரமான மலரை கைதீண்டி எடுத்தாய்! மூக்காலும் முகர்ந்து விட்டாய்! எத்தகைய பாவம்! எத்தகைய சண்டாளம்! மாசுபட்டதே ஆண்டவன் வழிபாடு! மாசுபட்டனவே ஆகம விதிகள்!

சங்கா: சுவாமி! நான் மாறுபட்ட சமயத்தவள் என்பதற்காகவா மலரெடுத்து முகர்ந்ததை மாபெருங் குற்றமாக்குகிறீர்கள்?

சக்தி: மலரெடுத்து முகர்ந்தாய்! மாகாள பைரவமூர்த்தியை அவமதித்துவிட்டாய்! தீண்டாத மந்திர புஷ்பத்தைத் தீண்டி மகத்தான மதநெறியைக் குலைத்துவிட்டாய்! சண்டாளி!

சங்கா: அனைவர்க்கும் பொதுவான அழகுமலர், ஆண்டவன் படைப்புதானே? சைவர் முகர்ந்தாலும் வைணவர் முகர்ந்தாலும், சமணர் முகர்ந்தாலும், பௌத்தர் முகர்ந்தாலும், ஒரேமாதிரியாகத்தானே மணம் தருகிறது? மலரின் மணத்திலே வேற்றுமை இல்லாதபோது, மதவேற்றுமை ஏன் சுவாமி?

சக்தி: ஜெய் காளி! ஜெய் ஈஸ்வரன்! குற்றம் புரிந்துவிட்டு குதர்க்கமா பேசுகிறாய்?

சங்கா: எது சுவாமி குதர்க்கம்? மலரைப் படைத்த ஆண்டவன், மற்ற சமயத்தாரையும் சமமாக மதிக்கிறான் என்பதா குதர்க்கம்?

சக்தி: மலரைப் படைத்தது உங்கள் ஆண்டவன் அல்ல; எங்கள் கபாலிக மூர்த்தி! எங்கள்

நெறியே புனிதநெறி! எங்கள் ஆலயமே ஆண்டவன் உறைவிடம்! கடுந்தவமியற்றி, கடுமையானவிரதங்கள் பூண்டு, பக்தித்தீயிலே இரத்தம் சொரிந்து பாதுகாத்துவரும் கபாலிக்கடவுளின் வழிபாட்டு முறையிலே, இப்படி ஒரு களங்கம் நேருவதா? இதைப்பார்த்துக்கொண்டு இந்நாட்டு மன்னனும் வாளாவிருப்பதா?

நந்தி: சுவாமி! இவளை ஆலயத்திற்கு அழைத்துவந்தவன் நான்! அறியாது நேர்ந்தபிழை மன்னித்தருளும்!

சக்தி: ஐயகோ! ஜெய் ஈஸ்வரன்! ஐயகோ! ஜெய்சக்தி! கபாலபைரவ ரண பத்ரகாளி! கூறத்தகாததைக் கூறிவிட்டானே மன்னன்! கேட்கத்தகாததைக் கேட்டுவிட்டேனே செவிகளால்! பக்தி மார்க்கத்தை உச்சிமீதுவைத்துப்பாதுகாக்கவேண்டிய மன்னன், ஒரு அற்பப்பெண்ணின் தவறுக்காக அதை மண்ணிலே போட்டு மிதித்துவிட்டானே! மன்னிப்பும் கேட்டுவிட்டானே! கைலாச பதே! கபாலிக மூர்த்தி! இதற்கா என் காதுகளை படைத்தாய்? இதற்கா என் கண்களைப்படைத்தாய்? வேண்டாம்! மத விரோத காரியங்களை இனிப் பாழும் கண்களால்பார்க்கவேண்டாம்! இதற்குமன்னிப்புக் கேட்பதை என் காதுகளால் கேட்கவும் வேண்டாம்! இதோ, நீ கொடுத்த கண்ணையும், காதையும் நீயே பெற்றுக்கொள்! நீயே பெற்றுக்கொள்!

[ஓடிச்சென்று, சிலையருகே இருந்த கொடுவாளை எடுத்துக்காதுகளை அறுக்கத் துணிகிறார். பதறிய மன்னர் சென்று "நில்லுங்கள்" என்று தடுக்கிறார் வாளை பிடுங்கிக் கொள்கிறார்]

நந்தி: சுவாமிகளே! வேண்டாம்! வேண்டாம்! அங்கபங்கம் செய்துக்கொண்டு எனக்கு அபகீர்த்தி தேடவேண்டாம்! என் மனைவி செய்த குற்றத்திற்காகவும், நான் கேட்ட மன்னிப்புக்காகவும் மிகவும் வருந்துகிறேன். மன்னிக்கமுடியமேல் அருளுங்கள். இல்லையேல் தண்டனை தாருங்கள்! நான் குறுக்கிட மாட்டேன்! மறுக்கமாட்டேன்!

சக்தி: ஜெய்காளி! ஜெய் ஈஸ்வரன்! மனம் தெளிவின்றி மன்னிப்புக்கேட்ட மன்னா! மூண்ட சினத்தால் முப்புரத்தையும் எரித்து சாம்பலாக்கினனே விரிகடைப் பெருமான்! மருகனென்றும பாராமல் நெற்றிக்கண்ணைத் திறந்து மன்மதனை சுட்டுப்பொசுக்கினனே மகேஸ்வரன்! அவனது பயங்கரப்பாதைதெரிந்திருந்தால், அவனிடம் அணு வேணும பக்தி இருந்திருந்தால், நடந்திருக்குமா இந்த அவகேடு? நடந்திருக்குமா இந்த அக்கிரமம்? ஆகமம்! ஆலயம், ஆத்திக நெறியெலலாம் பழுதுண்டன, பாபச்செயலால்! இந்தத் தூரத்தையைத் தண்டிக்காது விட்டால் தரமம் தலைசாய்ந்துவிடும்! சைவம் நிலைகுலைந்துவிடும்! வழிபடும தகுதியை இழந்துவிடும் இந்த ஆலயம்! இழந்துவிடும் இந்த ஆலயம்!

நந்தி: தண்டனை! என்ன தண்டனை அளிப்பது சுவாமி?

சக்தி: மன்னு! மனம் நடுங்கக்கூடாது! கிஞ்சிற்றேனும் பின்னடையக்கூடாது! மலரெடுத்து ஆலயத்தை மாசுபடுத்திய மங்கையின் கை வெட்டப்படவேண்டும்! இது மாகாள பைரவரின் கட்டளை!

நந்தி: (அஞ்சி) ஆங்! கையை வெட்டுவதா?

சகது: ஆம்! செய்யும் துணிவில்லாவிட்டால் சீரழிந்துவிடும் உலகம்! செயலற்றுப்போகும் தர்மம்! ஒழிந்துவிடும் பல்லவரின் பழம்பெருமை! நம் எல்லோருக்கும் திறந்துவிடும் நரகத்தின் வாசல்!

நந்தி: பயங்கரமான கட்டளை!

சக்தி: நிறைவேற்ருதுவிட்டாலபயங்கரமான அழிவு! பயங்கரமான சாபம்!

சங்கா: (நடுங்கி) சுவாமி! நான் வேண்டுமென்றே செய்யவில்லை. ஆலயவிதிகளை அறியேன். மனதிலேமண்டிக்கிடக்கும்மதவுணர்ச்சி இவ்வளவு கடுமையெனக்கண்டிருந்தால், இங்கு வந்திருக்கவே மாட்டேன்! மன்னித்துவிடுங்கள் சுவாமி! என்னை மன்னித்து விடுங்கள்!

[ காலில் வணங்குகிருள் ]

சக்தி: (திரும்பி சினந்து) ஜெய்காளி! மகேஸ்வரனுக்கிழைத்த மாபெருங்குற்றத்திலே மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை! கடமையை நிறைவேற்றக் கலங்கி நிற்கும் காவலனே! கைலாசநாதர்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்! குற்றம் புரிந்த கை வெட்டப்படவேண்டும்! இல்லையேல் என் தலையைக்கொய்து இரத்தச் சேற்றிலேபுரட்டி எடுத்து பைரவர்க்குக் காணிக்கையாகப் படைத்தே களங்கத்தைப் போக்கவேண்டும்! இங்கேயே, இப்போதே செய்கிறேன்! கொண்டாரும் கொடுவாளை!

[கையிலிருக்கும் வாளைப் பிடுங்குகிறார்]

நந்தி: (மறுத்து) வேண்டாம்! வேண்டாம்! அந்தப்பழி! கையாலாகாத இழிபக்தனல்ல! கடமை மறந்த கோழையல்ல! எது நேர்ந்தாலும் சரி; வழிபாட்டுக்களங்கம் துடைப்பேன்!

[கையிலிருந்தகொடுவாளைஓங்கி சங்காதேவியின் கையை வெட்டுகிறான். "ஆ! நாதா! ஐயோ!" என்று அலறி விழுகிறாள் மகாராணி. "அம்மா அம்மா" என்று அவள்மீது விழுகிறான் நிருபதுங்கன்]

சக்தி: ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி! மாகாள பைரவர் இப்போதுதான் மனம்குளிர்ந்தார்! மன்னா! நினது அருஞ்செயலால் ஆலயம் புனிதமாயிற்று!

ஆத்திகம் வாழ்ந்தது! பக்திமார்க்கம் பலப்பட்டது! மங்காத புகழும், மகேசனின் அருளும் பெற்ருய்! கரமிழந்த இந்தப்பாபி இனி உலகத்தாரின் கண்களிலே படக்கூடாது! பாதாளச்சிறையிலே அடைபட்டுக்கிடக்க வேண்டும்!

நந்தி: கட்டளை சுவாமி!

சக்தி: (பயங்கரச் சிரிப்பு) ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி!

[கோஷித்தவண்ணம் போகிருன்]

நிருப: (பதைத்து) அநியாயம்! அக்ரமம்இது! மனிதத் தன்மையற்ற காரியம்! மலரெடுத்து முகர்ந்ததற்காக என் மாதாவின் கை துண்டிக்கப்படுவதா? ஆராய்ந்து பாராதமன்னவரின் அதர்மச் செயல்! பொறுக்கமுடியாது இதனை!

நந்தி! நிறுத்தடா! தீராத தெய்வ குற்றம் புரிந்தாள் உன தாய்!

நிருப: நான் முன்னறிந்த முதல் தெய்வத்தையே முடமாக்கிவிட்டாயே மூர்க்கா! எத்தகைய குற்றமிது?

நந்தி: என்மனையாட்டியின் கையைத்தானடா நான் வெட்டினேன்; பொடிப்பயலே!

நிருப: நான் குடியிருந்த கோயிலை, என்னை உருவாக்கி உயிரளித்த வீர அன்னையை,கண்கண்ட

அன்புத் தெய்வத்தைச் சிதைத்துவிட்டாயே பாவி! கூறகோயிலைப் புனிதமாக்கவென்று கலைக்கோயிலை அழித்துவிட்டாயே சண்டாளா! மாதாவின் கையை வெட்டிய கையை நான் துண்டிக்காமல் விடமாட்டேன்!

[வாளை உருவிக்கொண்டு தந்தையின்மேல் பாய்கிறான் சிறுவன் நிருபதுங்கன், இருவருக்கும் வாட்போர் நடக்கிறது]

சங்கா: (பதறி) நிருபதுங்கா! நில்! நில்! ஐயோ! வேண்டாமடா. வேண்டாம் இந்தப்பாதகம்! பாவி! என்ன கேவலம் செய்யத்துணிந்தாய்? நிறுத்தடா நிறுத்து!

நிருப: (நிறுத்தி மனம்பொங்கி) தாயே! எது பாதகம்? சோறூட்டித் தாலாட்டி எனை ஆளாக்கிய அன்புக்கரத்தை வெட்டியெறிந்ததல்லவோ பாதகம்? பட்டத்தரசி என்றும் பாராமல் கரத்தை வெட்டி இரத்தச்சேற்றிலே புரளவிட்டதல்லவோ பாதகம்? பொறுக்கவும் வேண்டுமாம்மா இந்தக் கொலைபாதகத்தை?

சங்கா: ஆம்! ஆயிரம் செய்தாலும் அவர் உன் தந்தை! தந்தையடா! அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வம் என்ற அறிவுரை தெரிந்தவனல்லவா? நீயா தாய்க்குப்பரிந்து தந்தையிடம் போரிடுவது?

நிருப: அக்ரமம்! யார் செய்தாலும் அக்ரமம் தானே அம்மா?

சங்கா: தோட்டக்காரன் மரத்தை வெட்டலாம்; கொடியை அறுக்கலாம்; செடியை நசுக்கலாம்; தடுக்க யாருக்கடா உரிமை? மகனே! தந்தையை அவமதித்தால் தாய்மனம் தாளாது! வெட்டுண்டகையோடு வேதனைப்படும் என்னை மேலும் சோதனைக்கு ஆளாக்காதே! பொறுத்துக் கொள்ளடா பொறுக்கொள்! என்ன பொல்லாங்கு நேர்ந்தாலும் பொறுத்துக்கொள்!

நிருப: அம்மா! மனிதெய்வம் நீ! மன்னித்து விடு என்னை.

(மண்டியிட்டுத்தலைகுனிந்து
தாயை வணங்குகிறான்)

நந்தி: (வாளை உறையிலிட்டு) சிவபெருமான் வழிப்பாட்டுச்சிறப்பறியாத சண்டாளி! தாய்க்குப் பரிந்து தந்தையிடம்போரிடத்துணிந்ததறுதலையே! தாயோடு போக வேண்டியவன்தான் நீயும்! யாரங்கே?

வீரன்: (வந்து) மகாராஜா!

நந்தி: இவர்கள் இருவரையும் கொண்டுபோய் பாதாளச்சிறையில் அடைக்கவேண்டும்! கொண்டு போ!

(வேகமாகப் போகிறான் மன்னன்)

## காட்சி 31.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: மாலை.

(அவள் மாலை தொடுத்துக் கொண்டிருக்கிறாள். மல ரெடுத்துக் கொடுக்கிறான் பச்சை. உற்சாகத்தோடு வருகிறான் சந்திரவர்மன்)

சந்தி: நல்லகாலம்! நல்லகாலம் பிறந்துவிட்டது நமக்கு! வித்யாவதி! ஒழிந்தாள் மகாராணி! ஒழிந்தது என் மனோரதத்தின் முட்டுக்கட்டை! தெரியுமா செய்தி?

வித்யா: பச்சை எல்லாம் கூறினான்; பதறிற்று மனம்! அந்த கோர நிகழ்ச்சிக்கா இவ்வளவு குதூகலம்?

சந்தி: வெற்றி! இனிமேல் வெற்றி எனக்குத்தான்!

வித்யா: திட்டமெல்லாம் குலைந்து தலை மறைந்து வாழ்கிறீர்கள்! இன்னுமா மனம் மாற வில்லை? விட்டுவிடுங்கள் சுவாமி அந்தப்பேராசையை

சந்தி: நினைத்ததை நிறைவேற்றியே தீருவேன்! வித்யாவதி! நான் புதுப்பாட்டு ஒன்று எழுதுகிறேன்; எதற்குத் தெரியுமா?

வித்யா: (ஆசையோடு) என் நாட்டியத்திற்காக இருக்கும்!

சந்தி: இல்லை! நந்திவர்மனின் பரலோக பயணத்திற்கு!

வித்யா: பாட்டு என்ன; கத்தியா சூலமா கொல்வதற்கு? இல்லை,பாட்டிலே விஷத்தைத்தான் கலக்க முடியுமா?

சந்தி: விஷத்தைவிட உரமானது அறம்! அறம் பாடுகிறேனடி அறம் பாடுகிறேன், அரசனை மாய்ப்பதற்கு!

வித்யா: அப்படியா? அதை அவர் முன்பு பாட வேண்டுமே? யார் சென்று பாடுவதாம்?

சந்தி: மதிப்பிற்குரிய எனது நண்பன்; முத்துப்புலவரின் அருந்தவச் செல்வன் பச்சைப் புலவன்!

பச்சை: (நிமிர்ந்து) நன்று! நன்று! யாம் சென்று பாடுவோம்! செயல் முடிப்போம்!

சந்தி: பச்சை! மன்னர் துயிலுகின்ற நேரத்திலே மறைந்து செல்லவேண்டுமே, முடியுமா உன்னால்?

பச்சை: கவலை விடுமின்! கவலை விடுமின்! உமது இச்சையை குறைவிலாது நிறைவேற்றுவான் இந்தப் பச்சை! ஆனால்,எடுப்பதென்னவோ பிச்சை

துணிமணிகள் வாங்க இரண்டு பொற்காசுகள்;என் இசசை!

சந்தி: இரண்டென்ன; இருபது பொன் கொடுக்கிறேன். ஆடம்பரமாகவே சென்று வா அருந்தமிழ்ப் புலவோனே!

[தட்டிக்கொடுக்கிறான்]

## காட்சி 32.

இடம்:- முல்லை வீடு.

காலம்:- இரவு.

முல்லை: பச்சை! நாளைக்கி மகாராஜாகிட்டே நீ போயி அரம் பாடினாலும் சரி; ஒரம் பாடினாலும் சரி. இப்ப எனக்குத் தூக்கம வருது!

பச்சை: எனக்குந்தான் தூக்கம் வருது!

முல்லை: நான் படுத்துக்கணும்!

பச்சை: நானுந்தான் படுத்துக்கணும்!

முல்லை: பின்னே; போய்த்தொலையேன் ஒங்க வீட்டுக்கு.

பச்சை: எங்க வீட்டுக்கா? (சிரித்து) முல்லை! நான் என்ன சுயநலக்காரன்னு நெனச்சிகிட்டே? யாதும் வீடே,யாவரும் சொந்தமே! என் வீடு என் கட்டில், என் சட்டை, என் காசு, என் படுக்கை என்ற சுயநலதத்துவமே நம்மகிட்டே கிடையாதே. என்னதெல்லாம் ஒன்னதுதான்! ஒன்னதெல்லாம் என்னதுதான்! இப்ப ஒனக்கும் தூக்கம் வருது; எனக்கும்... பாயைவிரி. அழகா படுத்துக்குவோம்!

முல்லை: பச்சை! கையில காசு இல்லேன்னாலும், வக்கணை பேசறதிலே மட்டும் கொறைச்சல்

இல்லே! இப்ப நீ மரியாதையா போறியா? அம்மாவைக் கூப்பிடட்டுமா?

[உள்ளே போதல்]

பச்சை: ஆமா; என்னை ஏன் முல்லே இப்படி போ போன்னு வெறட்றே? யாராவது வர்ருங்களா?

முல்லை: அதைப்பத்தி நீ யாருகேக்குறதுக்கு? அம்மா! அம்மா! — அம்மா—!

பச்சை: (பதறி) காசு! காசு! காசு! பொறு முல்லே! காசு கொடுக்கிறேன், காசு! நிறுத்து கூச்சலே!

[மடியினின்றும் சில நாணயங்களை எடுத்துக் கொடுக்கிருன், முல்லையிடம்]

முல்லை: (வாங்கிப் பார்த்து) அடவோய்! நெசந்தான்! பொன்னு. (கனிவோடு) பச்சை! பசை இருக்குதே ஒங்கிட்டேயும்! என்ராசா!

பச்சை: (அவளைத் தழுவி) இனிமே வக்கணை பேசலாமில்லே?

முல்லை: (கொஞ்சலாக) நான் ஒண்ணு சொல்றேன்! தயவுபண்ணி இன்னிக்கி மட்டும்.......

பச்சை: வெளியே போங்கறே? (மனதை திடப்படுத்தி) சரி, ஒனக்காகப்போறேன்! ஆமா!

முல்லை: (மகிழ்ந்து) பச்சை! நீ பச்சைத்தமிழனே தான்! சொன்னபடி கேக்கறே பாரு; போயிட்டு வா!

[அலங்காரம் செய்துகொள்ள முனைகிருள் முல்லை. வெளியே போவதுபோல் பாவனை காட்டி மறைவில் ஒளிந்துகொள்கிருன் பச்சை! காபாலிக சக்தி முனையர் வருகிருர், கையிலே மூட்டையோடு)

சக்தி: பெண்ணே!

முல்லை: (அன்போடு) வாங்க, வாங்க சுவாமி! என் குடிசை இன்னிக்கு என்ன புண்ணியம் பண்ணிச்சோ?

சகதி: புண்ணியம் கொஞ்சமல்ல; இதோ.

[மூட்டையை வைத்து அவிழ்த்து மலர்மாலை, தேங்காய், பழம் பலகாரங்களை எடுக்கிருன்]

முல்லை: என்ன சுவாமீ இதெல்லாம்?

சக்தி: கைலாசநாதனின் பிரசாதங்கள்! (மலர் மாலை எடுத்து) இதோ, ஆண்டவன் பூசைக்குவந்த மலர்களில் பொறுக்கிஎடுத்து, உனக்காகத்தொடுக்கச் செய்தேன், இந்த மாலையை!

[கொடுக்கிருர்; முல்லை பின்னடைகிருள்]

முல்லை: (அஞ்சி) ஐயயோ! எனக்கு வேணும் சுவாமி! ஆண்டவனோட பூவை எடுத்ததுக்காக மகாராணி கை வெட்டுண்டு மொண்டியாப் போனுங்க! இதை தலையிலே வச்சாத் தலை போயிடும்! கழுத்திலே போட்டா, கழுத்து துண்டாயிடும்! ஒடம்பிலே பட்டா.... ஐயயோ! எனக்கு வேணும்!

சக்தி: (சிரித்து) அடி முல்லைப் பெண்ணே! அந்தச் சம்பவத்தை எண்ணியா இப்படிக் கலங்கு கிருய்? மகாராணியின் கையை துண்டிக்கச்செய்த வனே நான்தானே? அந்த மகத்தான தெய்வ மலரை இப்பொழுது நானே தானே உனக்குத் தரு கிறேன்?

முல்லை: இது தவருன காரியமல்லவா சுவாமி?

சக்தி: தவறு; மலரால் அன்று; மதத்தால். மகாராணி சமண சமையத்தைச் சார்ந்தவள! சைவ சமையத்தைப் பரிகசித்தவள்! அதன் பலனை அறுவடை செய்தாள்! அவ்வளவுதான்!

முல்லை: அப்படியானல் மலரை எடுத்ததும், மோந்து பார்த்ததும் தப்பில்லியா?

சக்தி: அணுவளவும் தப்பே கிடையாது!

முல்லை: இந்த சஙகது மவள்யிலே தெரிஞ்சா?

சக்தி: எல்லோரிடமுமா சொல்லிவிடுவேன்? முல்லே! நீ எனக்கு நிரம்ப வேண்டியவள் என்று நம்புகிறேன்; நம்பலாமோ?

முல்லே: தாராளமாக நம்பலாம்!

சக்தி: (நெருங்கி) அப்படியானால் இதையெல்லாம் வெளியே சொல்லக்கூடாது! இன்னொரு உதவியும் செய்யவேண்டும்!

முல்லே: என்ன உதவி சுவாமி?

சக்தி: இரகசியமாகத் தனியறையில் ஒரு மண்டலம் சக்தி பூஜை செய்ய வேண்டும்! அதற்கொரு கன்னிப்பெண் தேவை! ஏற்பாடு செய்து கொடுப்பாயா?

முல்லே: (அஞ்சி) சக்தி பூசையா? எப்படிங்க?

சக்தி: விபரம் பின்னர் சொல்லுகிறேன். காசு கை நிறைய கிடைக்கும்; என்ன சொல்லுகிறாய்?

முல்லே: காசுங்களா? அப்படின்ன (நாணி) நானே வர்றேங்களே!

சக்தி: (மகிழ்ந்து) ஆஃகா கா! காளி கருணை புரிந்துவிட்டாள்! ஜெய்காளி! ஜெய் ஈஸ்வரன்!

[அப்படிச் சொல்லியவண்ணமே
பச்சை தோன்றுகிறான்

முல்லையின் தாயோடு;
பச்சையின் கையிலே கம்பு]

பச்சை: ஜெய் காளி! புரிஞ்சுபோச்சு சங்கதி யெல்லாம்; ரகசியமாத் தனியறையிலே சக்தி பூசையா பண்ணப்போறே? சண்டாளப்பயலே! அநியாயமா மகாராணியோட கையை வெட்டும் படியாபண்ணினியே, முல்லேயோட ஒடம்பைஎன்ன பாடு படுத்துவே? நெனச்சா நெஞ்சு பக்குங் குதே? பாட்டியம்மா! காளிக்கு பலி கொடுத்திடு வானே சண்டாளன்!

சக்தி: ஜெய் காளி! சண்டிகாதேவி! சதிகாரர் களை அழி; கொல்லு! நிர்மூலமாக்கு!

கிழவி: (சினந்து) கட்டையிலே போறவனே! ஒண்ணே ஒண்ணுன்னு கண்ணே கண்ணுன்னு நான் வச்சிருக்கிறேன். எம்மவளை இழுத்துகிட்டு போயி சக்தி பூசையிலே வச்சு, காளிக்கு பலிகுடுக் கவா பாக்கறே? ஓடு! ஓடிப் பொழச்சிப்போ! இங்கே நின்னே; இப்பவே உன்னை பலி குடுத்திடுவேன்! எடுடா அருவாமனையை!

பச்சை: டேய்! சாமி ஓடு! ஓடு! ஒதைதாங்க மாட்டே டோய்!

[கிழவி அரிவாள்மனையில் தாக்கவருகிறாள், பச்சை தொண்ணையால் அடிக்கிறான்; ஜெய்காளி! ஜெய்காளி என்று அலறிய வண்ணம் ஓடுகிறார் சக்தி முனையர்]

## காட்சி 33.

இடம்: வசந்த மண்டபம்.

காலம்: பிற்பகல்.

[வசந்த மண்டபத்தில் களைப்புற்று மன்னன் துயில்கின்ருன் கள்ளத்தனமாகச் சென்று எதிரே அமர்ந்து பாடுகிருன் பச்சை]

பச்சை: (விருத்தம்)

ஒன்னலரைப் போரில் ஒடுக்கிடும் வல்லோனே!
கன்னித் தமிழின்பம் கண்டோனே—இன்னல்
வதையுண்டு நின்சமுகம் வந்தோர் துயரம்
புதையுண்டு புல்முளைத்துப் போம்!

[கேட்டு மகிழ்ந்த மன்னன் எழுந்திருக்கிருன்]

நந்தி: ஆ:கா! என்ன தமிழ்ச்சுவை! என்ன தமிழின்பம்! என்னே கவிதைநயம்! ஐயா! நீர் யார்?

பச்சை: யாம் ஒரு தமிழ்ப் புலவர்!

நந்தி: கந்தருவன் வீணை மிழற்றிப் பண்ணிசைப்பதுபோல் கனவு கண்டேன்! இன்பம் கண்டேன்! விழித்தேன்! பைந்தமிழின் பாட்டுச்சுவை நுகர்ந்தேன்! மகிழ்ச்சி புலவரே! பெருமகிழ்ச்சியடைந்தேன்! (முத்துமாலையைக் கழற்றி) இதோ பெற்றுக்கொள்ளும் பரிசினை!

பச்சை: வாழ்க மன்னவர்!

[பெற்றுக்கொள்ளல்]

நந்தி: புலவரே! உமது பெயர்?

பச்சை: யாம் முத்துப்புலவரின் அருந்தவச் செல்வன் பச்சைப்புலவர்!

நந்தி: (யோசித்து) காலஞ்சென்ற நாவலர் முத்துப்புலவரின் மகனா? எங்கிருந்தீர் இத்தனை நாள்? என்ன செய்தீர்? இதனைப் பாடியது நீர் தானா?

பச்சை: (யோசித்து) இல்லை. சந்திரவர்மன்!

நந்தி: (வியந்து) சந்திரவர்மனா? என் தம்பியா? எங்கே இருக்கிறான்?

பச்சை: யாம அறியோம்

நந்தி: சந்திரவர்மனா இத்தகைய கவிதை இயற்றினான்? தமிழ் கொஞ்சுகிறதே தம்பியின் வாக்கில்! புலவனாய் விட்டானா?

பச்சை: வெறும் புலவரன்று மன்னவா? பெரும்புலவர்! காவியம் செய்யவல்லவர்! தமிழ்த் தாயின் பேரருள் பெற்றுவிட்டவர்!

நந்தி: மகிழ்ச்சி! புலமையும், திறமையும் இருக்கிறது! புத்தி நிலைமை சரியில்லையே! நற்புலமை வித்தகன்; அரியாசனத்தருகே சரியாசனத்தில் இருக்கவேண்டிய தம்பி, துரோகம் புரிந்து தலைமறைவாகத் திரிகின்றானே பாவி!

பச்சை: மன்னா! புலவர் சந்திரவர்மனின் பாடலை யாம் பாடியது குற்றமாயின் மன்னிக்க வேண்டும்.

நந்தி: செந்தமிழில் வைவாரும் வாழவேண்டும்! வளரவேண்டும். தமிழ்ப்புலவரே! அவன் அனுப்பினனா, நீராக வந்தீரா?

பச்சை: (யோசித்து) தங்கள் மனதை மகிழ்விக்க அவரே என்னை அனுப்பினார்!

நந்தி: நன்று! இதன்மூலம் தனது தமிழ் புலமையை எனக்கு உணர்த்தினான் தம்பி! புண்பட்ட நெஞ்சததைப் புதுக்கினான்! இது அவனது எண்ணமாற்றத்தின் எதிரொலியோ என்று நினைக்கிறேன்!

பச்சை: இருக்கலாம். இருக்கலாம்! மன்னவா, ஆசையோடுதான் பேசினார்!

நந்தி: தம்பி திருந்தினன் என்ற சேதி எனக்கு தேன்போல் இனிப்பது! துரோகம் மறந்து கவிகள் செய்யட்டும்; காவியம் புனையட்டும்! தகுதி இருக்

கிறது. தாய்மொழி தமிழுக்குப் பணிசெய்து பெருமையோடு வாழட்டும். புலவரே! தம்பிக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவியும்! மறவாது தெரிவியும்!

பச்சை: நன்று, வணக்கம்!

[செல்லுகிறான்]

*******
*****
***
*
*
***
*****
*******

## காட்சி 34.

இடம்:- வித்யாவதி வீடு.

காலம்:- மாலை.

[ஏடும் எழுத்தாணியும் வைத்துஎழுதிக்கொண்டிருக்கிறான் சந்திரவர்மன்; பச்சையும் வித்யாவதியும் நிற்கின்றனர்]

வித்யா: மாள்வதற்குப்பாடினீர்கள்! வாழ்வதற்கு வழி காட்டினர் மன்னர்! எத்தகைய பெருந்தகைமை! தம்பியின் மீதும், தமிழ்மீதும் எவ்வளவு பாசம்! ஐயோ! இன்னுமா மாறவில்லை உங்கள் மனம்?

சந்திர: மாறிவிட்டது வித்யாவதி! மனம் மட்டுமல்ல; திட்டமே மாறிவிட்டது!

வித்யா: விளங்கவில்லையே சுவாமி!

சந்திர: போகப்போக விளங்கும்!

பச்சை: வர, வர விளங்காது!

சந்திர: பச்சை! நீயுமா எனக்கு எதிர்ப்பு?

வித்யா: நான் தங்களை எதிர்க்கவில்லை சுவாமி! நமது இன்பவாழ்வுக்கு பங்கம்வரக்கூடாதே என்று கவலைப்படுகிறேன்.

சந்திர: அப்படியானால் விளக்கம் கேட்காமல் என்னோடு ஒத்துழைக்கவேண்டும்; அப்பொழுது தான் நிலைத்திருக்கும் அது!

வித்யா: கட்டளைப்படி நடக்கிறேன் சுவாமி!

சந்திர: இதோ இந்தப் பைந்தமிழ்ப்பாடல்களை இரவுதோறும் பாடவேண்டும். நகர் சோதனைக்கு வரும் மன்னன் செவியில் இது மதுரமாகப் பாய வேண்டும். தமிழ்ச் சுவையிலே சொக்கிப்போய், தேனை அருந்த வரும் அப்பொன்வண்டு! என்ன சொல்லுகிறாய்?

வித்யா: பாடுகிறேன் சுவாமி!

[கொடுக்க ஓலையை வாங்கி வீணையில் இசைத்து பாடுகிறாள்]

"செந்தழலின் சாற்றைப்பிழிந்து செழுஞ்சீதச் சந்தன மென்றாரோ தடவினர்"

விக்ர: (வந்து) சபாஷ்! அருமையான பாடல்! அற்புதமான கற்பனை!

சந்திர: வாரும் சேனாதிபதியாரே! வாரும்: உட்காரும்!

விக்ர: வித்யாவதி; கலாவதி!

சந்திர: கலாவதி மட்டுமல்ல; விவேகவதி.

பச்சை: கலையும், விவேகமும்தானா? அற்புதமான கட்டழகு!

வித்யா: (சினந்து) பச்சை! மூடு வாயை!

பச்சை: மூடிகிட்டேன் (மூடுகிறான் வாயை)

சந்திர: சேனாதிபதியாரே! மகாராணியின் பிரிவுக்குப்பின் மன்னவர் நிலை எப்படி?

விக்ர: (வித்யாவதியைப் பார்த்தபடி) ஒரே குழப்பம்! சாதகமா? பாதகமா? ஒண்ணும் புரியலே!

சந்திர: அப்படியானால் ஆட்சி?

விகர: அமைச்சரின் சமயோசித புத்திதான் ஆட்சியை நடத்துகிறது!

சந்தி: அவரை மடக்க வழி இல்லையா? எப்படியாவது ஒழிக்கவேண்டுமே. சேனாதிபதியாரே! மந்திரியார்க்கும், மகாராணியார்க்கும் கள்ளமுடிச்சுப்போட்டு மன்னரின் கருத்தைக்குழப்பினால்...... ஒருக்கால்......

[வெறுப்போடு எழுந்து உள்ளே போகிறாள் வித்யாவதி]

விக்ர: சபாஷ்! அற்புதமானயோசனே! ஆமாம் வித்யாவதி ஏன் போகிருள்?

சந்திர: வேலையிருக்கும்.

பச்சை: (வாயை மூடியபடியே) நான் திறக்கட்டுமா?

விக்ர: திறப்பா திற! நீ மூடுவதும் இறப்பதும் மட்டுமென்ன? சாவதும வாழ்வதும் கூட ஒன்று தானே!

பச்சை: சேனுதிபதியாரே! அவ்வளவு கேவலமா நெனச்சுடாதிங்க என்னே! நான் மனசு வச்சா இந்த உசிரை சூப்பி எறியற மாங்கொட்டையா மதிச்சுடுவேன்!

விக்ர: அடடே! அவ்வளவு பெரிய வீரனு?

பச்சை: இந்தாங்க; கத்திசண்டையிலே நீங்க அசகாய சூரன் தானே? பந்தயம் கட்றேன்; என் மாதிரி கத்திச்சணடை போடமுடியுமா?

விக்ர: பச்சை! ஏன் அலட்டிக் கொள்கிருய்? பந்தயம் என்ன?

பச்சை: தோ! மகாராஜா குடுத்த இந்த முதது மாலே. நான் தோத்தேன்; இதையே கொடுத்திடறேன் நீங்க தோத்தா?

விக்ர: நான் தோற்ருல்...(தடுமாறி) அதற்குச் சமமாக என்னிடம்......

பச்சை: வேணும்; விரல்லே இருக்கற மோதிரத்தைக் குடுங்க. அது போதும்!

விக்ர: சபாஷ்! கத்தி எங்கே?

சந்திர: கத்தி; தோ! நான் கொடுக்கிறேன்.

[தன் கத்தியை உருவிப் போடுகிறான் சந்திரவர்மன். பிடித்துக்கொண்ட பச்சை, நுனியை பிடித்து அடியை நீட்டிப் பிடித்த வண்ணம் "ஓ" வென்றுகுரலெடுத்துக் கத்துகிறான், விக்ரமன் விழிக்கிறான். சந்திர வர்மன் சிரிக்கிறான்]

பச்சை: உம்...... கத்துங்கோ! எங்கே? உம்!

[மீண்டும் கத்துகிறான்]

விக்ர: டேய்! இதுதான் கத்திச்சண்டையா?

பச்சை: (நிறுத்தி) பின்னே? கத்தாத சண்டையா? கத்தற சண்டைதான் கத்திச்சண்டை! ஏம்மா திரி கத்தமுடியுமா? சந்திரவர்மர்தான் கத்திப்பார்க்கட்டுமே!

சந்திர: (சிரித்து) சேனாதிபதியாரே! இப்படிக் கத்த நிச்சயமாக முடியாது! தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்!

விக்ர: (சிரித்து) நாமென்ன? இந்தக் கத்திச் சண்டைபோட எந்த வீரனாலும் முடியாது! பச்சைப் புலவரே! நான் தோற்றேன்! தோற்றேன். இதோ, பெற்றுக்கொள்ளும் மோதிரத்தை!

[கழற்றிக் கொடுக்கிறான் விக்ரம கேசரி]

SSSSS
S N S
SSSSS

## காட்சி 35.

இடம்: பாதாளச்சிறை.

காலம்: முற்பகல்.

[மகாராணி சங்காவும், நிருபதுங்கனும்; சோகித்துப் பாடுகிருள் தேவி]

நிருப: அம்மா! எத்தனை நாளைக்கம்மா இந்த நரகவாழ்க்கையிலே கிடப்பது? நமக்கு விடுதலையே கிடையாதா?

சங்கா: அரைக்க அரைக்க சந்தனத்தின் மணம் குன்ருதடா மகனே! துன்பத்தைப் பொறுக்கும் சக்தியுள்ளவர்கள் தான் இன்பத்தைப் பெறத் தகுதியுள்ளவர்கள்!

நிருப: நாம் என்ன குற்றம் செய்திட்டோம் தாயே; இந்த கொடுமையை அனுபவிக்க?

சங்கா: நாம் குற்றமற்றவர்கள் என்பதை உலகறியச் செய்யும் காலம் வருமடா மகனே! அதுவரை பொறுத்திருக்கத்தான் வேண்டும்!

நிருப: பொறுமை! பொறுமை! எத்தனை காலத்திற்கம்மா பொறுமை? நினைக்க நினைக்கக் குமுறுகின்றதே என் மனம்!

சங்கா: பதருத காரியம் சிதருது நிறு பதுங்கா!

நிருப: தத்துவம் மேலாக இருக்கலாம்! மெய்யாக இருக்கலாம் நிலைமை......

சங்கா: பாதகமில்லையடா! நம்மீது பற்றுள்ளவர்கள் நாட்டில் யாருமில்லை என்று நினைக்கிருய்?

நிருப: வெறும இரககமும, அனுதாபமும என்னம்மா செய்துவிடும்?

சங்கா: என்ன செய்துவிடுமா? அனுதாபமும் இரக்கமும் நீதி நெறியைச் சார்ந்து நிற்கும்! கொடுமை மிகுந்தால், பொங்கி எழுந்து அறிவுறுத்தும். மிஞ்சினல் போராடவும் சித்தமாகுமே, மகனே! பொறுத்தவர் பூமியாள்வார் என்பது பொன்னுன மொழியடா!

நிருப: (சலிப்போடு) என்னவோ, எப்படியோ, எத்தனை நாளைக்கோ? எனக்கொன்றுமே பிடிக்கவில்லை?

[வேறுபக்கம் போகிருன்]

## காட்சி 36.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: நள்ளிரவு.

[வீணைமிழற்றியவண்ணம்
பாடுகிறாள் வித்யாவதி]

வித்யா: (விருத்தம்)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சிதச்
சந்தனமென்றாரோ தடவினார்-பைந்தமிழை
ஆய்கின்ற கோனந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மேல்!

## காட்சி 37.

இடம்: தெரு.

காலம்: நள்ளிரவு.

[மாறுவேடத்தில் நகர்வலம் வந்த மன்னன் வித்தியாவதியின் பாடல் கேட்டுச் சுவைத்து வசமிழக்கிறான்]

சீலாதி: மன்னர் பெரும! வாரும், வாரும் நாம் போய்விடுவோம்!

நந்தி: மாளிகைக்குள் தானே? வாரும் போவோம்!

சீலாதி: (தடுத்து) நில்லுங்கள்! நாம் அங்கே போகக் கூடாது! வந்த வேலையைப் முடிப்போம் வாருங்கள்!

நந்தி: அமைச்சரே! பைந்தமிழ்ப் பாடலை நீரும் தானே கேட்டீர்? எவ்வளவு இனிப்பான கற்பனை! எத்தகைய பாவ பூர்வமான கவிதை! ஆ...கா! அந்தப்பாவையின் குரலிலே பொங்கி எழுந்த விரக தாபம் என் இதயத்திலே புயலையல்லவோ கிளப்பி விட்டது! செந்தமிழ்ப் பாடலின் இன்பச்சுவை என் சிந்தையைப் பற்றி இழுக்கிறதே! போவோம் வாரும்! இன்னும் பாடச்சொல்லிக் கேட்போம்!

சீலாதி: வேண்டாம்! அங்கே போகக் கூடாது! அந்தப் பாடல்களை தாங்கள் கேட்கவும் கூடாது!

நந்தி: (வியந்து) என்ன? கன்னித் தமிழால் கசிந்துருகி என்னைப் பாடுகின்றாள் ஒரு பாவை! அதைக் காதால் கேட்கக் கூடாதா நான்?

சீலாதி: மன்னர் பெரும! தங்களைத் தடுப்பதற்காக மன்னிக்க வேண்டும்! அந்தப் பாட்டிலே நச்சுக் கருத்து இருக்கிறது. அரம்பாடி தங்களைச் சாகடிக்க வேண்டுமென்று எவனோ பாடி இருக்கிறான்! அதைக்கேட்டு இரசிப்பது ஆபத்து!

நந்தி: (சிரித்து)சீலாதித்தரே! என்ன பேதமை உமக்கு? பொதியமலைச் சந்தனம் போல் குளிர வைக்கும் பைந்தமிழா என்னைச் சாகடிக்கும்?

சீலாதி: பச்சைத்தேன் தமிழாக இருந்தாலும் பாவாணர் நச்செழுத்து வைத்துப் பாடிவிட்டால் நாசம் வந்திடுமாமே?

நந்தி: அப்படிச் சொல்லுபவர் செந்தமிழைக் கொல்லுபவர்! இடிவிழுந்தால், நஞ்சுண்டால் மாண்டிடுவோம்! இன்பத்தமிழா மாளவைக்கும்? இனிக்கின்ற தாய்ப்பாலா சிசுவைக் கொல்லும்?

சீலாதி: தமிழ் கற்றவர்கள், தமிழ் சுவைத்தவர்கள், தமிழ் காத்தவர்களேபெரும் புலவர் அரம் பாடினால் அழிவோம் என்று அஞ்சுகிறார்களே?

நந்தி: மொழிநலம் அறியாதவர்களின் மூட நம்பிக்கை! சீலாதித்தரே! பெருஞ்சித்திரனார் பாடல் கேட்டு பிணமாகவில்லை வள்ளல் குமணன்! மதுரை தமிழ் சங்கத்தில் 'கல்லாடம்' என்ற நூல் அரங் கேற்றும்போது கடவுளே நூறுதரம் தலையசைத்து 'வெல்லமிது' என்று விளம்பினாராம்! பாட்டுக்கு விஷத் தன்மை இருக்குமானால் கேட்டவரெல்லாம் செத்துக் கடவுளும் செத்திருக்க வேண்டும்! தமிழ் வளர்த்த பாண்டியன் நெடுஞ்செழியன், கோவல னைக் கொன்ற குறைக்கு மனம் வெந்து மடிந் தானே தவிர, மாத்தமிழ் பாடல் கேட்டா மடிந் தான்? காலமெல்லாம் தமிழ் வளர்த்த கோலமுடி வேந்தர்களும், வள்ளல்களும், வேலுக்கும், வாளுக் கும் வெங்கொடுமைக் காலனுக்கும் பலியானார்களே தவிர பைந்தமிழா பலிகொண்டது?

சீலாதி: மன்னர்பெரும! எது எப்படியிருந் தாலும் இது கணிகையின் வீடு! நள்ளிரவு நேரத் தில் காவலன் இங்கு நுழைவது கேவலம்! முறை யற்ற செயல்!

நந்தி: (பதறி) ஆங்! கணிகையின் வீடா? போகக்கூடாதா? அப்படியானால் இன்பத்தமிழ் நுகர்ந்திடத் துடிக்கும் இதயத்திற்கு இனி சாந்தி இல்லையா? அமைச்சரே! பாடல்களைக் கேட்டுச் சுவைக்காமல் இருக்கமுடியாதே! பொறுக்க முடி யாதே தமிழ்க் காதலை!

சீலாதி: குற்றமில்லை என்ருல், நாளை சபை யிலே அழைத்து பாடச் சொல்லலாம், மன்னவா! பதறவேண்டாம்! இப்போது நாம் போய்விட வேணடும்!

நந்தி: நன்று! தப்பாது செய்யவேண்டும்! இன்பத் தமிழைச் செவியார உண்ணவேண்டும்!

சீலாதி: செய்வோம்! அதோ யாரோ வருகிருர்கள்! நாம் போய்விடுவோம்!

[இருவரும் செல்கின்றனர். சந்திரவர்மன் அவர்கள் போவதைக் கண்டு சிரிக்கிருன். வித்யாவதி வெளியே வருகிருள்]

சந்திர: நாளை சபையிலே பாடச்சொல்லுவோம்! (சிரித்து) விளக்கிலே விழுந்தது விட்டில் பூச்சி!

வித்யா: எங்கே? எப்பொழுது?

சந்திர: இங்கேயே! இப்பொழுதே! மன்னவர் கேட்டு மனம் சொக்கிஞர் உன் பாட்டில்! நாளை அரசவையிலே பாட அழைப்பு வரும் உனக்கு!

வித்யா: என் பாக்கியம்!

சந்தி: உன்பாக்கியம்மட்டுமல்ல,இந்த அழைப் பிலேதான் இருக்கிறது என் குறிக்கோளின் வெற்றி!

வித்யா: எப்படி சுவாமி?

சந்திர: வாடி சொல்கிறேன் என் வண்ணத் தாமரையே!

[அணைத்தவண்ணம் அழைத்துச்சென்று உட்கார்ந்து சொல்லத்தொடங்கல்]

## காட்சி 38.

இடம்: சிலாதித்தர் வீடு.

காலம்: முற்பகல்.

[சீலாதித்தரும், விக்ரம கேசரியும் உரையாடல்]

சீலா: என்றேனும் ஒருநாள் மன்னன் மகன் மன்னனாக வேண்டியவன் தானே?

விக்ர: இந்த நேரத்தில் அதைத்தான் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

சீலா: ஏன்? ஏதாவது புரட்சி பொங்குமென்ற சந்தேகத்திற்கு இடமிருக்கிறதா?

விக்ர: (துணுக்குற்று) இல்லை, இல்லை; உலகத்தில் மானிட வாழ்க்கையே ஒரு அநித்தியமாயிற்றே! அதற்குச் சொன்னேன்!

சீலா: விக்ரமகேசரி! புன்னகையை வெறுக்கும் காதலன், புலாலை வெறுக்கும் வரிப்புலி, வேதாந்தம்பேசும் சேனாதிபதி மக்களின் மதிப்பிலே மிகமிக மட்டம்!

விக்ர: (திணறி) உம்........ ஆமாம்! ஆமாம்! மன்னிக்க வேண்டும்!

சீலா: போகட்டும்; பாதாளச் சிறையில் மகாராணியும், இளவரசரும் எப்படி இருக்கிறார்கள்?

விக்ர: நான் பார்க்கவில்லையே!

சீலா: நான் பார்க்கவேண்டுமே! விக்ரமகேசரி! மன்னருக்குத் தெரியாமல் சென்றுவர ஏற்பாடு செய்யவேண்டும்! முடியுமா? இதை நீர் எனக்குச் செய்த உதவியாகக் கருதுகிறேன்.

விக்ர: (யோசித்து) ஓ...! செய்கிறேன்; சந்தர்ப்பம் வரட்டும், நிச்சயமாகச் செய்கிறேன்!

சீலா: மிக்க நன்றி!

[கை குலுக்கல்]

## காட்சி 39.

இடம்: காஞ்சி அரசவை.

காலம்: முற்பகல்.

வித்யா: (பாட்டு)

திருத்தேர் புகழ்நந்தி தேசபண்டாரி வெற்பில்
மருத்தேர் குழலுக்குக் கார்முந்துமாகில்
மகுட ரத்னப்
பரித்தேரும் பானனும் என்பட்டவோ
என்று பங்கயக்கை
நெரித்தே வயிற்றில் வைத்தே நிற்பளே
வஞ்சி நெஞ்சுலர்ந்தே!

நந்தி: பாடு இன்னும்! இன்னும் பாடு!

வித்யா: மன்னிக்க வேண்டும் மன்னர் பெரும! கலம்பகப் பாடல்கள் நூறில் நான் கற்றவை இரண்டுதான்!

நந்தி: (ஆவலோடு)கலம்பகமா? நூறு பாடல்களா? ஆஃகா! எங்கே? அவை? எங்கே? யார் பாடியவை?

வித்யா: ஏழிசை வல்லபர்! செந்தமிழ்ப் பாவலர்!

நந்தி: யார் அவர்? எங்கே இருக்கிறார்?

வித்யா: மன்னர் பெரும! பெயரைச் சொல்லுவதற்கு.........

நந்தி: ஏன் தயக்கம்?

வித்யா: பாடியவரைத் தாங்கள் வெறுக்க நேருமோ என்று நான் அஞ்சுகிறேன்!

நந்தி: என்பால் அன்புகொண்டு, கலம்பகம் பாடிய பைந்தமிழ்ப் பாவலனையா வெறுப்வேன்? ஒருக்காலும் இல்லை; பரிசு வழங்குவேன்! பாராட்டுவேன்!

வித்யா: மகிழ்ச்சி மன்னவா! பாடியவர் தங்கள் சகோதரர் சந்திரவர்மர்!

நந்தி: (வியந்து) ஆங்! என் தம்பியா? சந்திரவர்மனா என்மீது கலம்பகம் பாடி இருக்கிறான்? நன்று: அவனது மனமாற்றத்திற்கு மகிழ்ச்சியடைகிறேன்! பெண்ணே! கலம்பகம் முழுமையும் அவன் வாயாரப் பாட, நான் செவியாரக் கேட்க வேண்டுமே! கிடைக்குமா பாக்கியம்?

வித்யா: தாங்கள் விரும்பினால் நடவாததும் உண்டோ?

நந்தி: முழுமனதோடு விரும்புகிறேன்; பெண்ணே! ஏற்பாடு செய்ய முடியுமா உன்னால்?

வித்யா: அவரது நிபந்தனைகள் சிலவற்றைத் தாங்கள் ஒப்புவதானால்.........

நந்தி: சொல்! என்ன நிபந்தனைகள்?

வித்யா: முதலில் அவருக்கு மன்னிப்பளிக்க வேண்டும்!

நந்தி: மனப்பூர்வமாக மன்னித்தேன்! அறியாமையால் அவன் செய்த குற்றங்களை மறந்தே விடுகிறேன்!

சீலா: (எழுந்து)மன்னர் பெரும!சந்திரவர்மன் செய்த குற்றங்கள் மிகப் பெரியவை! இவ்வளவு எளிதாக மன்னிப்புத் தருவது நலமன்று.

நந்தி: (மிடுக்காக) எனக்குத் தெரியும்; வேம்பின் காய் கசக்கிறது; பழம் இனிக்கவில்லையா? கெட்டவன் கெட்டவனாகவே இருக்கவேண்டுமா? உட்காரும்!

(தலைகுனிந்து அமருகிறார் சீலாதித்தர்)

நந்தி: பெண்ணே! அப்பறம் என்ன?

வித்யா: கலம்பகம் அரங்கேற்ற சில விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டும்!

நந்தி: தமிழுக்குப் பெருமை! தாராளமாகச் செய்வோம்; விபரம் சொல்.

வித்யா: ஒரு பரந்த மைதானம்;அதிலே நாற்சதுர அமைப்பில் பத்து பச்சை பந்தல்கள்; நடுவிலே ஒரு மேடை; அதிலிருந்து அவர் நூறு பாடல்

களையும் பாடுவார்! பந்தலுக்குப் பத்தாக, பத்து வகைஆசனங்களில் அமர்ந்து தாங்கள் அவற்றைக் கேட்டு இன்புறவேண்டும்.

நந்தி, ஆசனங்கள் என்னென்ன?

வித்யா: அவர் நிர்ணயித்துக் கொடுப்பார்! பிடிக்கவில்லை என்றாலும் தமிழ்ச்சுவை நுகரவும்; இறைவனின் அருளைப் பெறவும் துணிந்து ஏற்க வேண்டும் அதனை! சிந்தையிலே கலக்கம் கொண்டால் செந்தமிழ்த்தாய் சினந்திடுவாள்!

நந்தி: இதுவென்ன விந்தை! பைந்தமிழின் பாட்டுச்சுவை; பரம்பொருளின் பெருங்கருணை ஏககாலத்தில் கிட்டுவது எத்தகைய பேறு! எத்தகைய பேறு! அப்படியே செயவோம்.

சீலா: (எழுந்து) பெண்ணே! சந்திரவர்மருக்காக இவ்வளவு பேசுகிறாயே அவருக்கும் உனக்கும் என்ன உறவு?

வித்யா: (நாணி) அவர்... என் காதலர்!

சீலா: ஒரு ராஜத்துரோகியை காதலிப்பது குற்றமென்பது உனக்குத் தெரியுமா?

விக்ர: (எழுந்து) மன்னவரால் மன்னிக்கப் பட்டவர்; அமைச்சரால் அவமதிக்கப்படுகிறார். மகாராஜாவின் விருப்பத்தில் மந்திரியார் குறுக்கிடுவதை நான் வெறுக்கிறேன்!

நந்தி: அமைச்சரே! செந்தமிழ்க் காவியத்தால் எனது பெயர் சிறப்புப்பெறவேண்டும்! தமிழன்னையின் பேரருளுக்கும் பாத்திரமாக்வேண்டும்! நடந்து போன பழங்கதையை மறந்துவிடும். கலம்பக ஏற்பாடுகள் விரைந்து நடைபெறட்டும்.

சீலா: (வணங்கி) கட்டளை!

நந்தி; பெண்ணே! தம்பிக்கு என் மன்னிப்பைச் சொல்! கலம்பகம் அரங்கேற்றம் செய்யும் மகத்தான ஏற்பாடுகளையும் சொல்!

வித்யா: உத்தரவு மகாராஜா!

[சபை கலைதல்]



## காட்சி 40.

இடம்: பாதாளச்சிறை.

காலம்: பிற்பகல்

[சிறைக்குள்ளிருக்கும் மகாராணியும், பார்க்க வந்த சீலாதித்தரும்]

சங்கா: (பதறி) வஞ்சகம் விரிந்த மாய வலையிலே விழுந்தாரா மன்னவர்? தடுக்க முடியவில்லையா தார்வேந்தரை?

சீலா: முயன்றேன் மகாராணி! மன்னவரின் தமிழ் ஆர்வமும், சேனுபதியின் குறுக்கீடும் சேர்ந்து சிதைத்துவிட்டன என் முயற்சியை!

சங்கா: சேனுபதி விக்ரமகேசரியுமா உண்மையை உணரவில்லை?

சீலா: ஆம், மகாராணி! அவர் இப்படிப் போவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை.

சங்கா: அமைச்சரே! உண்மைக்குப் போராடும் நிலையில் நீர்தான் இருக்கிறீர்! அந்தச் சதியின் பிடியிலிருந்து எப்படியாவது மீட்க வேண்டுமே மன்னவரை!

சிலா: முயலுகிறேன் தேவி! என் கடைசி மூச்சு உள்ளவரை கடமையை நிறைவேற்றுவேன்; நம்புங்கள்!

சங்க: நம்புகிறேன் அமைச்சரே! மலைபோல் நம்புகிறேன். உம்மைவிட்டால் கதியில்லை......

[மன்னவரும், சேனாபதியும் வருகின்றனர்]

நந்தி: (கோபச் சிரிப்பு) மலைபோல் நம்புகிறேன்! உம்மைவிட்டால் வேறுகதி இல்லை! சண்டாளப் பிண்டங்களா!சிறைச்சாலையை மலர் மஞ்சமாகவா மாற்றுகிறீர்கள்?

சங்கா: (பதைத்து) ஆ! மன்னவரே! என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்?

சிலா: (வருந்தி) மன்னர் பெரும! மன்னிக்க வேண்டும் என்னை!

நந்தி: மன்னிப்பு!கள்ளத்தனமாக தன் மனைவியிடம் கொஞ்சுகிறவனை ஒரு பிச்சைக்காரன்கூட மன்னிக்க மாட்டானே! நன்றிக் கெட்டவனே!நான் மன்னிக்க வேண்டுமா உன்னை?

சிலா: (பதைத்து) அடாத பெரும் பழி!இது அடுக்காது! அநியாயம்! மன்னவா! என்னை நன்கறிந்த தாங்களா இப்படிப் பேசுவது?

சங்கா: பொறுக்கமுடியாத அபாண்டத்தைப் போடவேண்டாம் எங்கள் தலையில்; நொந்து இடக்கிறேன் சுவாமி! வெந்த புண்ணிலே வேலிடாதீர்கள!

நந்தி: (சிரித்து) நொந்து இடக்கிருயோ? ஏன்? காதலனை கட்டித்தழுவ சிறைச்சாலை குறுக்கிடுகின்றதோ? சிறுக்கி!

விக்ர கள்ளச் சாவிகூட வைத்திருப்பான் காதகன்!

நந்தி: மகாராணியின் காதலல்லவோ? எதைத்தான் செய்யக் கூடாது?

நிருப: (முன்வந்து) அப்பா! நேர்மை தவருத என் தாய்மீதா இத்தகைய நிந்தை! உங்கள் கொடுமைக்கு முடிவே கிடையாதா? கரமிழந்த மாதாவின மேல் கற்பிழந்தவள் என்ற பழியை வேறு சுமத்துகின்றீர்?

நந்தி: கண்களால் கண்டதைத்தானடா சொல்லுகிறேன் காவாலிப்பயலே!

நிருப: எதையப்பா கண்டு வீட்டீர்கள், இங்கு? என்ன விபரீதம் நடந்து விட்டது? நெஞ்சிலே நஞ்சு; பார்வையிலே குரூடு பாய்ந்துவிட்டது! நீதியை பரிபாலிக்கும் மன்னவரா நீர்? பகுத்தறிவு இழந்த பாவி! கொதிக்கிறதே என் இரத்தம்! இன்னொரு முறை என் தாயைக் குறை சொன்னால் நறுக்கி விடுவேன் நாக்கை!

நந்தி: வெட்கங்கெட்ட வீராப்பு! விபசாரி பெற்ற வீணைப்பயலே! தூ! போடா நாயே!

[காறித்துப்புகிறார்]

நிருப: (ஆத்திரமும் அழுகையுமாய் கதவை உலுக்கி) ஆ! அம்மா! வாளெங்கே? என் வல்லமை எங்கே? தடந்தோளெங்கே? தன்மானமெங்கே? ஒழிந்ததம்மா எல்லாம் ஒழிந்தது! இந்தக் கொடிய சொல்லைக்கேட்கவொபா றுலைமபொறுமையென்று புழுங்கிக் கிடந்தோம், இரும்புக் கம்பிக்குள்? ஒழுக்கத்தின் உயிர் நாடியான உத்தமியைப் பழித்த வாய் புழுக்க வேண்டாமா? என் வீரத்தாயை விபசாரி என்ற வீணனின் வாய் வேக வேண்டாமா தீயில்! விபரீதம் தாயே, விபரீதம்! ஐயோ! என்னால் பொறுக்க முடியவில்லையே! அம்மா! அம்மா! அம்மா!

[கதறியவண்ணம் தாயின் காலில் விழுந்து புரளுகிறான]

சீலா: (சினந்து) மன்னவ! சேனாதிபதி கொடுத்த விஷம் உம் தலைக்கேறிவிட்டது! சிந்தை குழம்பி விட்டது! வஞ்சகப் பயிருக்கு இப்படியா எருவாக வேண்டும் உமது அறிவும் ஆற்றலும்? தவறு! மிகப்பெரிய தவறு செய்கிறீர்!

நந்தி: தவறு! யோக்கிய சிகாமணியே! நள்ளிரவிலே கணிகையின் வீட்டிலே காவலன் நுழைவது

தவறு! யாருமறியாமல் மந்திரியார் இப்படி மகாராணியை சந்திப்பதற்கு என்ன பெயரடா; என்ன பெயர்?

சீலா: தவறுதான்! இதைச் செய்தவன் நான்; என்னை தண்டியுங்கள்! கற்பின் சிகரமான தேவியாரின் நெஞ்சிலே பெரும நெருப்பைக் கொட்ட வேண்டாம! தியாகத்தின் சின்னத்தை, தாய்மையின வடிவத்தை இப்படிச் சித்திரவதை செய்ய வேண்டாம!

விக்ர: பறிகொடுத்தவன் ஏமாந்தால், திருடன் தர்ம நெறியும போதிப்பான் மகாராஜா!

சீலா; விக்ரமகேசரி! கெட்டிக்காரன் புளுகு எட்டு காளைக்குததான்; வஞ்சகம் வாழ்ந்ததில்லை நெடுங்காலம்!

விக்ர: இது உமது கெடுங்காலம்; மன்னிக்க முடியாத துரோகம்! மகாராஜாவின பெருந்தனமை இதுவரை உன்னை வாழ விட்டிருக்கிறது.

நந்தி: இனிப் பொறுக்க மாட்டேன, அவகேட்டினை! களங்கம் களங்கம்! என் குலப்பெருமைக்கே களங்கம! துரோகி!

[வாளை உருவி சீலாதித்தனை வெட்டப் போகிறார்]

சங்கா: (சினந்து) நிறுத்துங்கள்! குலப்பெருமைக்குக் களங்கம் யார்? நானுமல்ல, அமைச்சருமல்ல; நினைத்துப்பாருங்கள்! நெஞ்சிலே கை வைத்துச்சொல்லுங்கள்! நாட்டை அந்நியருக்குக்காட்டிக் கொடுத்தவர் களங்கமா? பகைவனை வெல்லத் தக்க சமயத்தில் தகவல் கொடுப்பவர் களங்கமா? கலையென்றும், பக்தியென்றும் கலகம் விளைத்தவர் களங்கமா? அறமென்றும், அன்பென்றும் அதனைத் திருத்தியவர் களங்கமா? யாருக்கு யார் களங்கம்?

நந்தி; பழங்கதை பேசாதே!

சங்க: புதியகதை மன்னவரே! இது புதிய கதை! சிங்காசனத்தைக் கவர சதித் திட்டமிட்டவருக்கு சிங்காரமேடை! சதியைக் குலைத்து உரிமையைக் காத்தவர்க்குச் சித்ரவதை! கடித்துச் கொல்ல வந்த பாயபுக்குப் புகழ்மாலை! தடுத்துப் போராடிய கிளிக்கு சிறைச்சாலை! இதுவா நேர்மை? இதுவா தாமம்? இதுவா அறம்வழுவா ஆட்சிமுறை?

நந்தி: எல்லாம் தெரியுமடி எனக்கு! நல்லவன் என் தம்பி! பொல்லாத நீதான் போக்குகிறாய் என் மானத்தை! சண்டாளி! சாகசக்காரி!

சங்கா: (பதைத்து) சொல்லால் அடித்துக் கொல்லாதீர்கள் நாதா! சதியும் பதியுமாக இவ்வளவு காலம் வாழ்ந்தோமே, என்ன குற்றம், என்ன சாகசத்தைக் கண்டீர்கள் என்னிடம்? காபாலிகள் சொல்லைக்கேட்டுக்கரத்தை வெட்டினீர்கள்,

கடிந்து கொண்டேனு? குடிக்கொருமகனுய்ப் பிறந்த செல்வனைச்சிறைப்படுத்தினீர்கள்; சீறிவிழுந்தேனு? நீங்கள் வஞ்சகரின் மாயவலையில் விழக்கூடா தென்று சஞ்சலப்பட்டேன், அமைச்சரிடம்! இது சாகசமா? சண்டாளமா? சதுரங்கம் ஆடி வென்ற போது 'பகைமை வெல்வாய்' என்ற மதிப்புரை! இப்போது பதித்துரோகி என்ற பழிப்பா? சிற்றப் பனிடம் வாதிட்டு வென்றபோது 'செல்வன் சமர்த் தன்' என்ற மதிப்புரை! நீதிகேட்டபோது நிந்தனைக் குரியவன், நீசன் என்ற பழிப்புரையா? தம்பியின் சதித்திட்டம் கண்டறிந்து தகவல் தந்தபோது அமைச்சர் அறிவுப்பெட்டகம்! அறம்காக்கப்பரிந்து வந்தபோது அவர் ஆகாதவரா? நன்றி கெட்டவரா? பதிக்குத்துரோகமிழைத்தபாவி, துர்நடத்தைக்காரி என்று நெஞ்சாரக் கருதினுல் கொன்று விடுங்கள் என்னை! ஆனுல், நேர்மைக்குப் பரிந்துவந்த மந்திரி யாரை வதைத்து வளைக்கவேண்டாம செங்கோலை; குலைக்கவேண்டாம அரச தர்மத்தை! வேண்டாம்! வேண்டாம்!

நந்தி; (வாளை உறையிலிட்டு) பாவிகள்! இப் போது இவர்கள் உடலைத்தீண்டி கறைப்பட வேண் டாம் எனது வாள்! சேனுபதியாரே! கலம்பகம் அரங்கேற்றும் மகிழ்ச்சி வேளையில் கொலைகள் கூடாது! இவர்களை தண்டிப்பதை பிறகு வைத்துக் கொள்வோம்! இந்தப்படுமோசக்காரனையும் தள்ளி அடையும் சிறையில!

விக்ர; மகாராஜா! தேளைக் கண்ட பிறகும் பிள்ளைப் பூச்சியென்று விட்டுவிடக் கூடாதே!

நந்தி: பாதகமில்லை; கொடுக்கை நறுக்கி விட்டால் துடுக்கு அடங்கிவிடும்!

விக்ர: கட்டளை!

[சிறைக் கதவைத் திறந்து சீலாசித்தரையும் தள்ளுகிருன் உள்ளே]



## காட்சி.41.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்: பிற்பகல்.

(சந்திரவர்மன், வித்யாவதி, பச்சை இருக்கின்றனர்)

சந்தி: பச்சை! அரசருக்கான கடைசிக் கைங்கர்யம் உன் திருக்கரத்தால் நடைபெற வேண்டும்! துணிச்சலிருக்குமா?

பச்சை: நீங்களும், சேனாதிபதியும் இருக்கறப்போ துணிவுக்கு என்னங்க பஞ்சம்? மகாராஜாவின் தலையைக் கொண்டு வரணுமா? உம்... சொல்லுங்க!

சந்தி: அட பித்துக்குளி! நான் சொல்வதைச் செய்யடா!

பச்சை: சொல்லுங்க!

சந்தி: ஏற்பாட்டின்படி அரங்கேற்றத்தில் ஒவ்வொரு ஆசனமாக மன்னர் உட்காருவார்! நான் பாடுவேன்! கடைசி ஆசனம் என்ன தெரியுமா? சிதை: அதிலே மன்னர் அமருவார். நான் சுவையோடு பாடத் தொடங்குவேன்.(காதருகே ரகசியமாகச் சொல்லி) செய்வாயா?

பச்சை: அந்தச்சந்தேகமே ஓங்களுக்குவேணும்னேன்; எது?

சந்தி: (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்!

வித்யா: சுவாமி! என்ன இதுவெல்லாம்? எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை!

சந்தி: கடலின் விருப்பம் கேட்டா கப்பல் பயணம் போகமுடியும்? உனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக நிறுத்தமுடியுமா காரியத்தை? வித்யாவதி! நமது வாழ்க்கையிலே ஒரு மகத்தான மாற்றம் ஏற்படப் போகிறது! நல்லதோ கெட்டதோ; அதனை ஏற்கச் சித்தமாக இருக்க வேண்டும் நீ!

வித்யா: என்ன சுவாமி அத்தகைய மாற்றம்?

[சேனாதிபதி உற்சாகத்
தோடு வருகிறான்]

சந்தி: அதோ! சேனாதிபதியாரே வந்துவிட்டார்!

விக்ர: வெற்றி! வெற்றிகரமாக முடித்து விட்டேன்! மகாராணியைப் பார்க்கப்போன மந்திரியார் பாதாளச் சிறையிலே அடைக்கப்பட்டு விட்டார்! ஒழிந்தது முட்டுக்கட்டை! சந்திரவர்மரே! இனி மகாராஜாவிடம்நான் வைத்ததுதான் சட்டம்!

சந்தி: சபாஷ்! நன்றுசெய்தீர் சேனாதிபதியாரே! இது தக்க சமையத்தில் செய்த தனிப்

பேருதவி! இனி தவருது நிறைவேறும் நமது திட்டம்! இதற்காக நானளிக்கும் பரிசு என்னவென்று தெரியுமா?

விக்ர: மகாராஜாவின் சித்தம்! என் பாக்கியம்!

சந்தி: (வித்யாவதியின் கரம்பற்றி) சித்திரப் பதுமை, சிங்காரப் பூம்பொழில், வித்தகத்தென்றல் எனது வித்யாவதி; இன்று முதல் உமக்குச் சொந்தம்!

[சேனுதிபதியிடம் கொடுக்கிருன் அவளை. வெடுக்கென்று கையை இழுத்துக்கொள்கிருள் வித்யாவதி]

வித்யா: (சினந்து) சே! சே! கேவலம்! மிகக் கேவலம், சுவாமி! இந்த ஈனச் செயலுக்கு எப்படித்தான் மனம் ஒப்பியது? நெஞ்சாரக் காதலித்தவளைக் கரம்பற்றி மாற்ருனின் பஞ்சணையிலே கொஞ்சவிட வெட்கம் இல்லையா உமக்கு?

சந்தி: காசுக்குப் பாய் விரிக்கும் வேசியிடம் என்னடி வெட்கம்? நீலி! காதல் காதலென்று கதைத்தது போதும்! காதலாவது வெங்காயமாவது! என் விருப்பப்படி நடக்க முடியுமா முடியாதா?

வித்: (வியந்து) ஆங்! நாம் வாழ்ந்த வாழ்வு?

சந்தி: சேர்ந்து வாழ்ந்தோம் இத்தனை நாள், சிறப்பாக! என் சித்தம்போல் நடந்தாய், ஒப்புகிறேன்! இனியும் நீ சிறப்பாக வாழ வேண்டாமா? அதற்காகவே ஒப்படைக்கிறேன் சேனாதிபதியிடம்!

வித்யா: சுவாமி! இது வாழ்வில் மாற்றமல்ல, ஏமாற்றம்! அந்தோ! தாங்கள் கொண்டது போலிக் காதல்தானா? இன்பத்தின் எழில்வடிவே! இசைக் கலையின் சுவைக்கடலே! காதலின் கலையமுதே! என்று கட்டித் தழுவியதெல்லாம் கள்ளத்தனம் தானா? அந்தோ! காதலை மெய்யென்று நம்பி, தங்கள் சதிக்கெல்லாம் உடந்தையாக இருந்தேனே, இந்தச் சண்டாளி! அதற்கெல்லாம் இதுதானா பலன்? இதுதானா பரிசு?

சந்தி: (சினந்து) வித்யாவதி! என் சொற்படி நடக்க முடியுமா? முடியாதா?

வித்யா: (கண்டிப்பாக) முடியாது! நீர் எனது காதலரல்ல; ஆகவே, எனக்குக் கட்டளையிட உமக்கு உரிமை இல்லை!

சந்தி: பல்லவ நாட்டின் முடிசூடும் மன்னனடி நான்! மன்னன்!

வித்யா: துரோகி! சதிகாரா! நீயா மன்னன்? கனவிலும் அது நிறைவேறப்போவதில்லை! உன் சதித்திட்டத்தை வெளிப்படுத்தி ஒழித்துக்கட்டுவேன், இந்த இராஜத் துரோகக் கும்பலை!

[ஓடுகிறாள் வெளியே; சென்று
தடுத்து கூந்தலைப் பற்றி
இழுத்துத் தள்ளுகிறான், சந்
திரவர்மன்]

சந்தி: எங்கேயடி போகிறாய் கள்ளி?

வித்யா: சொல்ல முடியாது!

விக்ர: பிள்ளையாரென்று பிடிக்கக் குரங்காக மாறுகின்றதே! இவள் எப்படி என்னிடம் அடங்குவது? நான் இன்பத்தைப் பெறுவது?

சந்தி: கவலை வேண்டாம் சேனாபதியாரே! இவள் விருப்பப்படியா நாம் விடுவது? ஒப்பினால் இவ்வுலகம்? ஒப்பாவிடில் அவ்வுலகம்! பார்த்துக் கொள்வோம்! நமது காரியம் முடியும்வரை இவள் சிறைக் கைதியாக இருக்கட்டும், இந்த அறைக்குளளே!

[கழுத்தைப்பிடித்து அறைக்குள்
தள்ளிச் செல்லுகிறான்]

வித்யா: ஐயோ! சண்டாளா! விடு என்னை! பாவி! விட்டுவிடு!

[வேகமாகத் தள்ளி கதவை
சாத்துகிறான். "ஐயோ"
என்று அலறியவண்ணம்
விழுகிறாள் ... தி.
கதவைப் பூ... யபின்

சந்தி: ஒழிந்தது பீடை! எதிர்பாராதுவிழுந்த கடைசி முட்டுக்கட்டையையும் சமாளித்து விட டோம்! சேனாபதியாரே! நம் வழியில் இனி எதுவும் குறுக்கிட முடியாது! வாரும், துவக்குவோம் நம் காரியத்தை!

[வேகமாகச் செல்லுகின்றனர் வெளியே)

## காட்சி 42.

இடம்: அரங்கமேடை.

காலம்: முற்பகல்.

[பத்து பச்சைப் பந்தல்கள். பலவகை ஆசனங்கள். மன்னன், சேனாதிபதி, காவலர், குடிமக்கள் இருக்கின்றனர். மேடை மீது வீற்றிருக்கிறான் சந்திரவர்மன்]

விக்ர: சபையோர்களே! நந்திக் கலம்பகம் அரங்கேற்றத் துவக்கம்! முதற் பந்தல்! மன்னர் இருக்க வேண்டிய முதல் ஆசனம் முக்காலி! பாட்டினைப் பாடுவார் பாவலர் சந்திரவர்மன்!

[மன்னன் அவ்வாறே சென்று அமர, பாடுகிறான் சந்திரவர்மன்]

சந்தி: (விருத்தம்) 1.

மண்டலமாய் அம்பரமாய்
மாருதமாய் வார்புனலாய்!
ஒண்சுடராய் ஒளியென்றும்
ஒருருவாய் மூனுருவாய்!
மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின்
திகழ் வடிவோ!
செவ்வடிவோ பொன்வடிவோ
சிவனே நின் திருமேனி!

நந்தி: வாழ்க தமிழ்!

விக்ர: இரண்டாவது பந்தல்! ஆசனம்; கட்டில்!

சந்தி: (விருத்தம்) 2.

ஒருபெருங் கடவுள் நிற்பரவு மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்!
பலலவர் தோன்றல் பைந்தார் நந்தி!
வடவரையளவும் தென்பொதியளவும்
விடையுடன் மங்கல விசயமும் நடப்ப
ஒரு பெருந்தனிக்குடை நிழல்
அரசு வீற்றிருக்க அருளுக எனவே!

நந்தி: ஆஃகா! என்ன சுவை! என்ன சுவை!

விக்ர: மூன்றாவது ஆசனம்: பாய்!

[பாயில் மன்னர் அமர]

சந்தி: (பாட்டு) 3.

ஒடரிக்கண்மட நல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரிகப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அழகுமலர் குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப்படை நந்திகுவலய மார்த் தாண்டன்
காடவர்க்குமுன் தோன்றல் வைகவேலைப்பாடி
காஞ்சிப்புரமும்பாடி ஆடாமோ ஊசல்!

நந்தி: அற்புதம்! ஆனந்தம்! ஆனந்தம்!

## காட்சி 43.

இடம்: தெரு.

காலம்: பிற்பகல்

[ஒரு இசைப் புலவரும், நண்பரும் சந்திக்கின்றனர், எதிரெதிரே வந்து]

நண்பன்: (பரபரப்போடு) இசைப்பாணரே! சங்கதி தெரியுமா ஒமக்கு? பாட்டுன்னு பாட்டு. அதெல்லவா பாட்டு! அதெல்லவா பாட்டு! கேட்டுக் கேட்டு ஆத்துப்போருரு: ஆனந்தத்தாலே பொங்கி போருரே மகாராசா! நீருந்தான் பாடுறீர் மெனக் குட்டுப்போய், எம்பாட்டு செம்பாட்டுன்னு!

இசைப்: அட நிப்பாட்டுமய்யா! எந்தப் பாட்டை சொல்றீர்? எங்கேநடக்குது இசையரங்கு? யாரய்யா பாடுருங்க?

நண்பர்: அஃபூ! இவ்வளவுதானு? அதுதாய்யா நந்திக் கலம்பகம்! நாடோடி சந்திரவர்மன் நம்ம ராசா மேலே கலம்பகம் பாடி அரங்கேத்தம் செய் யருரே, அதைப் பாக்கவும், கேக்கவும் கொடுத்து வைக்கணுமே!

இசைப்: (வியந்து) அடெ! கலம்பகங்கிறது பாட்டுத்தானு?

நண்பர்: சரிதான்; கலம்பகமென்ன, பெரிய ஊரென்று நெனச்சீரோ? போமய்யா போய்ப் பாரும்! இசையும், தமிழும், ராகமும், தாளமும் அங்கே கொஞ்சிக் கொலாவுதய்யா! நாகப்பாம்பிலே ரத்தினம் போலே, சதிகாரச் சந்திரவர்மர் கிட்டே தமிழ்ப்புலமை பளிச்சுபளிச்சுன்னு வெளிச் சங்காட்டுதே! ஐயோ! போய்ப் பாருமய்யா அந்த அற்புதத்தை!

இசைப்: (வருந்தி) ஐயயோ! எனக்கு வழி தெரியாதே! எப்படிப் போறது நண்பரே? அது பார்க்கச் சலிக்காத காட்சிதானே? கேட்கத் திகட்டாத கானந்தானே?

நண்பர்: ஆமா! ஆமா! அதிலே என்ன சந்தேகம்? ஆயிரந்தடவை பார்க்கலாம்! ஆயிரந்தடவை கேட்கலாம்!

இசைப்: அப்படின்னா: இன்னொரு தடவை என்னோடு பார்க்க வாரும் போகலாம். வாரும்! வாரும்!

[பிடித்து இழுத்துக்கொண்டு ஓடுகிறார் நண்பரை]



## காட்சி 44.

இடம்: வித்யாவதி வீடு.

காலம்; பிற்பகல்.

[அறைக்குள் அடைப்பட்டவள் கதவைத் தட்டி கடித்தவாறு கூக்குரலிடுகிருள்]

வித்யா: (கடித்து) ஐயோ! கதவைத் திறங்களேன்! என் கதறல் யார் செவிக்கும் எட்டவில்லையா? உலகமே செவிடாகி விட்டதா? ஐயோ! கதவைத் திறப்பார் யாருமில்லையா? மகாராஜாவுக்கு ஆபத்து! ஆபத்து! காப்பாற்றுங்களேன்!

[முல்லை ஓடி வருகிருள். வித்யாவதியின் அலறல் கேட்டு. இங்குமங்கும் தேடுகிருள்]

வித்யா: நாசக்காரர்கள் ஒழித்துவிடுவார்களே மன்னவரை! தடுப்பாரில்லையா? மன்னரைக் காப்பாற்றுவாரில்லையா? ஐயகோ, கதவை திறவுங்களேன்! ஐயோ! கலம்பக அரங்கம் கொலைக்களமாயிடுமே? திறங்களேன்! திறங்களேன் யாரும் வந்து திறக்க மாட்டீர்களா? ஐயயோ!

[ஓடிச்சென்று பூட்டைத் திறந்து, அறைக்கதவைத் திறக்கிருள் முல்லை, அலங்கோலமாக வெளியே பாய்ந்து ருவகிருள் வித்தியாவதி]

**வித்யா:** (ஆவேசமாக) முல்லை! என்னருமைத் தோழி! கடைசியாக நீயாவது வந்து விடுதலை யளித்தாயே எனக்கு! வா! இப்போதே சென்று கலம்பக அரங்கேற்றத்தைத தடுக்க வேண்டும்! சதிகாரர்களின் துரோக வலையைக் கிழித்தெறிந்து வஞ்சகத்தை வெளிப்படுத்த வேண்டும்! வா! வா! ஓடி வா!

[இருவரும் ஓடுகின்றனர்]

## காட்சி 45.

இடம்: பாதாளச்சிறை.

காலம்: பிற்பகல்.

[சீலாதித்தர், சங்காதேவி, நிருபதுங்கன் மூவரும் உள்ளே பதைத்துக் கொண்டிருக்க; வெளியே இரு காவலர் உலாவுகின்றனர்]

காவ 1: அண்ணே! கொஞ்சம் இருண்ணே. தண்ணி குடிச்சிட்டு வர்றேண்ணே!

காவ 2: தண்ணியா? என்ன தண்ணி?

காவ 1: அய்ய! நீ ஒண்ணு; தாகமா இருக்கண்ணே!

காவ 2: சரி, சரி, நான் இருக்கிறேன். போயிட்டு வா தம்பி!

[சீலாதித்தர் கதவருகே வந்து நிற்கிறார். காவலன் ஒரு பக்கம் ஈட்டியை வைத்து விட்டுப் போகிறான்]

சீலா: (பதறி) ஐயோ! ஐயோ! பாம்பு! பாம்பு! கடிக்க வருதே! அடிக்க ஒண்ணுமில்லையே! ஐயயோ! நல்லபாம்பு! நாகப்பாம்பு! கடிக்கவருதே!

காவ: 2: (பதறி அருகே வந்து) பாம்பா! எங்கே? எங்கே? எங்கே?

சீலா: அதோ! அந்த மூலையிலே படமெடுத்து சீறுகிறதே! படுபாவி! கதவைதிற! கடிக்கவரும் பாம்பை அடித்துக்கொல்லு! சாகடி! ஐயோ! ஓடிவா! ஓடிவா!

[அவசரமாகபூட்டைத்திறந்து, கதவைத் திறந்து உள்ளே நுழைகிருன். அமைச்சர் அவன் மீது பாய்கிருர்! கழுத்தைப் பிடித்து நெறித்துக் கீழே தள்ளுகிருர். வாயில் துணியை அடைக்கிருர். கை கால்களைக் கட்டுகிருர். வெளியே வருகின்றனர் சங்காதேவியும், நிருபதுங்கனும். காவலன் வைத்துச் சென்ற ஈட்டியை எடுத்துக் கொள்கிருன் இளவரசன், அலட்சியமாக எதையோ பாடிக்கொண்டு வருகிருன் வெளியேசென்றவன். இவர்களைப்பார்த்து "ஆ" வென்று வாய்பிளந்து நிற்கின்ருன். எதிர்பாராமல் அவன் தலையில் ஓங்கி அடிக்கிருன் நிருபதுங்கன். அடிமேல் அடி

அடிக்க "ஐயோ! அம்மா!"
என்று விழுகிறான் காவலன்.
சிலாதித்தர் அவசரமாக
வெளியே வருகிறார்]

சிலா: நன்று! நன்று செய்தீர் இளவரசே! வாருங்கள். இனி அரைக்கணமும் இங்கு தாமதிக்கக் கூடாது!

சங்கா: (பதைத்து) ஐயோ! கலம்பக அரங்கேற்றம், இன்னேரம் நடந்து கொண்டிருக்குமே! துரோகிகள் என்ன செய்கிறார்களோ தெரியவில்லையே? அமைச்சரே! வாருங்கள்! முறியடிக்க வேண்டும் மூர்க்கர்களின் சதித்திட்டத்தை! வாருங்கள்! வாருங்கள்!

[சிலாதித்தர் முன்னால் ஓட,
மகாராணியும், இளவரசரும் தொடருகின்றனர்]



## காட்சி 46.

இடம்: தெரு

காலம்: பிற்பகல்.

அரங்கேற்றவிழாவுக்குமாலை, சந்தனம், தட்டு, எடுத்துக் கொண்டு சில ஆடவரும். பெண்டிரும் செல்லுகின்றனர். சங்காதேவி, சீலாதித்தர், நிருபதுங்கன் மூவரும் எதிரே ஓடிவருகின்றனர்]

சங்கா: யார் நீங்கள்? எங்கே போகிறீர்கள்?

ஒருத்தி: (வியந்து) ஆங்! மகாராணி! நீங்க விடுதலை ஆயிட்டீங்களா? நாங்க கலம்பக அரங்கேற்றம் பார்க்கப்போறோம்

ஒருவன்: ரொம்ப விசேஷமான ஏற்பாடாம்!

சங்கா: விபரீதமான ஏற்பாடு என்று சொல்லுங்கள். நல்லவர்களே! கலம்பக அரங்கேற்றத்தின் பெயரால் மன்னரைக்கொன்றுவிட சதி செய்கிறார்கள், சண்டாளர்கள்! தடுக்கவேண்டும் அதனை! வாருங்கள் என்னோடு! மன்னர் பெருமானைக் காப்பாற்றுவோம்! வாருங்கள்! வாருங்கள்!

மற்றவன்: சதியா? அப்ப இது சந்திரவர்மன் வேலைதான் விடக்கூடாது. வாங்க! வாங்க!

சங்கா: சதிகாரர் ஒழிக!

எல்லோ: சதிகாரர் ஒழிக!

[எல்லோரும் மகாராணி
யின்பின் ஓடுகின்றனர்,
கோஷமிட்டவண்ணம்]

# காட்சி 47.

இடம்: அரங்கமேடை.

காலம்; மாலை.

[நடந்து கொண்டிருக்கிறது
அரங்கேற்றம்]

விக்ர: ஒன்பதாவது ஆசனம் திண்ணை!

சந்தி: (பாட்டு) 4.

மலர்க்குழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்!
வரிக்குயில்கள் மாவில் இளந்தளிர் கோதும் காலம்!
சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும்
காலம்!
தீவினை ஏற்கத் தென்றல் தீ வீசும் காலம்!
பலர்க்கெல்லாம் கோனந்தி பன்மாடக்கச்சில்
பனிக்கண்ணுர் பருமுத்தம் பார்த்தாடும் காலம்!
மலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும்
காலம்!
அகன்று போனவர் நம்மை அயர்த்துவிட்ட காலம்!

நந்தி: பாக்யம்! ஆஃகா! பெறற்கரியபாக்யம்! மகா பாக்யம்!

விக்ர: பத்தாவது ஆசனம் சிதை!

சந்தி: (விருத்தம்) 5.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்

வையகம் அடைந்ததுன் கீர்த்தி!
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்!
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்!

[பாட்டு முடியுமுன்னரே சிதையில் நெருப்புபற்று கிறது! பார்த்துப் பதைக் கின்றனர் மக்கள்]

ஒருவ: ஆங்! நெருப்பு! நெருப்பு!

மற்ற: சிதை பற்றி எரிகிறதே! ஐயோ! மகாராஜா! மகாராஜாவுக்கு ஆபத்து!

விக்ர: (எழுந்து கடுமையாக) மூடுங்கள் வாயை! அரங்கேற்றத்தின் புனிதமறியாத புல்லர்களே! கூச்சலிடாதீர்கள்!

[பாடிக்கொண்டே இருக்கிறான் சந்திரவர்மன்]

தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி!
யானுமென் கலியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்தி நாயகனே!

மக்க: ஐயயோ! மகாராஜாவைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!

ஒருவ: ஐயயோ! வேகின்றதே வேந்தரின் உடல்! தீயை அணைப்போம் வாருங்கள்!

மற்றவ: வாருங்கள்! வாருங்கள்! ஓடி வாருங்கள்!

[எல்லோரும் கும்பலாக சிதையை நெருங்க முயல]

சந்தி: (எழுந்து, ஓடிவந்து தடுத்து) நில்லுங்கள்! உங்களுக்கு ஆண்டவனிடம் பக்தியிருந்தால் பயமிருந்தால் இப்பால் நகரக்கூடாது! சிதையை நெருங்கக்கூடாது! தமிழ்த்தாயின் மகிமையைநாசமாக்கக்கூடாது! பைந்தமிழ்ப்பாடல்பெற்றுப் பரமனின் அருளைப்பெற்றார் மன்னவர்! இறப்பிலே இறவாத சிறப்படைந்தார் என் அண்ணன்! எவருக்குக் கிடைக்கும் இந்த பாக்யம்? யார் பெறுவார் இத்தகைய கீர்த்தி? வாழ்த்துங்கள் மன்னவரை! போற்றுங்கள் இந்தப் புனித நிகழ்ச்சியை!

விக்ர: அமரப் புகழ்பெற்றார் நந்திவர்மன்! ஆட்சி உரிமை பெற்றார் சந்திரவர்மன்! வரவேற்போம்! வாழ்த்துவோம் புதிய மன்னவரை! சந்திரவர்ம பல்லவ மகாராஜா! வாழ்க! வாழ்க! நந்தி நாயகம் வாழ்க! மன்னர்பெருமான் வாழ்க!

சந்திர: வாழ்க பல்லவர் குலப்பெருமை! செந்தமிழ்க் கடவுள் சிவபெருமானின் அருள் பெற்றார்! சிறப்போடு அவர் திருவடி நிழலைச்சென்றடைந்தார் மன்னவர்! ஆளத்தகுதி உள்ளவன் நான் என்பதை அண்ணன் நன்கு அறிவார்! ஆகவே

அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டார்! எனக்குமன்னிப்பு அளித்தார்! பொறுமைப் பிண்டங்களான மகாராணியையும், மகனையும்; அவர் களுக்குப் பரிந்துபேசிய அமைச்சரையும் மூன் கூட்டியே சிறையில் அடைத்துவிட்டார்! பொதுமக் களே! பிரதானிகளே! இன்றுமுதல் நானே பல்லவ மண்டலத்தை அணிசெய்யப்போகும் மணிமுடி மன்னன்! சேனாதிபதி விக்ரம கேசரியே எனது நல்லமைச்சர்! இதனை ஒப்பவேண்டும் நீங்கள்!

விக்ர: மனமுவந்து ஒப்புகிறோம் மன்னவரே! வாருங்கள். இப்பொழுதே அரசவையைக் கூட்டி மகுடாபிசேகத்தை முடிப்போம்!

சிலர்: ஐயோ! இதுவென்ன அக்ரமம்?

சிலர்: மன்னர் வாழ்க! சந்திரவர்ம சக்ர வர்த்தி வாழ்க!

[இச்சமயம் சங்காதேவி, நிருபதுங்கன், சீலா தித்தர் வருகின்றனர்]

நிருப: நில்! வஞ்சகத்தீயிலே என் தந்தையை வேகடித்த செந்தமிழ்ப் புலவா! எங்கே போகிறாய்?

சந்தி: ஆ! நிருபதுங்கன்! மகாராணி! அமைச் சர்! பாவிகளே! சிறையிலிருந்து எப்படி வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்?

நிருப: எதற்காக வந்தோம்? வஞ்சகனே! உன் துரோக வாழ்வை முடிக்கத்தான் வந்தோம்!

[சந்திரவர்மன் வாள் எடுக்கு முன், தனது வாளை அவன் மார்பில் பாய்ச்சுகிறான் நிருபதுங்கன்]

சந்தி: ஆ! சேனாதிபதி! (விழுந்து) ஐயோ! ஆ! ஒழிந்தேன்! விக்ரமகேசரி! ஐயோ!

நிருப: வீரர்களே! கைது செய்யுங்கள் சேனாதிபதியை!

விக்ர: (அஞ்சி) இளவரசே! நான் குற்றமற்றவன்! சூழ்ச்சியொன்றும் எனக்குத்தெரியாது! நடந்ததை விபரமாகச் சொல்லிவிடுகிறேன்! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள் என்னை!

[மண்டியிடுகிறான். அதே நேரத்தில் கையிலே தீவட்டி வைத்திருக்கும் பச்சையைக் கழுத்தைப் பிடித்துத்தள்ளியவண்ணம், தலைவிரி கோலமாக ஓடிவருகிறாள் வித்யாவதி]

வித்யா: (ஆத்திரத்தோடு) துரோகி! இதோ மற்றொரு துரோகி! அவனும் துரோகி! இவனும்

துரோகி! எல்லோரும் துரோகிகள்! வாழவிடவேண்டாம் அந்தவஞ்சகனை. இதோ, மன்னரின் சிதைக்குத் தீயிட்ட மாபாவி! இந்தப்பாவியின் கையிலே தீவட்டியைத்தந்தவன் இந்த சேனாதிபதி! இவர்களுக்குத் தலைவன் சந்திரவர்மன்!

மகா: (வியந்து) ஆங்! கணிகை வித்யாவதியா? நீயா இந்தக்கோலத்தில்?

வித்: ஆம் மகாராணி! சந்திரவர்மனை காதலித்த சண்டாளி! ஏய்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் பலியாகிவிட்ட படுபாவி! இவர்களின் சதிச்செயலை தடுக்கமுயன்றஎன்னை சிறைவைத்தார்கள்! மன்னவரைக்காக்கப்பெரும்பாடுபட்டுதப்பிஓடிவந்தேன். ஐயோ! நேரம் தாழ்ந்துவிட்டது மகாராணி! தாழ்ந்துவிட்டது! மன்னியுங்கள். தீரமற்ற சேனாதிபதி, மானமற்ற இந்த தீவட்டி மடையன்; இவர்களைவாழவிடுவது நாட்டிற்கே ஆபத்து! கொல்லுங்கள்! வெட்டுங்கள்! புதையுங்கள் இந்த துரோகிகளை!

நிருப: உம்......! வீரர்களே! சிறைப்படுத்துங்கள் சேனாதிபதியையும், இந்தக் கயவனையும்.

சீலா: கொண்டு போங்கள்! சிறைச்சாலைக்கு

[இழுத்துப் போகின்றனர்]

வித்: (பைத்தியம்போல் சிரித்து) ஃகையா! ஒழிந்தாங்க வஞ்சகப் பிடாரிங்க! (சந்திரவர்மனின்

பிணத்தைப்பார்த்து) ஆ! சந்திரவர்ம பல்லவ மகாராஜா! இன்பத்தின் எழில்வடிவே! இசைக்கலையின் சுவைக்கடலே! வனப்பு மலைச்சிகரமே! காதலின் கலையமுதே! (சிரித்து) காதலாவது, வெங்காயமாவது! நியாயமாவது, நேர்மையாவது! ஆங்! ஐயயோ! நான் மோசம் போய்விட்டேனே! நான் உயிராகக் காதலித்த கலைவேந்தர், உலகைத் துறந்தாரா? என் வாழ்வுக்குச் சுவைதந்த வண்ணத் தமிழ்ப் புலவர் மண்ணிலே சாய்ந்து விட்டாரா? ஆ! ஐயோ! .........

[தடாலென்று சந்திரவர்மன் மீது விழுகிருள் வித்யாவதி உயிர்த்துறக்கிருள்! பாட்டுக் குரல் கேட்கிறது. கணிகையின் தியாக வாழ்வும், நந்திவர்மனின் தமிழ்ப்பற்றும், அதற்காக உயிர்நீத்த அரிய பண்பும் குறித்து புலவர் பெருந்தேவஞர் பாடியவண்ணம் அங்கு வருகிருர். பாட்டு முடிந்து]

சங்கா: (மனம் பொங்கி) புலவர் பெரும! பார்த்தீர்களா என் மன்னவரின் முடிவை? கேட்டீர்களா இங்கு நடைபெற்ற செயல்களை?

பெருந்: மகாராணி! எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன், நான்! எது நடப்பினும நன்மைக்கே! அமைதி! அமைதி கொள்ளுங்கள்!

சங்கா: ஐயஃகோ! களம் பல கண்ட மாவீரர், மூவேந்தராலும் வெல்லமுடியாத ஈடற்ற தமிழ் மறவர், என் அருமை மணாளர், துரோகத்தின் தீயிலே வெந்து சாம்பலாகிவிட்டாரே! காப்பதற்கு ஓடிவந்த எங்களைப் பார்ப்பதற்கும் இல்லாமல் மறைந்து விட்டாரே! கலம்பக அரங்கேற்றம் காஞ் சிக்கோர் களங்கமாக முடிந்துவிட்டதே! அந்தோ. வாழவைக்கும் வண்ணப் பசுந்தமிழை மாளவைக் கும் சதிக்கருவியாக்கிய இந்தச் சண்டாளத்தை மறந்திடுமோ உலகம்! மறந்திடுவாரோ செந்தமிழ்க் காவலர்கள்?

பெருந்: மன்னவர், எவரும் எட்ட முடியாத பெருநிலைபெற்றுவிட்டார்! மகாராணி! உயிர்ப்பற்றி னும் மொழிப்பற்றினைப் பெரிதாக்கினர்! தமிழுக் குத் தன் வாழ்வினையே அர்ப்பணித்து, இலக்கியத் திலே ஒரு பொன்னேடு சேர்த்துவிட்டார்! தமிழக வரலாற்றிலே எவரும் பெறுதர்க்கரிய தனியிடம் பெற்றுவிட்டார் தார்வேந்தர்!

சங்: புகழிடம் பெற்று மறைந்தார் மன்னர்; இனி எங்கள் நிலை? எங்கள் வாழ்வுக்குப் பாதுகாப் புத் தருபவர் யார்?

பெரு: இந்த நாடு! இந்த நாட்டின் மக்கள் மன்னவரின் மைந்தன் சிங்கக்குட்டி நிருபதுங்கனை சிரந்தாழ்த்திவரவேற்கின்றனர், சிம்மாசனத்துக்கு! மனிதகுல மாணிக்கத்தின் மங்காத பரம்பரை மணிமுடி புனைந்திட வேண்டும்! இளவரசரின் செங்

கோலுக்குச் சிறப்பொளியாக, ஆற்றலுக்கு அடிப்படையாக விளங்கவேண்டும் தாங்கள்! விரையுங்கள்! விரையுங்கள்! நடைபெறவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள்.

[பாடியவண்ணம் போகிறார் புலவர் பெருந்தேவனார்! சங்காதேவியும், நிருபதுங்கனும், சீலாதித்தரும் அரண்மனைக்கு போகின்றனர். மக்கள் தொடருகின்றனர்]

தமிழ்
வாழ்க!

# ஒரே முத்தம்

மு. கருணாநிதி



தென்றல் நூற் பதிப்புக் கழகம்

ஆசிரியர், ப. கண்ணனார் தீட்டிய
அரிய தமிழ் நாடகங்கள்.

| | |
|---|---|
| நந்திவர்மன் | 3—00 |
| மானமறவன் | 3—00 |
| பகைமை வென்றான் | 3—00 |
| பாண்டிய மகுடம் | 3—00 |
| தமிழ் வாழத் தலை கொடுத்தான் | 2—50 |
| புரட்சிப் பாடகன் | 1—50 |
| வீரவாலி | 1 - 25 |
| கன்னியின் சபதம் | 0—50 |
| மின்னொளி | 0—37 |

எம்மிடம் கிடைக்கும்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்.
பெரியக் கடைவீதி,
சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

செந்தமிழ் அச்சகம், சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.